விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 11 திங்கட்கிழமை (27.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 343

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்ததினம் நேற்று எழுச்சியுடன் கொண்டாட்டம்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும் தமிழ்த் தேசிய தலைவர் என உலகத் தமிழர்களால் போற்றப்படுபவருமான வேலுப்பிள்ளை பிரபாகரனது 63-வது பிறந்த தின நிகழ்வுகள் நேற்றைய தினம் தமிழர் தேசமெங்கும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டுள்ளது.

விசேடமாக வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அவரது வீட்டில் நேற்று நள்ளிரவு சரியாக 12 மணியளவில் தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவையை சேர்ந்தோரால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டுள்ளது.

இது தவிர வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டிலும் அவரது வீட்டில் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இந்த பிறந்த நாள் நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடைபெற்றன.

இதே போன்று யாழ்.பல்கலைக்கழகத்திலும் மாணவர்களின் ஏற்பாட்டில் பிறந்த தின நிகழ்வுகள் நடைபெற்றன. சில பிரத்தியேகமான இடங்களிலும், கிழக்கிலும் இந்த பிறந்த நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தலைவர் பிரபாகரனது வீடு இராணுவத்தினரால் உடைக்கப்பட்டுள்ள நிலையில், அவரது வீடு அமைந்திருந்த காணியில் மரம் நடப்பட்டு, வீட்டுக்கு முன்னால் கேக் வைக்கப்பட்டு வெட்டப்பட்டது.

இதன் போது வல்வெட்டித்துறையை சேர்ந்த இளைஞர்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்தனர். 24

# இன்று மாவீரர் நாள்

## தாயகத்திலும் புலத்திலும் உணர்வுடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள்

**(யாழ்ப்பாணம்) தமிழ் மக்களது விடிவு ஒன்றையே இலட்சியமாக கொண்டு தம் உயிர்களை தியாகம் செய்து களமாடி உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர்களை நினைவு கூரும் நாளான இன்று, மாவீரர் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் வடக்கு, கிழக்கு மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளன.**

இவ்வாறு மாவீரர் நாள் அஞ்சலி நிகழ்வுகள் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுவதற்காக மாவீரர் துயிலுமில்லங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டு அவை நிகழ்வுக்கு தயார்ப்படுத்தப்பட்டுமுள்ளன.

இது தவிர பொது இடங்களிலும் இந்த நிகழ் 23



## யாழ். கோப்பாயில் மிரட்டிய இராணுவம்



24

## சு.க - கூட்டு எதிரணி இன்று விசேட சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியும் இன்று சந்தித்து எதிர்காலத்தில் ஒன்றிணைந்து செயற்பட முடியுமா என ஆராயவுள்ளன. 23

## கேக் வெட்டியதால் வவு.வில் பதற்றம்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 63-வது பிறந்தநாளை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கேக் வெட்டியமை 23

## தனியார் பஸ் - மோ.சைக்கிள் மோதி இரு இளைஞர் பலி

நுணாவிலில் சோகம்



23

## துயிலுமில்ல சுற்றுமதில் கட்டுமானத்தை நிறுத்த பிரதமர் உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தை சூழ அமைக்கப்படும் சுற்று மதில் கட்டுமான பணிகளை நிறுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அந்த சுற்று மதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் பாராளுமன்ற 23

## யாழ்.பொம்மைவெளி பகுதியில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு



24

## தொடரும் தங்க வேட்டை நேற்றும் பொலிஸார் ஏமாற்றம்

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் கிராமத்தில் உள்ள நிரோஜன் விளையாட்டு கழக மைதானத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் இறுதிக்கட்ட யுத்த காலத்தில் மண்ணில் ஆயுதங்கள் மற்றும் தங்க நகைகள் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து முல் 23

## சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 26 பேர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கனடாவுக்கு செல்ல முற்பட்டதாக கூறப்படும் 26 பேர் புத்தளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

புத்தளம் தில்லையடி பகுதியிலுள்ள திருமண மண்டபம் ஒன்றில் இவர்கள் தங்கவைக்கப் 24

## வடக்கில் ஒன்று, கிழக்கில் நான்கு சபைகளுக்கு இன்று தேர்தல் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்கான, தேர்தல் அறிவிப்பே இன்று வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைய வட்டாரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையினால், 203 உள்ளூராட்சி சபைகளுக்கு ஏற்கெனவே திட்டமிட்டபடி உடனடியாக தேர்தல் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள, 133 சபைகளிலும், 40 உள்ளூராட்சி சபைகளுக்கான வர்த்தமானி அறிவிப்பும் திருத்தப்பட வேண்டியுள்ளது.

ஏனைய 93 உள்ளூராட்சி சபைகளுக்குமே இன்று வேட்புமனுக்களை கோரும் அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது.

இவ்வாறு இன்று வேட்புமனுக்களைக் கோரும் அறிவிப்பு வெளியிடப்படவுள்ள 93 உள்ளூராட்சி சபைகளில், வடக்கு, கிழக் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிறந்த நாளில் 61ஆவது நினைவு நாட்களுடன்...

அமரர்

## அம்பலவாணர் சிவலோகநாதன்



(சூராவத்தை, சுன்னாகம்)

தோற்றம் : 27.11.1948

மறைவு : 27.03.2016

அப்பா அப்பா என அன்புடன் நாம் அழைக்க
அரவணைத்த தெய்வம் இன்று
ஆண்டவன் அடி தேடிச் சென்றது
மெய்யோ?
பொய்யாகிப் போகாதா? எல்லாம்
மெய்தானா?
கல்லாகிப் போனதோ கடவுள்—எங்கள்
அம்மாவைக் காப்பாற்ற முடியவில்லையே
அப்பா என்று இனி அழைப்பதற்கு
யாருமில்லை
அன்புடன் வழிநடந்த அப்பாவும் எமக்கில்லை
ஏனப்பா இவ்வளவு அவசரம் உங்களுக்கு
என்ன பிழை செய்தோம் எமக்கு ஏந்த-
தண்டனை
பிறந்தநாள் என்று நினைக்க அப்பா
எங்களுடன்—இல்லை
நினைவுகளுடன் வேரிழந்த மரமாக நிற்கின்
றோம்—உங்கள்
பெயர் விளங்க என்றும் வாழ்ந்திடுவோம்

சூராவத்தை,
சுன்னாகம்.

(1487)

குடும்பத்தினர்.

# ஜனாதிபதி நாளை தென்கொரியாவுக்கு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை செவ்வாய்க்கிழமை தென்கொரியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபடவுள்ளார். ஜனாதிபதியின் கொரியக் குடியரசுக்கான இந்த விஜயம் வியாழக்கிழமை வரை இடம்பெறும்.

இலங்கைக்கும் கொரிய குடியரசிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 40 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு கொரிய ஜனாதிபதியின் அழைப்பிற்கு அமைய, இந்த விஜயம் இடம்பெறுகிறது. (மு)

# வேட்பாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் சாவகச்சேரி நகர சபையில் சுயேட்சைக் குழுவின் சார்பில் போட்டியிட ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நகர எல்லைக்குள் இயங்கும் பொது அமைப்புக்கள், சங்கங்களூடாக சேவையாற்றுவோர் மற்றும் தனிநபர்களும் போட்டியிடலாம்.

விண்ணப்பங்களுக்கு:
"சிங்கம்ஸ்"
தையல் இயந்திர விற்பனை நிலையம்,
டச் வீதி, சாவகச்சேரி

தொ.பே.0776686775

(1484)

# ஐந்தாம் ஆண்டு நினைவுகளுடன்



அமரர் சின்னத்தம்பி

## இந்திராணி (மூத்தக்கா)

மண்ணில் 09.01.1953

விண்ணில் 21.11.2012

அம்மா!
இல்லத்தின் விருட்சமாய்
பாச நிழல் தாயாய்
இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
நீங்காத தாயே!
உம்மை நினைத்தே வாழ்கின்றோம்-நாம்
உய்ய வழி காட்டுவீர் விண்ணில் இருந்தே!

என்றும் நீங்காத நினைவுகளுடன்

குடும்பத்தினர்

மண்டான்,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

(A-517)

# 10ஆம் ஆண்டு நீங்காத நினைவுகளுடன்




## செல்வராசா சிவகுமாரன்

(முன்னாள் குமரன் ரெக்ஸ்ரைல் உரிமையாளர்)
இல.168, தொண்டமான் நகர், A9 வீதி, கிளிநொச்சி)

பிறப்பு:-1961.11.11 இறப்பு:-2007.11.27

கனம் சுமந்த நெஞ்சு தந்தையின்றி கதறி அழுகின்றது.
தவிக்கின்றோம் இறைவா நீ இல்லாமல் போனாயோ!
எங்கள் விழி நீர் வழிந்தோடும் உன் உயிர் நீர் தேடி
நின்று போன தென்றலாய் உறக்கம்
கொள்கின்றீர்கள் அப்பா!



என்றும் நீங்காத நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்

(A-504)

# தலைவர் பிரபாகரனின் 63 ஆவது பிறந்த நாள் யாழ்.பல்கலையில் மாணவர்களால் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர், வேலுப்பிள்ளை பிரபாகரனின் 63 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கைலாசபதி கலையரங்கின் முன்றலில் வைத்து பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

தமிழீழத்தை சித்திரிக்கும் வகையில் அமைக்கப்பட்ட பிறந்த நாள் கேக் மாணவர்களால் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. (இ-9)



## மாவீரர் நாளை முன்னிட்டு சுவரொட்டிகள்







தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த தினம் மற்றும் மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த சுவரொட்டிகள் நேற்று முன்தினம் இரவு மற்றும் நேற்று அதிகாலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விரிவுரை மண்டபங்கள், சுவர்களில் ஒட்டப்பட்டுள்ளன.

அகவை 63, தமிழீழ தேசியத் தலைவருக்கு பிறந்த தின வாழ்த்துக்கள் எனவும், மாவீரர் தினத்தை முன்னிட்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. (இ-9)



சுவிட்ஸர்லாந்தின் நிட்வால்டன் மாவட்டத்தில் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வு நேற்று இடம்பெற்ற போது...

## மாவீரர் நாள் ஏற்பாடு;இராணுவத்தினர் குவிப்பு கோப்பாய் துயிலுமில்லப்பகுதியில் பதற்றநிலை





(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தை அண்மித்த பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வுக்கான ஆயத்தப்பணிகளை மேற்கொண்ட போது அப்பகுதியில் திடீரென இராணுவத்தினர் குவிக்கப்பட்டதால் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

மாவீரர் நாள் நினைவேந்தல் இன்று இடம்பெறவுள்ள நிலையில் நேற்று குறித்த மாவீரர் துயிலுமில்லத்திற்கு முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில், அலங்கார வேலைப்பாடுகள் இடம்பெற்றன.

இந்நிலையில், மாவீரர் துயிலுமில்லத்தில் முகாம் அமைத்திருக்கும் இராணுவத்தினர் குறித்த பகுதியில் சிரமதானப் பணிகளை முன்னெடுத்ததுடன், கவச வாகனங்களில் வந்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

அப்பகுதிக்கு ஊடகவியலாளர்கள் சென்ற போது இராணுவத்தினரும் தமது தொலைபேசிகள் மற்றும் கமராக்களில் புகைப்படங்களை எடுத்தனர்.

இதன்போது அப்பகுதியில் சிறு குழப்பநிலை ஏற்பட்டது.

பின்னர் அப்பகுதிக்கு வந்த கோப்பாய் பொலிஸார், எந்த வித இடையூறும் இன்றி நிகழ்வு ஏற்பாட்டை நடத்துங்கள் என தெரிவித்துவிட்டு சென்றனர்.

இருப்பினும் இராணுவத்தினரின் கண்காணிப்பின் மத்தியிலேயே மாவீரர் நாள் ஆயத்த பணிகள் இடம்பெற்றன. (இ-9)

## பிரபாகரனின் பிறந்த நாள் தமிழகத்திலும் கொண்டாட்டம்





(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியாவிலும் இடம்பெற்றுள்ளன.

இந்த நிலையில் நாம் தமிழர் கட்சியினரால் ஈரோட்டில் வீதியோரம் வசிக்கும் ஆதரவற்றோருக்கு போர்வைகளும், ரொட்டியும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் சார்பாக பட்டுக்கோட்டை நகராட்சி பள்ளி நூலகத்திற்கு நூல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

## வல்வெட்டித்துறையில் தலைவரின் வீட்டுவாசலில் பிறந்தநாள் கொண்டாட்டம்




தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 63 ஆவது பிறந்த நாள் நேற்று வல்வெட்டித்துறையிலுள்ள அவரது வீட்டு வாசலில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், கே.தர்மலிங்கம், வி.சிவயோகன் ஆகியோரும் இளைஞர்கள், சிறுவர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். இதேவேளை தலைவர் பிரபாகரனின் வீட்டு வளவு சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டதுடன் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. (படங்கள்:-மகாலிங்கம்)

பிரிஸ்பேன் டெஸ்ட் 4ம் நாள்

## டேவிட் வோர்னர், பான்கிராப்ட் அரைச்சதம்

# வெற்றியை நோக்கி ஆஸி



பிரிஸ்பேன் டெஸ்டை அசத்தலாக ஆரம்பித்துவிட்டு இறுதியில் ஆஸியிடம் சரணடையும் நிலைக்கு சென்றுவிட்டது இங்கிலாந்து.

நேற்றைய 4ஆம் நாள் ஆட்டத்தில் தன் 2ஆவது இன்னிங்ஸில் 195 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சுருண்டது இங்கிலாந்து.

இதனையடுத்து 170 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஆஸி ஆட்டநேர நிறைவில் விக்கெட் இழப்பின்றி 114 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப பயணம் மேற்கொணடுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் கடந்த 23ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமானது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 302, அவுஸ்திரேலியா 328 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 33 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஸ்டோன்மேன் (19), ஜோ ரூட் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஸ்ரார்க் அபாரம**

நேற்றைய 4ஆம் நாள் ஆட்டத்தில் லயன் 'சுழலில்' ஸ்டோன்மேன் (27), மாலன (4) சிக்கினர். அணித் தலைவர் ரூட், மொயீன் அலி ஜோடி அணிக்கு வலுவான முன்னிலை பெற்றுத்தர முயற்சித்தனர். இதற்கு ஹேசல்வுட் 'வேட்டு' வைத்தார். இவரது 'வேகத்தில்' அரை சதம் அடித்த ரூட் (51) வெளியேறினார். மொயீன் அலி 40 ஓட்டங்களில் சர்ச்சைக்குரிய ஸ்ரம்பிங் தீர்ப்பால் வெளியேறினார். ஸ்ரார்க் வழக்கம்போல பின் வரிசையை சரித்தார். இவரது 'வேகத்தில்' வோக்ஸ் (17), பேர்ஸ்டோவ் (42), பிரோட் (2) சரணடைந்தனர். ஜாக் போல் ஒரு ஓட்டம் எடுத்தார். இங்கிலாந்தின் கடைசி 4 விக்கெட்டுக்களும் 10 ஓட்டங்களுக்கு வீழ்ந்தமை குறிப்பிடத்தக்க விடயம். முடிவில், இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸில் 195 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் அதிகபட்சமாக ஸ்ரார்க், ஹேசல்வுட், லயன் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**வோர்னர் அரைசதம்**

இதனையடுத்து 170 ஓட்டங்கள் என்ற எளிய இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது அவுஸ்திரேலியா.

வோர்னர், பான்கிராப்ட் அபார ஆரம்பம் கொடுத்தனர். இருவரும் அரை சதம் கடக்க, அணி இலக்கை நோக்கி வேகமாக முன்னேறியது.

இந்நிலையில் நேற்றைய 4ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்குவர அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 114 ஓட்டங்கள் எடுத்திருந்தது. வோர்னர் (60), பான்கிராப்ட் (51) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆஸிக்கு இன்னும் 56 ஓட்டங்களே தேவை என்பதால் இன்றைய கடைசி நாள் ஆட்டத்தில் வெற்றி உறுதியாகியுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

### வைத்திய கலாநிதி வேதநாயகம் விக்கினராஜா (விக்கி) (GOVOOR)



கொக்குவில் மேற்கு கேணியடியை பிறப்பிடமாகவும் வளர்ந்த இடமாகவும் கொண்டவரும் கொக்குவில் இந்துக் கல்லூரி, யா/இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் திருகோணமலை தம்பலகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட மக்கள் சமூகசேவையாளன் வைத்திய கலாநிதி **வேதநாயகம் விக்கினராஜா (விக்கி)** அவர்கள் 22.11.2017 மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னார் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்க மற்றும் பல பொது அமைப்புக்களிலும் உறுப்பினராக விருநது மக்கள் நலனுக்காக மகத்தான சேவைகள் வழங்கியிருந்தார். அத்துடன் ஆன்மீகத்துறையிலும் தனது நற்பணியை ஆற்றியுள்ளார். அன்னாரின் மறைவு எமது சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத பெருமிழப்பாக உள்ளது.

எனவே அன்னாரை பிரிந்து துயருற்றிருக்கும் தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், உறவினர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவர்களது துயரிலும் பங்கு கொள்கிறோம்.

*அன்னாரின் குடும்ப நண்பர்களான:*

ஸ்ரீபாலன் குடும்பம் (விதானையார்)
ரங்கன் குடும்பம்
கிருபா குடும்பம்
உமாகரன் குடும்பம்
சிவா குடும்பம்
மகேந்திரன் குடும்பம் (ராஜா மகேந்திரன்)
இராசலிங்கம் குடும்பம்
செல்வன், ராசன், இந்து குடும்பம்
— கனடா

நகுலன் குடும்பம் கொக்குவில்.
இந்திரலிங்கம் குடும்பம் கொக்குவில்.

(C-519)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 1963 - 08 - 25



மறைவு 2017 - 10 - 28

கடந்த 28.10.2017 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் நடராசா குலசேகரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.11.2017) திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அத்தருணம் தாங்களும் கலந்து கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அல்வாய் கிழக்கு,
அத்தாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-518)

## மணிவிழா வாழ்த்துக்கள்

### சொக்கலிங்கம் சிவசுதன்

(வருமானப் பரிசோதகர் சேவை,
நகராட்சி மன்றம் சாவகச்சேரி)



அன்பும் அறமும் கடமையும் கண்ணாய்
அரியசேவை ஆற்றிய சுதனே
இன்பம் பொங்க இனிமை கமழ
இயல்புற நூறு ஆண்டுகள் வாழ்க
பழகுதற்கினிய நண்பனே வாழ்க
வேதவனப்பதி விநாயகன் அருளால்
அளவில் சொந்தம் சுற்றம் பொலிய
அன்பனே வாழ்க வாழிய வாழ்க

மனமகிழ்ந்து வாழ்த்துவோர்:
**நகராட்சி மன்ற வருமானப் பரிசோதகர்களும் நண்பர்களும்**

(1436)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் ஆட்சியமைச்சின் அனுசரணையுடன் "உள்ளூர் ஆளுகை நிறுவனம் நடத்திய" உள்ளூர் ஆட்சி பற்றிய உயர்கற்கைநெறி - 2017இல் சித்தி எய்திய

### உயர்திரு. வேலுப்பிள்ளை சண்முகசுந்தரம்

(வருமானப் பரிசோதகர் சேவை,
நகராட்சி மன்றம் சாவகச்சேரி)



அவர்களை மேன்மேலும் பல உயர்ச்சிகள் பெற்று மேன்மையுற எல்லாம் வல்ல சக்கர ஆழ்வாரைப் பிரார்த்திக்கின்றோம்.


**ஸ்ரீ சக்கர ஆழ்வார் ஆலயம்
(த.கதிர்காமநாதன்) அறங்காவலர்
சப்பச்சி மாவடி, சாவகச்சேரி.**

(1435)

# மரண அறிவித்தல்

பிறப்பு

1944 - 11 - 19



இறப்பு

2017 - 11 - 24

# லயன் செல்லத்துரை மகாதேவா (J.P)

*(முன்னாள் முகாமையாளர்- சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்; வழி நடத்துநர்-இலங்கை போக்குவரத்துச் சபை; தனியார் போக்குவரத்துச் சபை முன்னாள் உரிமையாளரும் தலைவரும்; அங்கத்துவப் பணிப்பாளர்-சுன்னாகம் லயன்ஸ் கழகம்; பிரதம இணைப்பாளர்- ஆளுநர் சபை, லயன்ஸ் கழகம் 306B1, நிர்வாக சபை உறுப்பினர்- நோயாளர் நலன்புரிச் சங்கம், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை; உபதலைவர்-தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கம்; போசகர்-சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச் சங்கம்; முன்னாள் செயலாளர்- வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லம்; தலைவர்-தெல்லிப்பழை மேற்கு சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்; தலைவர் கந்தரோடை சுப்பிரமணிய வாசிகசாலை; அகில இலங்கை சமாதான நீதவான்; சமூக சேவையாளர்)*

கந்தரோடை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லயன் செல்லத்துரை மகாதேவா கடந்த (24.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சீவநாயகம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லயன் பூமாதேவியின் பாசமிகு கணவரும் பிருந்தாவன் (சுதன் - லண்டன்), திருமதி பிரியதர்ஷினி (லண்டன்), லயன் பிரிதிவிராஜா (ராஜன் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சிவனேஸ்வரி (லண்டன்), விஸ்ணுகாந்தன் (லண்டன்), திருமதி பவித்திரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சர்விகா, கோவரசன், ஜஸ்வினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது கந்தரோடை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கன்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**பிள்ளைகள் (லண்டன்)**

(சி-513)

'தனி மனித சுதந்திரம், சமாதானமாக கூடிவாழுதல்'

# சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்.பல்கலையில் நாளை

(யாழ்ப்பாணம்)

தனிமனித சுதந்திரம், பண்பாட்டு நடைமுறைகள், உலகளாவிய ஆட்சிமுறை, சமாதானமாக கூடி வாழ்தல் ஆகிய தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஆய்வு மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி சுதாகரன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் யாழ்.பல்கலையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த சர்வதேச மாநாடு நாளை 28 ஆம் திகதி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

மாநாட்டின் முதல் நாள் ஆரம்ப நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கிலும், இரண்டாம் மூன்றாம் நிகழ்வுகள் பட்டப்பின் கற்கைகள் பீடத்திலும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரட்ணம் விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்தியத் துணை தூதுவர் ஏ.நடராஜன் ஆகியோர் கலந்துகொள்வர். மேலும் வெளிநாடுகளைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட துறைசார் வல்லுநர்கள், பேராசிரியர்கள் எனப்பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட மூன்றாம் உலக ஆய்வு மையத்தின் தெற்காசிய கிளை இந்தியாவின் கேரளாவில் உள்ளது. இந்த கிளை வருடம் தோறும் ஆய்வு மாநாடுகளை நடத்தி வருகின்றது. இந்த மாநாட்டின் 22 ஆவது மாநாடே யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றை சஞ்சிகைகள், ஆய்வுகள் ஊடாக வெளிக்கொணர்ந்து ஆய்வின் முடிவுகள் ஊடாக தீர்வை காண்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

இந்த மாநாட்டுக்காக ஆய்வு கட்டுரைகள் கோரப்பட்ட நிலையில் 200இற்கு மேற்பட்ட ஆய்வு கட்டுரைகள் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் 150 ஆய்வு கட்டுரைகள் துறைசார் வல்லுநர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் உப பிரிவுகளின் தலைப்பில் சுற்றாடல் பிரச்சினை, விஞ்ஞான தொழில்நுட்பமும் சுகாதாரமும் மருத்துவமும், அரசியல், பொருளாதாரம், சமூகவியல், பெண்ணியம், கலையும் வரலாறும் சிந்தனையும் ஆகிய தலைப்புக்களில் ஆராயப்படவுள்ளன.

விசேடமாக திருக்குறள் தொடர்பில் தனி ஆய்வு ஒன்றும் நடைபெறவுள்ளது. குறித்த ஆய்வு மாநாட்டில் திருக்குறள் பற்றி ஐந்து தனி ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. மேலும் 25 கட்டுரைகள் அடங்கிய மணற்கேணி என்ற நூலும் இதன் போது வெளியிடப்படவுள்ளது. இந்த மாநாட்டின் ஏற்பாட்டு குழுவின் செயலாளராக அரசறவியல் துறை தலைவர் கே.ரி.கணேசலிங்கம் உள்ளார். இந்த பத்திரிகையாளர் சந்திப்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், திருமதி கலாநிதி பவனேசன், விரிவுரையாளர் ரி.குமரன், கலைப்பீட பதிவாளர் எம்.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# பேருந்து நிலையத்தில் மாவீரர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதிக் கான மாவீரர் தினம் சாவகச்சேரி நகர மத்தியில் பேருந்து நிலையத்தில் அனுஷ்டிப்பதற்கான பூரண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மாவீரர் தின ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

தென்மராட்சியின் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம் இராணுவ ஆக்கிரமிப்பில் இருப்பதால் இந்த வருடத்துக்கான மாவீரர் தினம் சாவகச்சேரி நகர மத்தியில் மாலை 5.30 க்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இதன்போது பிரதான ஈகச் சுடரினை மாவீரர் ஒருவரின் பெற்றோர் ஏற்றவுள்ளார்.

இந்த மாவீரர் தின நிகழ்வில் தென்மராட்சியில் வசிக்கின்ற மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு ஏற்பாட்டுக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (இ-89)

# போதனாசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு







பனை அபிவிருத்திச் சபையால் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் 4 நாட்கள் இடம்பெற்ற போதனாசிரியர்களுக்கான வதிவிட தொழில் நுட்ப பயிற்சி நெறியினை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கைதடி பனை ஆராய்ச்சி நிறுவக மண்டபத்தில் இடம்பெற்றது.

பயிற்சிப் பொறுப்பாளர் திருமதி.த.பவானி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் 11 மாவட்டங்களைச் சேர்ந்த 21 போதனாசிரியர்கள் பயிற்சி சான்றிதழ்களைப் பெற்றிருந்தனர்.

இந்நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் வைத்திய கலாநிதி.ஆர். சிவசங்கர், பனை அபிவிருத்தி சபையின் பொதுமுகாமையாளர் பா.சுதாகரன், விரிவாக்க முகாமையாளர் கா.கோபாலகிருஸ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களுடன் பயிற்சி வளவாளர் திருமதி.ர.விஜிதவேணி கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். மேலும் பனை அபிவிருத்தி சபையின் விரிவாக்கல் பகுதியால் போதனாசிரியர் வழிகாட்டி நூல் வெளியிடப்பட்டு, பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (இ-9)









# இராசி பலன்

27.11.2017

கார்த்திகை 11, திங்கட்கிழமை,
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
அட்டமி காலை 6.27 மணிவரை
சதயம் பிற்பகல் 12.48 மணிவரை
சுபநேரம் 12.12-1.42 மணிவரை
இராகுகாலம் 7.42-9.12 மணிவரை
கார்த்திகைத் திங்கள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம் | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத சூரி | குரு, சுக் | செவ் |

**மேடம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**இடபம்:** சொல்லை செயலில் காட்ட முற்படுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செய்தொழில் மேன்மையுண்டு. புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** மனதிற்கினிய சம்பவம் ஒன்று இடம்பெறலாம், பால்ய நண்பரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பலனுண்டு, தொழில் சிறப்புகள் வந்து சேரலாம்.

**கன்னி:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், கடன் பாக்கிகள் வசூலாகலாம், இனந்தெரியார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், கௌரவமான நாள்.

**துலாம்:** பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வளர்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு:** பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், உடன். பிறப்புகளின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வியாபார விருத்தியுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், இல்லத் தேவைகள் பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**கும்பம்:** மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், நேற்றைய பிணக்கொன்று இன்று முடிவுக்கு வரலாம்.

**மீனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியமென்று நல்ல விதமாக நடைபெறலாம், சுபச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது.

# மாவீரர் நாள் இன்று

## தேசத்தில் நெருப்பெரிந்தபொழுது உங்கள் தேகத்தை எரித்தீர்களே!



மௌனம் சுமந்த அந்த வித்துடல் தேசம் அங்கே மனித மனத்தில் எழும் உணர்வின் வார்த்தைகள் தன் உணர்விழுந்து செத்துக் கிடந்தது.

மனங்களில் தாங்க முடியாத குமுறல்கள் தொண்டையில் வந்த வேகத்தில் வாயடைத்து கண்களில் நீர் சுமந்து நின்றன.

கைகளில் ஒளிவத்திகளுடன் நம் உயிர் காவிய உடல்களைத் தொலைத்ததினால் உளம் சோர்ந்து , உடல் கனத்து நின்றனர்.

விடிவுக்காய் உயிர்கொடுத்து தாய் மண்ணின் மானம் காக்க இன்னமும் தொப்புள் கொடி அறுபட்டுப் போகாமல் துயிலுமில்லக் கருவறையில் கல்லறைகளாக எம் மண்ணின் பூபாளக் கனவுகளுடன் தூங்கும் தம் உறவு களுக்காய் அன்னையர், தந்தையர் இன்னும் ஓராயிரம் உறவுகள்.

அலை தடவி, மண்ணின் மடி தவழ்ந்து மலர்களின் மணம் சுமந்து வந்த காற்றின் இளவல் கூட மௌனமாக அஞ்சலி செலுத்திச் சென்றன. வானம் தன் இமைகளை மூடி மெல்லக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியது.



புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிவரியும், இசைவாணர் கண்ணன் அவர்களின் இசையமைப்பிலும் உருவான பாடல் மேலும் எம் எல்லோரையும் அமைதியாக்கி எம் இதயத்தைக் கனக்க வைத்தது. ஒற்றை வரி யேனும் நெஞ்சை விட்டு விலகாது மூளையில் பதிவாகி நீள ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

உறுதி மொழி
(தொகையறா)

மொழியாகி எங்கள்
மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ் மீது
உறுதி
வழிகாட்டி எம்மை உரு வாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி
இழிவாக வாழோம் தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி

சரணங்கள்

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே!-இங்கு
கூவிடும் எங்களின் குரல் மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம்- அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்...

**இன்று மாவீரர் நாள்**

உங்களைத் தந்து நீங்கள் உள்ளுக்குள் உறங்குகிறீர்கள்

உதிரத்தால் ஈழம் எழுதி உயர்ந்து கொண்டீர்கள்
தேசத்தில் நெருப்பெரிந்த பொழுது- உங்கள்
தேகத்தை எரித்தீர்கள் தியாகச் செம்மல்களின் நாளிது

விடுதலை வேண்டி வித்துடல் கொண்ட வீரர்களின் நினைவழியா நாளிது

எத்தனையோ துன்பங்களை யெல் லாம் சுமந்து எம்

துயர்களைந்து துயிலுமில்லம் விளைந்த வேங்கைகளே!

தாய் மண் அழுதபோது சுதந்திரக் காற்றை செந்நீரால் எழுதியவர்களே எத்தனை கனவுகள் கண்டிருப்பீர்- மன

ஏக்கங்கள் ஆயிரம் கொண்டிருப்பீர். பெற்றவர் உறவுகள் பிரிந்து வந்தீர். ஒரு புன்னகைக்குள் புயல் மூடி வைத்தார். அத்தனை சுமையையும் ஏன்

சுமந்தீர்? எம் அன்னை மண் விடுதலை வேண்டியல்லவோ? செத்தவர் என்று உம்மை செப்புவமோ- உம்மை சென்மத்தில் நினைத்திடத் தப்புவமோ குத்து விளக்கும் நீரல்லவோ? நாம் கும்பிடும் தெய்வங்களும் நீரல்லவோ? நித்தமும் வாழுவீர் மாவீரர்களே எங்கள் நெஞ்சுகளில்

**இளமைக்காலி இனிமைகளை யாவும்**
**துறந்த வேங்கைகளே!**

விடுதலைப் போராட்ட வரலாற்றில் மாவீரர் பாடல்கள் மிக முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. அப்பாடல்களில் இடம் பெறும் வரிகளும் குரல்களும் இசைகளும் வலிமையானவை. உதாரணமாக ஒரு பாடலை முன்வைக்கலாம். இப் பாடலைப் புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதினார். ''வேங்கைகளின் விடுதலை வேதங்கள்'' என்ற ஒலி நாடாவில் மதுரக்குரலோன் எஸ். ஜீ. சாந்தன் அவர்கள் பாடினார். இப் பாடலை

பின்வரும் மேகங்கள் பாடும்
மாவீரரின் நாமங்கள் கூறும்
கண்ணாழி கங்கைகள் பாயும்- இவர்
காவிய நாயகர் ஆகும்.
புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து
எழுந்து வாருங்கள்
எரிந்த இடத்தில் இருந்து நீங்கள் நிமிர்ந்து
வாருங்கள்...

விதையுண்டுபோன வீரப்பிள்ளைகளை எண்ணி வதையுண்டு கிடக்கிறது வாசல்கள் போர்க்களம் புகுந்து

ஆவி கொடுத்தோரை அழைக்கும் நாள் துயிலுமில்லம் சென்று தொட்டெழுப்பும் திருநாள் கல்லறையின் வாசற் கபாடம் திறக்கும் நாள் மெல்லொலியால் உள்ளே மூச்சே கேட்கும் நாள் கார்த்திகை மாதத்து மழைத்தூற்றல்

இந்த நாளுக்கான கண்ணீர்தான்
அழுக்கெல்லாம் கழுவி அள்ளிச் செல்லவே
வீதியெங்கும் வெள்ளம் பாய்கிறது.
கோடி மலர்கள் கார்த்திகையில் பூப்பது வாடிவிழவல்ல...
கல்லறைக்கென்றே செடிகள் கருத்தரிக்கின்றன.
தனக்குள் உறங்கும் சந்தனமேனி குளிரட்டுமென
நீரை உறிஞ்சிக் கொள்கிறது. நிலம்
கார்த்திகை இருபத்தேழு கண்ணீர் நாளல்ல...
ஆயினும் நெஞ்சில் ஆயிரம் ஆணிகளேறு கின்றன.
சிலுவையில் அறைவது போல் தேகம் வலிக்கிறது.
விதையுண்டு போன வீரப்பிள்ளைகளை எண்ணி
வதையுண்டு கிடக்கிறது வாசல்கள்
மாலைபடும் வேளை சுடரும் நெய்விளக்கில்
காலையொன்று விடியும் காட்சி தெரிகின்றது.
யாருக்கென்றுதான் அழுவது?
எவருக்கென்றுதான் ஏற்று வதுசுடர்
எந்தக் கல்லறைக்கு பூவாரியிறைப்பது?
வேரெல்லாம் ஒன்றான பின்னர்
கிளைகளுக்குள்ளே பேதங்களேது?
எல்லாக் கிளைகளும் எமது
எல்லாப் பூக்களும் எமது
எல்லாக் குழிகளும் எமது
எல்லாப் பிள்ளைகளும் எமது
கனவின் மொழியைக் ஒத்தெழுதிய கவிதைகளுக்கு
அனற்சுடரேற்றி அஞ்சலிக்கின்றோம்...
புயல் மரத்தில் பூத்த மலர்களின் மடியில்
விழிசொரியும் பூக்களை விழுத்துகிறோம்
வீரம் விளைந்து விட்டால்
சாவு சர்க்கரையாகி விடுகிறது
பகைத்தோரின் சக்கரங்களை முறித்து
சமர்க்களம் நின்றாடிச் சாய்ந்தோரிவர்
வெல்லும் போதில் விழுந்துபோகும்
விழுந்து போனோரின் விதைகுழிப் பெருநாள் தான்
மாவீரர் நாள்
கார்த்திகை இருபத்தேழு
காவற்தெய்வங்களின் காணிக்கைத் திருநாள்
ஊர்திரண்டு ஒப்பாரி வைப்பதில்லை
உருக்கொண்டாடி உறுதியெடுத்துக் கொள்கிறது
சாவடைந்த பின்பும்
இவர்களுக்கோர் சக்தியிருந்தது
இது கார்த்திகை மாதம்
ஊர் முற்றமெங்கும் ஒளி வெள்ளம்
சுடரேற்றி தொழுகின்றோம்
பாட்டோடு சேர்ந்த பரவசம் உறவுகளே
கேட்கிறதா கோயில் மணி
கேட்கிறதா நெஞ்சுருக்கும் பாடல்
தெரிகிறதா சுடரும் நெய்விளக்கு

ஜெயம் ஜெகன்

# இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லத்தில் இன்று விளக்கேற்றி அஞ்சலி நிகழ்வு





(பனிக்கன்குளம்)

தமிழ் மக்களின் விடு தலைக்காக தம்மை ஆகுதி யாக்கியமாவீரர்களை உணர்வு பூர்வ அஞ்சலி செலுத்தும் மாவீரர் நாளான இன்று கார்த்திகை மாதம் இருபத் தேழாம் திகதி அஞ்சலி நிகழ் வுகளுக்காக முல்லைத்தீவு இரணைப் பாலை மாவீரர் துயிலுமில்லம் புத்துணர்வு பெற்றுள்ளது. இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்ட துயிலுமில்ல மான முல்லைத்தீவு. புதுக் குடியிருப்பு இரணைப் பாலை துயிலுமில்லத்திலும் மாவீரர் நாள் நிகழ்வு முதன் முறையாக இந்த வருடம் நடை பெறவுள்ளது.

பிரதேச மக்கள் மற்றும் இளைஞர்களின் முன்னெ டுப்பில் மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள்பூர்த்தியாகியுள்ளன. தமது பிள்ளைகள்உறவுகளை இங்கு விதைத்தவர்கள் அனைவரையும் உணர்வாளர் கள், பொதுமக்கள் அனை வரையும் அஞ்சலி செலுத்த ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்

புதுக்குடியிருப்பிலிருந்து மாத்தளன் செல்லும் வீதி யில் சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இரணைப்பாலை கிராமத் தில் உள்ள 25 ஏக்கர் என அழைக்கப்படும் பகுதியில் இறுதி யுத்த காலப்பகுதியான 2008 ஆம் ஆண்டு பெண் மாவீரர் ஒருவரது வித்துடல் விதைக்கப்பட்டதோடு ஆரம் பிக்கப்பட்ட இத்துயிலுமில் லத்தில் சுமார் 500 வரை யான மாவீரர்களின் வித்து டல்கள் விதைக்கப்பட்டு கல்லறைக்கான நினைவுக் கற்கள் அமைக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது

2008 ஆம் ஆண்டுக்கு பின்னர் முதல் தடவையாக இவ்வாண்டு மக்கள் உண ர்வு பூர்வமாக இந் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (2-281)

## முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில்

# மாவீரர் பசீலனின் தாயார் இன்று பொதுச்சுடரேற்றுவார்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளி யவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் தேசிய மாவீரர் தினமான இன்று மாவீரர் பசீலனின் தாயார் பொதுச் சுடரினை ஏற்றவுள்ளார். முள்ளியவளை மாவீரர் துயி லும் இல்லத்தில் இன்றைய அரசியல் கட்சியோ அரசியல் சார்ந்தவர்ளோ விளக்கேற்ற வில்லை. மாவீரரின் தாயார் பொதுச் சுடரினை ஏற்றவுள் ளார் என பணிக் குழு அறி வித்துள்ளது.

முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தை இராணு வத்தினர் முற்றுகையிட்டு ள்ள நிலையில் குறித்த துயி லுமில்ல காணியில் ஒரு பகுதியில் மாவீரர் நாள் நிகழ் வுக்காக மாவீரர் பெற றோர் உறவினர்களால் சிரமதான ப்பணி முன்னெடுக்கப்பட்டு ஏற் பாடுகள் பூர்த்தியாகியு ள்ளன.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டி ற்காக 11 பேர் கொண்ட பணிக் குழு நியமிக்கப்பட்டுள்ளது இதன் அடிப்படையில் பல ஆயிரக்கணக்காக வித்துட ல்கள் புதைக்கப்பட்ட இந்த பகுதியில் மாவீரர் நாள் நிக ழ்வுகள் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளன. இதில் விதைக்கப்பட்ட மாவீரர்க ளின் பெற்றோர்கள், உறவி னர்களை இன்று மாலை வருகை தந்து மாவீரர் களின் வணக்க நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் பணிக்குழு அறிவித்துள்ளது. (2-281)




# ஈரோஸ் அமைப்பின் மாவீரர் தின நிகழ்வு

ஈரோஸ் அமைப்பின் மாவீரர் தின நிகழ்வு இன்று கனகராயன்குளத்தில் குறி சுட்டகுளத்தில் அமைந்துள்ள மாவீரர் நினைவுப் பூங்காவில் நினைவுகூரும் அஞ் சலி நிகழ்வு நடைபெறவு ள்ளது

தமிழீழ விடுதலை போரா ட் டத்திற்காக விடுதலை புலிக ளோடு இறுதிவரை களமாடி இன்னுயிர்களை அர்ப்பணித்த ஈரோஸ் மாவீ ரர்களின் நினைவிடத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலு த்துவதுடன் விடுதலை போரா ட்ட சக மாவீரருக்கும் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நினைவு கூரப்படும். (2)

# இல்லங்களின் வாசல்களில் நெய்விளக்கேற்றி மண்ணுறங்கும் மாவீரத்தை தட்டியெழுப்புவோம்

## தமிழ் தேசிய மாவீரர் நாளான இன்று வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு அழைப்பு

(குருமன்காடு)

வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்ல சூழ லில் வவுனியா மாவட்ட பிர ஜைகள் குழுவின் ஏற் பாட்டில் மாவீரர் தினம் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு அனுஷ்டிக்கப்பட வு ள்ளது.

எனது மொழி தமிழ்; பிறப்பு தமிழன்; தமிழிச்சி என்று உணருகின்ற ஒவ் வொரு தமிழ் பிரஜையும் இன்று மாலை 6.05 மணி க்கு தத்தமது இல்லங்களில் வாசல் தோறும் நெய் விளக் கேற்றி மண்ணுறங்கும் மாவீரத்தை தட்டியெழுப்பி கௌரவப்படுத்தும் தேசிய பெரும் பணியை தாழ்ந்து போகாது சிரம் உயர்த்தி நிறைவேற்றுமாறும் வவு னியா மாவட்ட பிரஜைகள் குழுவினர் அழைப்பு விடுத் துள்ளனர்.

குறித்த நினைவேந்தல் தொடர்பாக வவுனியா மாவ ட்ட பிரஜைகள் குழு விடு த்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர் தேசம் எங்கும் மாவீரர் நாளை அனுஷ் டிப்பதற்காக தாயக மக்கள் தாமாகவே எழுச்சி கொண்டு நிற்கின்றனர்.

இந்த வருட தொடக் கத்தில் கிளிநொச்சி கனக புரம் மாவீரர் துயிலுமி ல்லத்தில் தமிழ் மக்களின் வழிபாட்டுக்கென்று பொது நினைவுத்தூபியை அமை க்கும் பணியை ஆரம்பித்து. இதன் காரணமாக நீதிமன்ற வழக்கையும் வவுனியா பிர ஜைகள் குழு எதிர்கொண் டுள்ளது.

இன்றையதினம் வழமை போன்றே வவுனியா மாவ ட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலு மில்ல சூழலில், ஆலய மணி யோசை மூன்று முறை ஒலிக்கவிடப்பட்டு, மாவீரத் தெய்வங்களுக்காக பிரத் தியேகமாக அமைக்கப்பட் டுள்ள திருக்கோவிலில் (நினைவேந்தல் பாடல் இசை க்க) மாலை 6.05 க்கு பொதுச் சுடர் ஏற்றலுடன் மாவீரர் நாள் நினைவேந் தல் நடைபெறும்.

'தமிழ் தேசிய மாவீரர் நாள் - நவம்பர் 27' எனும் தொனிப்பொருளில் இடம் பெறும் குறித்த நினை வேந் தல் எழுச்சியில், மாவீரர் போராளி குடும்பங்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், தமிழ் இன மான உணர்வாளர்கள், சிவில் சமூக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அனை வரையும் சமவாய்ப்புடன் பங்கேற்று, 'தமிழ் தேசிய இனத்தின் வீர ஆத்மாக்க ளுக்கு' உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்துமாறும், தாங்கள் வசிக்கும் இடத்தி லிருந்து நினைவேந்தல் இடம் பெறும் கிட்டிய தூரத்திலுள்ள மாவீரர் துயிலுமில்லங்க ளுக்கு முடிந்தவரை நேரில் வருகை தருமாறும் அழை க்கின்றோம்.

'எனது மொழி தமிழ், எனது பிறப்பு தமிழன் - தமிழி ச்சி' என்று உணருகின்ற ஒவ்வொரு தமிழ் பிரஜை யையும், நவம்பர் 27 அன்று மாலை 6.05க்கு தத்தமது இல்லங்களின் வாசல்கள் தோறும் நெய் விளக்கேற்றி மண்ணுறங்கும்'மாவீரத்தை' தட்டி எழுப்பி கௌரவப்ப டுத்தும்தேசிய பெரும்பணியை -தேசியக்கடமையை, "தரம் தாழ்ந்துபோகாது சிரம் உயர்த்தி" நிறைவேற்று மாறும் கேட்டுக்கொள் கின் றோம் என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (2-250)

# தர்மபுரம் காட்டில் இயங்கிய கசிப்பு நிலையம் சுற்றிவளைப்பு

## 6 பரல்களில் கசிப்பு கோடா கைப்பற்று

(மல்லாவி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தருமபுரம் 8, யூனிட் கிராமக் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இய ங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்த போது பொலிஸார் வரும் தகவல் கிடைத்து சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் 06. பரல்களில் உள்ளடங்கிய 600 லீற்றர் கசிப்புக் கோடாவைக் கைப் பற்றியுள்ளதுடன், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன் படுத்திய உபகரணங்களை யும் கைப்பற்றிய பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கி யுள்ளதாக கிளிநொச்சி/முல் லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவி க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணியளவில் நடைபெ ற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ்வெலிகன்னவின்விசேட உத்தரவுக்கு அமைய தரும புரம் பொலிஸ் நிலையப் பிரி வில் குற்றச் செயல்களைக் கட் டுப் படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களுக்கான போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவின் பொலிஸ் அணியினர் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தருமபுரம் 8, ஆம் யூனிட் கிராமக் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்து நிர்மூலமாக் கிய பின்னர் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங் களைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப் பட்டு ள்ள தடயப் பொருட்களைத் தருமபுரம் பொலிஸ் நிலை யத்தில் மேலதிக விசாரணை களுக்காகவும், தப்பிச் சென்று ள்ள சந்தேக நபர்களை கைது செய்வதற்காகவும் ஒப்படைத் துள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களுக்கான பிரதிப் பொலி ஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது. (2-15)

# முல்லையில் உள்ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு 10மில். ரூபா நிதியொதுக்கீடு

(குருமன்காடு)

முல்லை.மாவட்ட உள் ளக விளையாட்டு அரங்கம் அமைக்க வடக்குமாகாண விளையாட்டு திணைக்கள த்தால் 10 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

முல்லை.மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு அரங் கம் அமைப்பதற்காக வடக்கு மாகாண விளையாட்டுதிணை க்களத்தினால் 2018ஆம் ஆண்டுக்கான 10 மில்லியன் ரூபாய் மாகாண உட்கட் டுமான நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு 2018 தை மாதம் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட ஏற்பாடாகியு ள்ளது.

ஏற்கனவே முல்லை மாவட்ட செயலகத்தின் முன் பாக நகர விளையாட்டு மைதா னத்தின் அருகில் விளை யாட்டு திணைக்களத்திற்கு பிரதேச செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு கைய ளிக்கப்பட்ட காணியில், பூப்ப ந்து, கரப்பந்து, கபடி, கரா த்தே, குத்துச் சண்டை இன் னும் பல போட்டிகள் நடத்த கூடியதாகவும் பயிற்சியை மேற்கொள்ளக் கூடியதாகவும் இவ் உள்ளக விளையாட்டு அரங்கம் அமையவுள்ளது.

ஏற்கனவே கடந்த கால த்தில் 2013ஆம் ஆண்டில் 30 மில்லியன் ரூபாய் உள் ளக விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மத்திய அரசா ங்கத்தினால் ஒதுக்கீடு செய் யப்பட்டு 10 மில்லியன் ரூபாய் செலவில் உள்ளக விளையாட்டு அரங்கு வேலை கள் ஆரம்பிக்கப்பட ஏற்பாடாகி இருந்த நிலையில் இடையூ றுகள் காலதாமதம் காரண மாக மன்னார் மாவட்ட உள் ளக விளையாட்டு அரங்கி ற்கு நிதியுதவி மாற்றம் செய்ய ப்பட்டது.

மீண்டும் 2018ஆம்ஆண்டு க்கான நிதி ஒதுக்கீடு செய்ய ப்பட்டு வேலைகள் ஆரம்பி க்கப்பட ஏற்பாடாகிவருகின்றன.

போட்டிகளை நடத்துவ தற்கு தற்சமயம் கேப்பாப் பிலவு மற்றும் ஒட்டுசுட்டான் இராணுவ முகாமில் உள்ள உள்ளக அரங்கினையே பெரும்பாலும் மாணவர்கள், ஏனைய விளையாட்டு வீரர்கள் பயன்படுத்தி வருகின்றனர்என் பது குறிப்பிடத்தக்கது.(2-250)

# பூநகரி அரசினர் பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு நண்பகலுடன் மூடல்

## இந்நிலை தொடருமாகில் போராட்டம் நடத்த முடிவு

பூநகரி அரசினர் பொது வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாத நிலையில் நண்பகலுடன் வெளிநோயாளர் பிரிவு மூடப்படுவதால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருவதாக பொது அமைப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த வைத்தியசாலைக்கு உடனடியாக நிரந்தர வைத்தியரை நியமித்து உதவுமாறு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. " மாலை நேர வெளிநோயாளர்கள் பிரிவு நடைபெற மாட்டாது" என்ற அறிவித்தல் முன் வாசலில் ஒட்டப்பட்டிருப்பதால் தினம் தினம் பிற்பகல் வேளையில் வரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிச் செல்வதுடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி வைத்தியசாலைக்கு பெருந் தொகைப் பணத்தை செலவிட்டு செல்ல வேண்டிய அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

அத்தோடு காலை வேளையில் மட்டும் வேரவில் முழங்காவில் ஆகிய வைத்தியசாலைகளில் இருந்து சகோதர மொழி பேசும் இனத்தைச் சேர்ந்த வைத்தியர்கள் வருவதாகவும் தமது நோயை வெளிப்படுத்துவதற்கு மக்களுக்கு மொழிப் பிரச்சினை சிக்கலும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக் குறைபாட்டை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படாவிடின் அமைதியான போராட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்டுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை உடல் நலம் பாதிக்கப்பட்ட நவரத்தினம். முருகானந்தராசா. (வயது 59) என்பவர் பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மறுநாளே வைத்தியர் வருவார் என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டதுடன் நோயாளர் காவு வண்டியும் உடனடியாகக் கிடைக்காததால் கால தாமதமான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி சிகிச்சை மேற் கொள்ளப்பட்ட போதிலும் அவர் மரணமானார். அதேவேளை அத்துடன் கடந்த 3 ஆம் திகதி பள்ளிக்குடா பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த சந்திரலோக ராசலிங்கம்.நிர்மலா என்ற குடும்பப்பெண்ணும் பூநகரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் வைத்தியர் இல்லாத காரணத்தால் கஷ்டத்துடன் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட போதும் மரணமானார்.

பூநகரி வைத்திய சாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தால் உடனடி சிகிச்சை மேற்கொள்ளாததால் இவ்வாறான உயிரிழப்புக்கள் ஏற்படுவதாக மரண விசா ரணை அதிகாரி அ.அரியரத்தினம் அறிக்கையிட்டுள்ளாா. (2-84-254)


# மோட்டார் சைக்கிள்- கூலர் ரக பிக்கப் விபத்து;மாணவன் பரிதாபமாக உயிரிழப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு கொக்கிளாய் வீதியில் உள்ள உடுப்புக் குளம் சந்திக்கு அண்மையாக மோட்டார் சைக்கிளும் மீன் கொண்டு செல்லும் கூலர் ரக பிக்கப் வாகனமும் மோதுண்ட விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பாட சாலை மாணவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந் துள்ளதுடன், அவருடன் கூடப் பயணித்த மற்றைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளதாக முல்லைத் தீவுப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,



மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் க. பொ. த. உயர் தரத்தில் கலைப்பிரிவில் கல்வி பயிலும் பத்மசீலன் - துவாரகன் வயது - 19, என்ற மாணவன் உடுப்புக்குளம் பகுதியில் உள்ள மாமனார் ஒருவருடைய மரண நிகழ்வில் கலந்து கொண்டு இருந்த வேளை, பொருள் ஒன்றை வாங்குவதற்காக உடுப்புக் குளம் சந்தியிலுள்ள வர்த்தக நிலையத்திற்கு தன்து உடன் பிறவா சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை வீதியின் முன்னால் பயணித்த மீன் கொண்டு செல்லும் கூலர் ரக பிக்கப் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே மாணவன் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளார்

இவருடன் கூடப் பயணித்த சுந்தரம் - துசி யந்தன் வயது - 20, என்பவர் படுகாயமடைந்த நிலையில் வீதியால் சென்ற பொது மக்களினால் மீட்கப்பட்டு முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற முல்லைத் தீவு பொலிஸார் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு முள்ளியவளை மாஞ்சோலையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன், விபத்துக் குள்ளான வாகனங்களை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன், கூலர் வாகனத்தின் சாரதியையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# உருமலையில் 33 கிலோ 925 கிராம்'கசிஸ்' போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் கைது

(மன்னார்)

தலைமன்னார் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட உருமலை பகுதியில்33 கிலோவும் 925, கிராமும் நிறையுடைய "கசிஸ்" எனப்படும் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக தலை மன்னார் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் மாவட்டத்தில் உள்ள விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து உருமலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது, தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 34 வயதான குடும்பஸ்தர் ஒருவரே கைது செய் யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை மன்னார் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளதாக தலை மன்னார் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (2-15)




# அனுமதியின்றி ஆற்றுமணல் ஏற்றிய இரு உழவுஇயந்திரங்கள் சிக்கின

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட புளியம்பொக்கணைக் கிராமப் பகுதியில் வைத்து அனுமதிப்பத்திரத்திற்கு முரணாவகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த 2 டிப்பர் வாகனங்களை கைப்பற்றியுள்ளதுடன்,

சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 2 பேரையும் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். டபிள்யூ. விமல குணரட்ன தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 12.10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து. குறித்த கிராம பகுதியில் வைத்து ஆற்று மணலை ஏற்றி பயணித்த 2 டிப்பர் வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகளும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப் பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

# 68 சமுர்த்தி வெற்றிடங்கள் ஐந்து பேருக்கு மட்டும் நியமனம்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 68 சமுர்த்தி வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதும் ஐந்து பேருக்கே நியமனம் வழுங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் சமுர்த்தி திணைக்களத்தின் கீழ் தற்போது 68 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆனால் கடந்த 15 ஆம் திகதி சுகததாச விளையாட்டரங்கில் வைத்து நாடளாவிய ரீதியில் சமுர்த்தி நியமனம் வழங்கப்பட்டது. இதில் கிளி நொச்சி மாவட்டத்திற்கு ஐந்து நியமனங்களே வழங்கப் பட்டுள்ளன.

இதேவேளை யாழ். மாவட்டத்திற்கு 45 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 42 பேருக்கும், சமுர்த்தி உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் கிளிநொச்சியில் மட்டுமே வெற்றிடம் அதிகமாக காணப்படுகின்ற போதிலும் நியமனம் மிகமிக குறைவாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய சில மாவட்டங்களில் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் அழுத்தங்கள் கோரிக்கைகளுக்கு ஏற்ப அதிகளவான புதிய நியமனங்கள் வழுங்கப்பட்டுள்ளன.

ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய சமுர்த்தி நியமனம் தொடரபில் மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் அக்கறை செலுத்தாமையும் இந்த நிலைமைக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது எனவும் குறிப்பிடப் படுகிறது.

கிளிநொச்சி மாவட்டதில் 2015 ஆம் ஆண்டு 11734 சமுர்த்தி பயணிகள் குடும்பங்கள் காணப்பட்ட போதும் தற்போதும் அவற்றில் குறைவு ஏற்பட்டு 11556 ஆக காணப்படுகிறது. (2-312)

# மேல் மாகாணசபை விவசாய,மீன்பிடி அமைச்சின் உயர் மட்ட அதிகாரிகள் வடக்கு விஜயம்



மேல்மாகாண சபையிலுடைய விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சர், துணை முதல்வர், மேல் மாகாண சபையின் அவைத் தலைவர், பிரதி அவைத் தலைவர், மேல்மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சின். செயலாளர் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் வடக்கு மாகாணத்தின் விவசாயம், கால்நடை அபிவிருத்தி போன்ற விடயங்களை ஆராயும் முகமாக மூன்று நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்துள்ளனர்.

இவர்களை வரவேற்கும் நிகழ்வில் வடமாகாண நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், மாகாண கால்நடை அபிவிருத்தி பணிப்பாளர், மாவட்ட பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்வானது வவுனியா பூந் தோட்டத்தில் அமைந்துள்ள கால்நடை அபிவிருத்தி திணைக்களத்தில் கடந்த 24 ஆம் திகதி பிற்பகல் 3மணியளவில் இடம் பெற்றது. (2)

# போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை சர்வமதப் பேரவை குழுவினர் சந்தித்தனர்



(பரந்தன்)

கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை இலங்கை சர்வமதப் பேரவையின் குழுவினர் நேற்றுக்காலை சந்தித்துள்ளனர்

இதன்போது அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களினது பிரச்சினைகள் சம்பந்தமாக கேட்டு தெரிந்து கொண்டதுடன் இப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு தமது பூரண ஆதரவு எப்பொழுதும் இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

இச் சந்திப்பில் இலங்கை சர்வமதப் பேரவையின் இணைப்பாளர்கள்,அங்கத்தவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

## 37ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கும்

# ஆசிரிய உதவியாளர்களின் போராட்டம் நியாயமானது

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர் உதவியாளர்கள் தங்களது நியமனத்தை ஆசிரியர் தரத்திற்கு உயர்த்தி, நிரந்தரமாக்குமாறும் கொடுப்பனவை அதிகரித்து தருமாறும் கோரி, மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும், கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும் போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர்.



இந்தநிலையில், இவர்களின் போராட்டம் நியாயமானது, கூடிய விரைவில் இவர்களுக்கான தீர்வு கிடைக்கும் என்று, கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்டு வரும் கல்விமாணி பட்டப்படிப்புக்கான கிளை ஒன்று, கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நிறுவப்பட்டுள்ளது. இதனை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆசிரியர் உதவியாளர்களின் போராட்டம் நியாயமானது. தற்போது கிடைக்கும் வருமானத்துடன் ஒப்பிடுகையில்வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாது. வர்த்தமானி அறிவித்தலின் படியே ஆசிரியர் உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இவர்களின் கொடுப்பனவு 4000 ரூபாவில் இருந்து 10,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது இவர்கள் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்று வருகின்றார்கள். இன்னும் 6 மாதத்தில் பயிற்சி முடிவடைந்து விடும். அதற்கு பிறகு இவர்களுக்கு 37,000 ரூபா சம்பளம் கிடைக்கும். அது வரைக்கும் பொறுத்திருக்க வேண்டும்.

ஆசிரியர் தொழில் செய்வதற்கு கட்டாயம் அந்த தொழில் தொடர்பில் பயிற்சி அவசியம். முழுமையான பயிற்சிகள் முடிவுறும் போதே இவர்கள் ஒரு முழுமையான ஆசிரியர்களாகின்றனர்.

அண்மையில், இவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கேட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். இதற்கான தீர்வை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியாது சற்று பொருந்திருந்து தான் பெற்றுக் கொள்ள வேண்டும். கொடுப்பனவு உட்பட இவர்களின் ஆசிரியர் தரத்தை மாற்றுவது என்றால் அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். அங்கு அனுமதி பெற வேண்டும். திறைசேரியிலும் பொது நிர்வாக சேவையிலும் அனுமதி பெற வேண்டும். இவை அனைத்தும் உடனடியாக நடந்துவிடாது.

அதற்கு இன்னும் சில காலம் பொருத்திருந்தால் இவர்களின் அனைத்து கோரிக்கைகளும் பயிற்சி முடிவின் பின் நிறைவேறும். நான் கல்வி இராஜாங்க அமைச்சராக வந்த பிறகுதான் இவர்களின் நியமனத்தை போராடி பெற்றுக் கொடுத்தேன். அதே போல் இவர்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பேன். இவர்களின் நலன் கருதி தற்போது கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை பல்வேறு வளர்ச்சி படிகளை நோக்கி செல்கின்றது.

இதன் அபிவிருத்திக்காக 85 மில்லின் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல் இலங்கையில் உள்ள ஏனைய ஆசிரியர் கலாசாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஆசிரியர் தொழில் என்பது புனிதமானது, அந்த தொழிலை செய்யும் பாக்கியம் யாருக்கும் கிடைக்காது, அது உங்களுக்கு கிடைத்திருப்பதை இட்டு சந்தோஷம் அடையுங்கள். உங்களுக்குதான் கல்வியாளர்களையும் வைத்தியர்களையும் சட்டத்தரணிகளையும் பொறியியலாளர்களையும் உருவாக்க முடியும்.

மனித வாழ்வில் உயர்ந்தவர்கள், உயர் பதவிகளில் இருப்பவர்களின் வளர்ச்சிக்கு ஆசிரியர்களே காரணமாக இருந்துள்ளார்கள். ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு கல்வியே பெரும் மூலதனமாகும்.

அதனை உற்பத்தி செய்யும் ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டியது கட்டாயமானதாகும். அதை நான் கட்டாயம் செய்வேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேசிய இளைஞர் விருது வழங்கல் நாளை

(ஏறாவூர்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 39ஆவது தடவையாக நடத்தும் தேசிய இளைஞர் விருது வழங்கும் விழா நாளை 28ஆம் திகதி மாலை 6 மணிக்கு மஹரகம தேசிய இளைஞர் நிலையத்தில்தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்/பணிப்பாளர்நாயகம் சட்டத்தரணி.டப்.ஜி. எஸ். எரந்திக தலைமையில்நடைபெறும்.

இவ்விழாவில்தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்நிரோஷன் பெரேரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மேற்படி விழாவில் விருது பெறும் இளைஞர், யுவதிகளின் பெயர் விபரங்கள்,

சாஸ்திரிய வாத்தியம் (மிருதங்கம்)- ரி.துவாரகன்-யாழ்ப்பாணம், பரதநாட்டியம்-தனி (ஆண்)-கே.ரிஷிவர்மன்-யாழ்ப்பாணம், பரதநாட்டியம்- தனி (பெண்)- எஸ்.கிசானி-மட்டக்களப்பு, கவிதை ஆக்கம்-மீரா முகைதீன் துஷாட்-திருகோணமலை, கட்டுரை-என்.அபிராமி-கிளிநொச்சி, சிறுகதை-ஜே.ஜெகன்-முல்லைத்தீவு, இளம்பாடகர்-(தனி) இசினி அவிஸ்கா பண்டார-கொழும்பு, கிராமியப் பாடல்-தனி (ஆண்)-வி.அருசாந்த்- யாழ்ப்பாணம், கிராமிய நடனம்-(குழு)(ஆண்கள்) ஜே.கஜவேல் குழுவினர்- யாழ்ப்பாணம், கிராமிய நடனம் (குழு) (பெண்கள்)-ரி.சஜிபா குழுவினர், கிராமிய பாடல்-(தனி) (பெண்) எஸ்.கிருஸ்ஷிகா-கிளிநொச்சி, கிராமிய நடனம் (கலப்பு) எல்.வர்சா குழுவினர்- மட்டக்களப்பு, புத்தாக்க நடனம்-(ஆண்கள்) விதுர்ஷன் குழுவினர்-யாழ்ப்பாணம், புத்தாக்க நடனம் (பெண்கள்) என்.அபிராமி குழுவினர் - யாழ்ப்பாணம், புத்தாக்க நடனம்-(கலப்பு) ஆர்.ராஜ்குமார் குழுவினர்-கிளிநொச்சி, பேச்சு-ஸ்ரீசிவஸ்கந்தஸ்ரீ-கிளிநொச்சி, அறிவிப்பாளர்-ஏச்.ஜி. உசாந்தன்-யாழ்ப்பாணம், சாஸ்திரியப்பாடல்-(தனி) (பெண்) எஸ்.வாசுகிசர்மா-கொழும்பு, சாஸ்திரியப் பாடல் (தனி) (ஆண்) ரி.ரஞ்சித்கு மார்-யாழ்ப்பாணம், மேலைத்தேய வாத்தியம்-(ஓகன்) ரி.துவாரகன்-யாழ்ப்பாணம்,

மாற்றுத் திறனாளிகள்

புத்தாக்க நடனம் (தனி) (ஆண்)-ஏ. அனுஜன்-யாழ்ப்பாணம், புத்தாக்க நடனம்-(தனி)(பெண்) ரி.மோகனராணி-கிளிநொச்சி, அறிவிப்பாளர்-வி.விஜயலாதன்-யாழ்ப்பாணம், இளம் பாடகர்-வி.விஜயலஷ்மி-யாழ்ப்பாணம், கிராமியப்பாடல்-தனி (பெண்)-வி.விஜயலஷ்மி-யாழ்ப்பாணம், கிராமியப்பாடல்-தனி(ஆண்)-என். அமல நிதுஷன்-யாழ்ப்பாணம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குடும்பப்பெண் படுகொலை! சந்தேக நபரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

தெரணியகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராங்வல, மாலிபட பிரதேசத்தில் பெண்ணொருவர் கூரிய ஆயுதத்தினால் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரது சடலம் கொலை நடந்த இடத்திலிருந்து சுமார் 60 மீற்றர் தொலைவில் இருந்து பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்டுள்ள பெண் மாலிபட பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான கமராலலாகே காந்தி ஹேமலதா என அடையாளங்காணப்பட்டுள்ளதாகவும், சந்தேக நபரினால் தாக்குதலுக்கு இலக்கான அவரது 4 மற்றும் 7 வயதான குழந்தைகள் தெரணியகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவிசாவளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சடலமாக மீட்கப்பட்டுள்ள குறித்த கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஹிங்குல-மாலிபட பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதான நபர்எனவும்பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# கருணாவின் கட்சியும் பிள்ளையானின் கட்சியும் இணைவது தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வி

(மட்டக்களப்பு)

முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது. தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் வி.கமலதாஸ் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இணைந்து செயற்படுவது தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடப்படும்நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடனும்பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அதன் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன், வி.கமலதாஸ் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து வெளியிடுகையில்,

எமது கட்சி ஏனைய பல கட்சிகளுடன் பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றது. அதனடிப்படையில் அண்மையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் பூபாலப்பிள்ளை பிரசாந்தன் எந்தவொரு கட்சியினருடனும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவுள்ளதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பலரின் எதிர்பார்ப்பிற்கு மத்தியில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருடன் இச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் பேசப்பட்ட விடயம் குறித்து இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை. இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவதில்லை என்றும், இருப்பினும் இரு கட்சிகளுக்குமிடையில் நல்லெண்ணத்தைப் பேணிக் கொண்டு செயற்படுவதெனவும் முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்: IT Diploma
கனடா
தொ.இ: B/7225

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்
தொ.இ: B/7226

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5’8"
தகைமை/தொழில்: B.Tec.(civil)
தொ.இ: B/7227

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 42.5
உயரம்: 5’10"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: B/7228

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 6 செவ் 12 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/6192

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 32
உயரம்: 5’5"
தகைமை/தொழில்: GAQ
தொ.இ: G/6195

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 37 செவ் 2 இல்
உயரம்: 166cm
தகைமை/தொழில்: Bsc(Food and Nutrition)
தொ.இ: G/6198

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 23.5 செவ் 4 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: நூலகர்
தொ.இ: G/6201

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# எதிர்ப்பையும் மீறி மன்னார் தென்கடலில் நூறு பொறிவலைகளுக்கு அனுமதி

## மீன்பிடியாளர்கள் பெரும் பாதிப்பு; கடற்சூழலுக்கும் அச்சுறுத்தல்



2017 ஒக்டோபர் மாத இறுதிப் பகுதியில் நூறு (100)பாரிய ஜாக் கொட்டு வலைகளுக்கு சில நிபந் தனைகளுடன் அனுமதி வழங்கு மாறு மீன்பிடி அமைச்சின் பணி ப்பாளர் நாயகத்தினால் மன்னார் கடற்றொழில் பணிப்பாளருக்குப் பணிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நிபந்தனைகள்

நூறு (100) பொறிவலைக ளுக்கு இரு வருட தற்காலிக அனுமதி.

வங்காலை கரையிலிருந்து 6 கி.மீ. தொலைவில் 36 ச.கி. மீ.பரப்பளவில் பயன்பாடு.

இருவலைகளுக்கிடையி லான இடைவெளி 300மீ.

வலையின் கண் அளவு 1.1/4 அங்குலம்

வேலிவலையின் நீளம் 75மீ.

வங்காலை மீனவர்கள் பயணிப்பதற்கு 250 மீ.நீள மான பாதை

ஒவ்வொரு பொறிகளிலும் இரவு நேர வெளிச்சம் போடு தல் வேண்டும்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாததும், நடைமுறைச்சாத்தியமுமற்ற மேற் குறித்த நிபந்தனைகளைக் கொண்ட இந்த அனுமதியினை ஏற்றுக் கொள்ள முடியாது என மீனவர் கள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய ஒரு முடிவானது மீனவர்களிடையே ஏற்கனவே தோன்றியுள்ள முறுகல் நிலமை கள் தீராத ஒரு பகையினை வளர்த் தெடுக்கவே உதவப்போகிறது என வும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கூறுகின்றனர். இலங்கையின் தெற்குப்பகுதிகளில் எப்பாகத்திலும் இந்த மீன்பிடி நடைமுறையில் இல்லை என்பது இங்கு குறிப்பி டத்தக்கது. எனினும் சில வருடங் களாக மன்னார் (Gulf of Mannar) தென்கடலில் ஆழமான கடற் பரப்பில் மன்னார் பட்டின கரை யோரப் பகுதி சார்ந்த சில மீன வர்கள் வலைகளின் அடியிலே கூரான இரும்புக்கம்பிகள் மற்றும் மண்மூடைகளைக்கொண்டு கட்டு வலை எனப்படும் (ஜாக் கொட்டு) முறையற்ற இப்பொறிகளை நிலை நிறுத்தி மீன்பிடியிலே ஈடுபட்டு வருவது ஆய்வுகள் மூலம் கண்டறி யப்பட்டுள்ளது. இதனால் வழிச்சல் வலை மற்றும் கரைவலை மேற் கொள்ளும் தாழ் வபாடு, வங்காலை நறுவிலிக் குளம்,அரிப்பு, அச்சங்கு ளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெருந் தொகையான மீன்பிடியாளர் களின் வாழ்வாதாரம் மிக மோச மாகப் பாதிப்படைந்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இப்பொறியின் அடியில் பல கூரான இரும்புக் கம்பிகளும், பல மண்மூடைகளும் பொருத்தப்பட் டுள்ளதால் அப்பகுதியிலுள்ள பவ ளப்பாறைகளுக்கும் பலத்த சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதுடன் அரு கிவரும் உயிரினமான கடல் ஆமைகளும் இப்பொறிகளுக்குள் அகப்பட்டு அழிவடை வதையும் அவதானிக்க முடிந்துள்ளது.

கடற்றொழில் கட்டளைச்சட்டம் 1996 இல.2 பிரிவு 1அ.இன்படி ஆபத்து விளைவிக்கும் (harmful substance) பொருட்களைப் பயன் படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் 2008 ஆம் ஆண்டு 35ஆம் இலக்க கட்டளைப்படி கம்பிகள் கொண்ட வலைகள் அமைப்பது வும் தடுக்கப்பட்டுள்ளது.

இப்பொறி வலைகளினால் பாதி ப்புற்ற இப்ப குதி மீனவர்களின் முறைப்பாட்டை யடுத்து 2013 இல் மன்னார் நீதிம ன்று இரும்புக்கம்பி பொருத்திய பட்டிகளை அகற்ற பணித்திருந்தது. இதற்கப்பால் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்களில் (21.07.2015 மற்றும் 15.10. 2015 ஆகிய திகதிகளில் நடை பெற்றவை).

இத்தகைய பட்டிகளை அகற்று மாறும் தீர்மானம் நிறை வேற் றியிருந்தது. ஆயினும் இத்தகைய ஆபத்தான முறையற்ற மீன் பிடிச் செயற்பாடுகளை நிறுத்த சம்பந் தப்பட்ட அதிகாரிகளும் இப்ப குதி அரசியல்வாதிகளும் தவறியி ருந்த னர். இத்தொழில் இன்றும் தங்கு தடையின்றி தொடருகின்றன.

தொடர்ந்தும் பாதிப்புற்ற மீன வர்களின் வேண்டுகோளின்படி கடந்த 23.12.2015 அன்று மீன்பிடி அமைச்சு அதிகாரிகள் மன்னார் பகுதிக்கு வருகை தந்து கடலின் கள நிலைமைகளை நேரில் அவ தானித்து அதன் ஆபத்துக்களை மதிப்பீடு செய்து 15.01.2017 இற்கு முன்னர் முறையற்ற அப்பொறி வலைகளை அகற்ற பணித்துச் சென்றனர்.

ஆயினும் கடற்றொழில் திணைக்களம் இதிலும் உரிய நட வடிக்கைகளை எடுக்கத் தவறியி ருந்தது. மாவட்டத் திணைக்களத் தின் அசமந்தமான செயற்பாடுக ளில் அதிருப்தியுற்ற மீனவர்கள்



கடற்றொழில் அமைச்சுக்குச்சென்று செய்த முறைப்பாட்டையடுத்து அமைச்சின் அதிகாரிகளும் "நாரா" நிறுவன அதிகாரிகளும் மீண்டும் பாதிப்புற்ற பகுதிக்கு வருகை தந்து கடலில் ஆய்வுப்பணிகளை மேற் கொண்டதுடன் பாதிப்புறும் மீனவர் களையும் சந்தித்து அவை தொடர் பாக தகவல் திரட்டி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அதனடிப்படையில் கடற்றொ ழில் அமைச்சு மாவட்டத் திணைக் கள பணிப்பாளருக்கு சுற்றுநிருபம் ஒன்றை 21.12.2016இல் அனுப்பி யிருந்தது. அதிலே 1996 இல.2இல் உள்ளவாறு (17) பதினேழு வகை யான தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்குள் குறித்த ஜாக்கொ ட்டு Jakkottu முறையினைச் சேர்க்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இதன் பாதிப்புக்கள் பற்றி அறிந்திருந்தும் 2017 ஒக் டோபர் மாத இறுதிப்பகுதியில் சில நிபந்தனைகளுடன் நூறு (100) பாரிய ஜாக்கொட்டு வலைகளுக்கு அனுமதி வழங்குமாறு மீன்பிடி அமைச்சு பணிப்பாளர் நாயகத்தி னால் மன்னார் கடற்றொழில் பணிப்பாளருக்குப் பணிக்கப்பட்டுள் ளதாக மீனவர்கள் தெரிவித்துள் ளனர். குறித்த நிபந்தனைகள் எவையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத தும், நடைமுறையில் சாத்தியப்படக் கூடியதுமல்ல. ஆயினும் சம்பந் தப்பட்ட மன்னார் திணைக்கள அதிகாரியினால் அவசர அவசர மாக குறித்த பொறிவலை மீனவர்க ளுக்கு பாஸ் வழங்கியதாகவும் அனுமதிபெற்ற மீனவர்கள் துரித மாக மீண்டும் மன்னார் தென் கடலில் பொறிவலைகளை அமைத் துள்ளதாகவும் இதனால் பாதிப் படைந்த அப்பகுதி சிற்றளவு மீன் பிடியாளர்கள் கடற்றொழில் அமைச் சின் இந்த பொறுப்பற்ற செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி பிரதேச செயலாளரிடமும் முறை யிட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

கடந்த 20.12.2017இல் கள ஆய்வின்போது நூற்றுக்கு மேற் பட்ட பொறிகளும் வலைகளின் அடி யிலே பொருத்தப்பட்டுள்ள இரும்புக் கம்பிகளும், பெருந்தொகையான மண்மூடைகளும் வலைகளின் அடியிலிருந்து வெளியே எடுக்கப்பட் டன. (படம்).

மிகச் சிலரால் மேற்கொள்ளப் பட்டு வருகின்ற முறையற்ற , ஒழு ங்குபடுத்தப்படாத (unregulated) இத்தகைய மீன்பிடி முறையினால் பின்வரும் பாதிப்புக்கள் ஏற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

பாதிப்புக்கள்

1. குறித்த கரையோரத்தில் வழி ச்சல் வலை (*drift net*) மற்றும் கரைவலை (***beach seine***) மீன்பிடியில் ஈடுபடுவோரின் உற் பத்தி பாதிப்படைகிறது. இதனால் அவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்படைகிறது.

2. வழிச்சல்வலைகள் நகரும் போது நிரந்தரமாக அமைக்கப் பட்டுள்ள பொறிவலைகளில் சிக்கு ண்டு போவதால் அவ்வழிச்சல் வலைகள் சேதமடைகின்றன இத னால் பெரும் நட்டத்திற்குள்ளா கின்றனர்.

3. குறித்த கடற்பரப்பிலுள்ள பவளப்பாறைகளும் (Vankalai reef and Arippu reef) அருகி வரும் உயிரினமான கடல் ஆமை களும் (Turtle) பெரும் அழிவுக் குள்ளாகின்றமை கண்டறியப்பட் டுள்ளது.

4. கரையோரத்தில் மண் அக ழப்பட்டு அவை மூடைகளாக கட்டப்பட்டு பொறிவலைகளுக்குப் பாது காப்பு அரணாகப் பயன்படுத்தப பட்டு வருவதால் கரையோரப் பகுதிகள் அரிப்புக்குள்ளாகின்றன.

5. இரவுவேளைகளில் மீன வர்கள் கடலில் பயணம் செய்ய முடியாதநிலை.

6. மீனவர்களுக்கிடையே முறு கல் நிலையும் கடலில் கைகலப் புக்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்க ளும் இடம்பெறுவதாக மீனவர்கள் கூறுகின்றனர்.

ஆகவே இத்தகைய மீன்பிடி முறையினை உடனடியாகத் தடைசெய்யப்பட்ட 17 வகை மீன் பிடி முறைகளுக்குள் உள்வாங்கி மீனவர்களையும் கடல் வளங்க ளையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

பரிந்துரைகள்

மாவட்ட கடற்றொழில் திணை க்களமானது.

1. குறித்த பொறிவலைகள் மன் னார் குடாக்கடலிலுள்ள (Gulf of Mannar) பவளப்பாறைகள் மற் றும் கடல் ஆமைகள் போன்ற வற்றுக்கு அச்சுறுத்தலாக உள்ள தால் களப்புக்கள் தவிர்ந்த ஏனைய திறந்த வெளிக்கடலில் முற்றிலும் இதனை தடைசெய்து தடைசெய் யப்பட்ட மீன்பிடிமுறைகளுக்குள் இதனை உள்வாங்க ஆவன செய் தல் வேண்டும்.

2. இதனைப் பயன்படுத்தும் பாதிப்படையும் மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கி இதனைக் கைவிட ஏற்பாடு செய்தல். அல்லது மாற்றுத்தொழில் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படல் வேண்டும்.

3. தடையை மீறுவோருக்கெ திராக உரிய சட்ட நடவடிக்கை எடுத்தல்.

4. இப்பொறிவலைகளினால் உண்டாகும் பாதிப்புக்கள் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் உரியவர்களுக்கு வழங்குதல்.

5. கண்காணிப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

பேராசிரியர்
சூசை ஆனந்தன்

## பாரதம்

# நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் சசிகலாவை விசாரிக்க முடியாது

## வருமானவரி துறைக்கு சிறை அதிகாரி கடிதம்



(பெங்களூர்)

நீதிமன்ற அனுமதி இல்லாமல் சசிகலாவை விசாரிக்க முடியாது என்று வருமான வரித்துறைக்கு சிறை அதிகாரி கடிதம் அனுப்பியுள்ளார்.

சொத்துகுவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள்சிறைதண்டனை விதிக்கப்பட்ட சசிகலா, இளவரசி ஆகியோர் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சில நாட்களுக்கு முன்பு சசிகலாவின் உறவினர்கள், ஆதரவாளர்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடிச் சோதனை நடத்தினர்.

ஜெயா தொலைக்காட்சி அலுவலகம், ஜாஸ்சினிமாஸ், நமது எம்.ஜி.ஆர்., உட்பட பல நிறுவனங்களில் தொடர்ந்து 5 நாட்கள் நடந்த சோதனையின் போது முக்கிய ஆவணங்கள் சிக்கியது. ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. இதில் ஜெயலலிதா, சசிகலா ஆகியோரின் சொத்து தொடர்பான முக்கிய ஆவணங்கள், பென்டிரைவ், லப்-டொப் ஆகியவை சிக்கியது.

இதுதொடர்பாக சசிகலாவின் உறவினர்களான விவேக், கிருஷ்ணபிரியா, ஷகிலா ஆகியோரிடம் வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணையின் போது ஜெயா டிவி., ஜாஸ்சினிமாஸ், நமது எம்.ஜி.ஆர்., ஆகிய நிறுவனங்களில் 2015ஆம் ஆண்டுக்கு பிறகே நாங்கள் நிர்வாகிகளாக பொறுப்பேற்றுக்கொண்டோம். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எங்களுக்கு தெரியாது, என்று பதிலளித்தனர்.

இதையடுத்து 2015ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த நிறுவனங்களை நிர்வகித்து வந்த சசிகலா, இளவரசியிடம் விசாரணை நடத்த வருமான வரித்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர். அவர்களிடம் விசாரணை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கோரி பெங்களூர் சிறை அதிகாரி சோமசேகருக்கு வருமான வரித்துறை அதிகாரிகள் கடிதம் அனுப்பினார்கள்.

சசிகலாவிடம் விசாரிக்க எந்த நேரத்திலும் வருமான வரித்துறை அதிகாரிகள் பெங்களூர் சிறைக்கு வருவார்கள் என்று தகவல் வெளியானது.

இதுதொடர்பாக சசிகலாவை அவரது சட்டத்தரணி சந்தித்து பேசினார்.

இந்த நிலையில் சிறை அதிகாரி சோமசேகர் சென்னையில் உள்ள வருமான வரித்துறை மண்டல இயக்குநருக்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது,

சசிகலாவும், இளவரசியும் குற்ற வழக்கில் உச்ச நீதிமன்றால் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். கைதிகளிடம் விசாரணை நடத்த நீதிமன்ற அனுமதி வேண்டும். நீதிமன்ற அனுமதி இல்லாமல் விசாரணை நடத்த அனுமதிக்க முடியாது.

கர்நாடக மாநில சிறை விதிகளின்படி நீதிமன்ற உத்தரவு இருந்தால் மட்டுமே வருமானவரித்துறை விசாரணைக்கேற்ற நாள், இடம் ஆகியவற்றை ஒதுக்கித் தர முடியும். அரசுதுறை ரீதியான கடிதம் மட்டுமே அதற்கு போதுமானது அல்ல. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சசிகலாவிடம் விசாரணை நடத்துவதில் திடீர் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வருமான வரித்துறை அதிகாரிகள் சசிகலா மற்றும் இளவரசியிடம் விசாரணை நடத்துவதற்கு அனுமதிக்கக் கோரி பெங்களூர்மாநகர நீதிமன்றில் மனுதாக்கல் செய்ய முடிவு செய்துள்ளனர்.

இன்னும் ஓரிரு நாளில் இதுதொடர்பாக நீதிமன்றில் மனுதாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

நீதிமன்ற அனுமதி கொடுக்கும் பட்சத்தில் சசிகலாவிடம் விசாரணை நடத்த அவர்கள் முடிவு செய்துள்ளனர். (இ-7)

## மகுமெரி நகரைக் கைப்பற்றிய போகோஹறாம் தீவிரவாதிகள்



(மைதுகுரி)

நைஜீரியா போர்னோ மாகாணத்திலுள்ள மகுமெரி நகரை போகோஹறாம் தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நைஜீரியாவில் ஒரு மதத்தின் அடிப்படையிலான அரசாங்கத்தை நிறுவ வேண்டும் என்ற நோக்கத்துடன் போகோஹறாம் தீவிரவாத அமைப்பினர் 2002ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு முதல் அவர்கள் ஆயுதப்போராட்டத்தை கையில் எடுத்துள்ளனர். ஆட்களை கடத்துவதும், படுகொலைகள் செய்வதும் அவர்களின் அன்றாட வழக்கமாகி விட்டது. சில நகரங்களை தாக்குதல் மூலம் கைப்பற்றி அவற்றை தங்கள் கட்டுப்பாட்டிலும் வைத்துள்ளனர். அவர்களுடன் இராணுவத்தினர் சண்டையிட்டு தீவிரவாதிகள் பிடியில் இருக்கும் நகரங்கள் மீட்டு வருகின்றனர்.

இந்நிலையில், வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள போர்னோ மாகாணத்திற்கு உட்பட்ட மகுமெரி நகரை தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலால் அங்கு வசித்து வரும் மக்கள் அருகிலுள்ள காடுகளுக்கு பயந்து ஓடி விட்டதாகவும் கூறப்படுகிறது.

அப்பகுதியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியது உண்மைதான் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இருப்பினும் அந்நகரை தீவிரவாதிகள் முழுமையாக கைப்பற்றியது பற்றி எந்த தகவலையும் அவர் வெளியிடவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன் இப்பகுதிக்கு அருகில் உள்ள அதாரேவா பகுதியில் ஒரு மசூதியில் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 50இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## துரோகிகளை வீழ்த்துவோம்

### தினகரன் சூளுரை

(கோவை)

ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் போட்டியிட்டு நான் வெற்றி பெறுவது உறுதி என்று டிடிவி.தினகரன் தெரிவித்தார்.

கோவை பீளமேட்டில் அ.தி.மு.க அம்மா அணி துணை பொதுச்செயலாளர் டி.டி.வி தினகரன் நேற்று நிருபர்களிடம் பேசும் போது,

இரட்டை இலை சின்னம் தொடர்பாக ஓ.பி.எஸ் கேவியட் மனுத் தாக்கல் செய்து இருப்பது என்பது வழக்கமான நடவடிக்கைதான். நீதிமன்றத்தில் இரட்டை இலை சின்னம் கொடுக்கக்கூடாது என கேட்போம். இடைத்தேர்தலில் எந்த சின்னம் கொடுத்தாலும் பரவாயில்லை.

இடைத்தேர்தலில் சின்னம் முக்கியமில்லை. வேட்பாளர் யார் என்பதுதான் முக்கியம். ஆர்.கே.நகர் பகுதி மக்கள் தெளிவாக இருக்கின்றனர். இடைத்தேர்தலில் இரட்டை இலையை வீழ்த்தி அதை மீட்க வேண்டியிருக்கின்றது என்பதுதான் வருத்தமாக இருக்கின்றது. சின்னம் என்பது இரண்டாம் பட்சம் தான். சின்னம் இருந்தால் தான் வெற்றி பெற முடியும் என்ற காலம் இதுவல்ல.

சிலீப்பர் செல் சட்டமன்றத்தில் வாக்கெடுப்பின் போது வெளியே வருவார்கள். எதிரிகளையும், துரோகிகளையும் இந்த தேர்தலில் வீழ்த்துவோம். இடைத்தேர்தல் அறிவிக்க வேண்டும் என்பதற்காக சாதிக்அலி வழக்கை காட்டி தேர்தல் ஆணையத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இடைத்தேர்தலில் டெபாசிட் கூட வாங்கமாட்டார் என மைத்ரேயன் தெரிவித்துள்ளார். அவர் சொந்த தொகுதியிலேயே ஜெயிக்க முடியாதவர். அவருக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை.

டிசெம்பர் 24ஆம் திகதி யார் டெபாசிட் இழக்கின்றனர் என்பது தெரியவரும். இந்த ஆட்சியை வீட்டிற்கு அனுப்புகின்றதே இடைத்தேர்தலில் மக்களுக்கு கொடுக்கின்ற முதல் வாக்குறுதி. யாருடனும் கூட்டணி குறித்து இதுவரை பேசவில்லை.

எனது வீட்டிலும் உறவினர்கள் வீடுகளில் சோதனைகளில் எதுவும் வருமான வரித்துறை கைப்பற்றவில்லை. சில ஆவணங்களை எடுத்து சென்றுள்ளனர்.

இரட்டை இலை என்பது வரமல்ல என்பதை எடப்பாடி பழனிச்சாமி, பன்னீர் செல்வம் அணிக்கு விரைவில் புரிய வைப்போம். ஆர்.கே.நகர் அ.தி.மு.க.வின் கோட்டை, நிச்சயம் எங்கள் அணி வெற்றி பெறும். ஆர்.கே. நகர் தேர்தலில் போட்டியிட்டு நான் வெற்றி பெறுவது உறுதி. இதில் தொப்பி சின்னம் கேட்பேன். தேர்தல் ஆணையம் எந்த சின்னம் வழங்கினாலும் பெற்றுக் கொண்டு போட்டியிடுவேன்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர போகின்றேன் என சொன்னதற்கே டில்லிக்கு ஓடுகின்றனர். அவர்கள் டில்லிக்கு ஓட வேண்டும் என்பதற்காகவே வழக்கு தொடர போவதாக சொன்னேன். இரட்டை இலையை மீட்க வழக்கு தொடரப்படும்.

சென்ற முறை தேர்தல் நிறுத்தியதற்கு காரணம் நான் ஜெயித்து விடுவேன் என்று நினைத்துதான். பணப்பட்டுவாடா என்பது தேர்தல் ஆணையம் முன்னிறுத்திய காரணமே தவிர பணப்பட்டுவாடா உண்மையில்லை.

இரட்டை இலை சின்னம் தீர்ப்பிற்கு சாதிக் அலி தீர்ப்பை மேற்கோள் காட்டுவது தவறு. எங்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பில் நிறைய தவறுகள் உள்ளன. இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஏ மற்றும் பி மனுவில் கட்சியின் பொதுச்செயலாளர் கையெழுத்து போட வேண்டும். இதுதான் சட்ட விதி. அங்கு கட்சியின் பொதுச்செயலாளரே இல்லை. ஒருங்கிணைப்பாளரும், இணை ஒருங்கிணைப்பாளரும்தான் இருக்கிறார்கள்.

எனவே எடப்பாடி - ஓ.பி.எஸ் அணியினர் ஏ பார்ம், பி பார்ம்-ல் யாரை வைத்து எந்த அடிப்படையில் கையெழுத்து போடப் போகிறார்கள் என்று தெரியவில்லை. அ.தி.மு.கவை தொடங்கிய எம்ஜிஆர் கொண்டு வந்த சட்டவிதியை மாற்றி விட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அகதிக

# கடலில்

## 25 பேர் உ



(திரிபோலி)

ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் நோக்கத்தில் லிபியா நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற அகதிகள் படகு திரிபோலி அருகே கடலில் க்விழ்ந்த விபத்தில் 25 இக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அங்கு அதிகாரப் போர் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. போராளிக் குழுக்களின மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்

# எகிப்து ம

# பலி எண்



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் வுடக்கு சினாய் மாகாணத்திலுள்ள மசூதியில் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் பலியானவர்களின் எண்ணிக்கை 305 ஆக உயர்ந்துள்ளது.

எகிப்து நாட்டின் வடக்கு சினாய் மாகாணத்தில் உள்ள அல் ராவ்தா மசூதி அருகே கடந்த 24 ஆம் திகதி வாகனத்தில் வந்த 4 தீவிரவாதிகள் சக்தி வாய்ந்த குண்டுகளை வெடிக்க வைத்தனர். தொடர்ந்து, துப்பாக்கி மூலம் மசூதிக்கு வெளியே இருந்தவர்களை குறிவைத்து சரமாரியாக தாக்குதல்களை நடத்தினர்.

இந்த தாக்குதலில் 184 பேர் பலியாகினர் என முதல் கட்ட தகவல்கள் வெளியாகின. நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பலனின்றி மேலும் பலர் பலியானதால் உயிரிழப்பு எண்ணிக்கை

# வெளிநாடு

# ...கள் சென்ற படகு ...ல் கவிழ்ந்து விபத்து

## உயிரிழப்பு



மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் செல்கின்றனர்.

பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் இந்த அகதிகள், ரப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதையாகி வருகிறது.

அண்மைக் காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 25 இலட்சத்தை எட்டியுள்ளது. இந்த ஆண்டில் இதுவரை சுமார் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் பேர் ஐரோப்பிய நாடுகளில் அடைக்கலம் அடைந்துள்ளனர்.

இதுதவிர, கடந்த ஆண்டில் மட்டும் இத்தாலி நாட்டுக்கு புகலிடம் தேடி வரும் வழியில் சுமார் ஐயாயிரம் பேர் காணாமல் போனதாகவும், கடலில் மூழ்கி இறந்துவிட்டதாகவும் தெரிகின்றது.

இருப்பினும், உள்நாட்டில் பசி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் இன்றும் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக படையெடுத்தபடியுள்ளனர்.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கு குடியேறும் நோக்கத்தில் நேற்று முன்தினம் லிபியா நாட்டிலிருந்து புறப்பட்டு சென்ற அகதி ள் படகு திரிபோலி அருகே கடலில் கவிழ்ந்த விபத்தில் 25 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர் நடுக்கடலில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த பலரை மீட்டு திரிபோலி துறைமுகம் பகுதியில் தங்க வைத்துள்ளனர். (இ-7)

பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து தப்பித்து உயிரைப் பாதுகாத்துக்கொள்ள லிபியாவில் வறுமை நிலையில் வாடும் மக்களில் பலர் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடி செல்கின்றனர்.

மேலும், உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்தும், வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான

# ...மசூதி குண்டுத்தாக்குதலில் ...ணிக்கை 305 ஆக உயர்வு



அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் வரை மசூதி தாக்குதலில் பலியானவர்கள் எண்ணிக்கை 234 என அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு இது வரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.


இதற்கிடையே, தீவிரவாதிகளின் இந்த தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இந்தியப் பிரதமர் மோடி ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் பலர் நேற்று உயிரிழந்துள்ளனர். இதனால் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலுக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 305 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், இந்த தாக்குதலில் பலியானவர்களுக்கு நினைவிடம் அமைக்க எகிப்து ஜனாதிபதி அப்துல் பதா எல் சிசி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# பாகிஸ்தானில் பயங்கரக் கலவரம்

## 10 பேர் பலி ! 200 பேர் படுகாயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் திடீரென ஏற்பட்ட பயங்கர கலவரங்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வருவதையடுத்து நிலைமையை சமாளிப்பதற்காக இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் சத்தியப் பிரமாணம் செய்யும்போது அதில் சில வரிகளை மாற்றி பிரமாணம் எடுக்கலாம் என சட்டத்துறை அமைச்சர் ஜஹித் ஹமீது அண்மையில் ஒரு சட்டத்திருத்தம் கொண்டுவர முயன்றார்.


இதற்கு பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் சில இஸ்லாமிய அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தன. மேலும் ஜஹித் ஹமீது இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

ஜஹித் ஹமீதுவுக்கு எதிராக பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு செல்லும் பிரதான வீதிகளில் கடந்த இரண்டு வாரத்திற்கும் மேலாக சில இஸ்லாமிய அமைப்புக்கள் இணைந்து முற்றுகை போராட்டம் நடத்தி வருகின்றன. இதனால் பல இலட்சம் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தன. இதையடுத்து பாகிஸ்தான் பொலிஸ் மற்றும் துணை இராணுவம், போராட்டக்காரர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசி, தடியடி நடத்தி விரட்டும் நடவடிக்கையை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது, போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் மோதல் வெடித்தது. போராட்டக்காரர்கள் பாதுகாப்பு படையினரை நோக்கி கல் வீசித் தாக்குதல் நடத்தினர். இதனால் போராட்டம் நடைபெற்ற இடம் போர்க்களமானது.

ஆனால் போராட்டக்கா





ரர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கையை நேரடி ஒளிபரப்பு செய்யக்கூடாது என்று பாகிஸ்தானிலுள்ள தனியார் தொலைக்காட்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசு தொலைக்காட்சியில் அரசியல் தொடர்பான விவாதங்கள்தான் காட்டப்படுகின்றன. போராட்டத்தை ஒடுக்கும் நடவடிக்கையை நேரடியாக ஒளிபரப்புக் கூடாது என்ற உத்தரவை பாகிஸ்தானில் மின்னணு ஊடகங்கள் ஒழுங்குமுறை ஆணையமான "பெம்ரா" பிறப்பித்துள்ளது. சமூக வலைத்தளங்களான பேஸ்புக், டுவிட்டர், யூடியூப் போன்ற சேவைகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்தப் போராட்டத்தினால் ஏற்பட்ட கலவரங்களில் பத்துப் பேர் உயிரிழந்துள்ளதாகவும் 200க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால், பாகிஸ்தானில் அவசர காலநிலை பிறப்பிக்கப்பட்டதை போன்ற சூழல் உருவாகியுள்ளது. நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருவதையடுத்து அதை சமாளிப்பதற்காக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# மியன்மார் எல்லையிலிருந்து வெளியேறிய 1,200 அகதிகள் மிஜோரம் மாநிலத்தில் தஞ்சம்

(ஐஸ்வால்)


மியன்மார் எல்லையிலிருந்து வெளியேறிய 1,200இற்கு மேற்பட்ட ரோஹிஞ்யா அகதிகள் மிஜோரம் மாநிலத்தில் நேற்று முன்தினம் தஞ்சமடைந்துள்ளனர். மியன்மார் நாட்டில் ரோஹிஞ்யா இனத்தை சேர்ந்தவர்கள் சிறுபான்மையினராக வசித்து வருகின்றனர். இவர்களை குறிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இதையடுத்து, அங்கிருந்து ரோஹிஞ்யா அகதிகளாக வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர். பங்களாதேஷத்தில் மட்டும் சுமார் 6 லட்சத்துக்கு மேற்பட்ட அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், மியன்மார் நாட்டில் இருந்து 1,200க்கு மேற்பட்ட ரோஹிஞ்யா அகதிகள் வெளியேறி மிஜோரம் மாநிலத்தில் தஞ்சம் அடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் கூறுகையில், மியன்மாரிலிருந்து 1,200 அகதிகள் நேற்று முன்தினம் மிஜோரம் மாநிலம் வந்தடைந்தனர். அவர்களில் புத்த மதம் மற்றும் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர்களே அதிகம். தஞ்சமடைந்த அகதிகள் பள்ளிகள் உட்பட பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ஜோர்ஜியாவில் அழகிப் போட்டி நடந்த கடற்கரை ஹோட்டலில் தீ விபத்து

## 11 பேர் பலி



(பதுமி)

ஜோர்ஜியாவின் கருங்கடல் கடற்கரையில் உள்ள ஹோட்டலில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 11பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். நேற்று முன்தினம் நள்ளிரவில் இங்குள்ள லியோகிராண்ட் ஹோட்டலின் ஒரு தளத்தில் திடீரென தீப்பிடித்தது. தீ வேகமாகப் பரவியதால் ஹோட்டலில் இருந்த வாடிக்கையாளர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடினர். மற்ற தளத்தில் தங்கியிருந்தவர்களும் வெளியேற்றப்பட்டனர்.

இருப்பிலும் அப்பகுதி முழுவதும் புகைமூட்டம் ஏற்பட்டதால் புகையை சுவாசித்த பலர் மயக்கமடைந்து விழுந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தகவல் அறிந்த தீயணைப்புப் படை வீரர்கள் விரைந்து வந்து தீயை கட்டுப்படுத்தினர்.

விபத்தில் தீக்காயம் அடைந்தும் புகையை சுவாசித்தும் பாதிக்கப்பட்ட 11 பேர் பலியானதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 11 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்த ஹோட்டலில்தான், கடந்த ஞாயிற்றுக்கிழமை மிஸ் ஜோர்ஜியா அழகிப் போட்டி நடைபெற்றது. அவர்களில் யாரும் ஹோட்டலில் இல்லாததால், அதிர்ஷ்டவசமாக காயமின்றி தப்பினர்.

தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஜோர்ஜியா ஜனாதிபதி ஜியார்ஜி மார்க்வெலாஷ்விலி இரங்கல் தெரிவித்துள்ளார். (இ-7)

# மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்கு வழங்க சீனா ஒப்புதல்



## அரசியல்வாதிகள் அநாகரிகமாக நடப்பதாக வெளிவிவகார அமைச்சர் மாரப்பன விசனம்

(கொழும்பு)

மத்தள விமான நிலைய அபிவிருத்தி உள்ளிட்ட இந்தியாவுடன் இணைந்து இலங்கை மேற்கொள்ளும் கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு சீனா முழுமையான ஒப்புதலை வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு அண்மையில் மேற்கொண்டிருந்த அதிகாரபூர்வ பயணம் தொடர்பாக கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு விளக்கமளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த மத்தள விமான நிலைய அபிவிருத்தித் திட்டம், திருகோணமலை எண்ணெய் தாங்கி அபிவிருத்தித் திட்டம் உள்ளிட்ட இந்தியாவுடனான கூட்டு முயற்சித் திட்டங்களுக்கு சீனா முழுமையான ஒப்புதலை வழங்கியுள்ளது. சீனா, இந்தியாவுடன் இலங்கைக்கு சுமுகமான நட்புறவு உள்ள நிலையில், சில அரசியல் சக்திகள் தவறாக வழிநடத்த முயற்சிப்பது, வருத்தமாகவும், அநாகரிகமாகவும் உள்ளது.

தவறான குற்றச்சாட்டுகளை சுமத்தி, இலங்கை மற்றும் இரண்டு நட்பு நாடுகளுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கம்.

இரண்டு நாடுகளுடனும், இலங்கை சுமுகமான நெருங்கிய கலாசார, மத, வர்த்தக உறவுகளைக் கொண்டிருக்கிறது என்பதை சீனாவுக்கு நான் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளேன்.

பரஸ்பரம் அனைவருக்கும் நன்மையளிக்கும் வகையில், இந்த நட்புறவு முன்னேற்றப்பட வேண்டியது முக்கியமானது என்றும் சீனாவுக்கு எடுத்துக் கூறினேன். இந்த உணர்வுகளை சீனா முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 61 வருட வாழ்க்கையில் கடந்த 6 மாதத்தில் அதிகமான தலைமுடி உதிர்ந்துவிட்டது

## மங்கள மனவருத்தம்



(கொழும்பு)

61 வருட கால தனது வாழ்க்கையில் அதிகமாக தலைமுடி உதிர்ந்தது கடந்த 6 மாத காலத்தில் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தான் நிதியமைச்சராக கடமையாற்றிய கடந்த 6 மாத காலத்திற்குள் அதிகளவான தலைமுடி உதிர்ந்ததாக அவர் கூறியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற "வரி பொறுப்பு அல்ல, ஒரு சமூக கடமை" என்ற கருத்தரங்கின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இரண்டு ஆண்டு காலம் மாத்திரமே திறந்த பொருளாதார கொள்கை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

80 களின் ஆரம்ப காலத்தில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு 2015 ஆம் ஆண்டு வரை வெவ்வேறு வழிகளில் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்திய தாக அவர் தெரிவித்தார். (இ-7)

# சுயமாக எழுந்து நிற்க காலம் கனிந்துள்ளது



## மகிந்தவுக்கு விஜேமுனி புத்திமதி

(கொழும்பு)

பதவிகளை எதிர்பார்க்காமல் ஸ்ரீல.சு.கட்சியினதும் அங்கத்தவர்களினதும் வெற்றியைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கைகோர்த்துக் கொள்ளுமாறு தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டுக் கொள்வதாக அமைச்சர் விஜித் விஜேமுனி சொய்ஷா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஸ்ரீ ல.சு.கட்சியுடன் ஒன்று சேர்வது தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சி முன்வைத்துள்ள நிபந்தனை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியுடன் இணைந்து பயணிப்பதில் எமக்கு எந்தவித சங்கடமும் இல்லை. எமக்கு இணைந்து செயற்படுவதற்கான ஒரு பொன்னான காலம் உருவாகியுள்ளது. நாம் இணைந்தால், எமது சொந்தக் காலில் நிற்கலாம். முதலில் நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இணைந்து வெற்றி கொள்வோம். பின்னர் பதவிகள், அமைச்சுக்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தலாம். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# இலங்கையின் முதலாவது செயற்கைக் கோள் 2020 இல் விண்ணுக்கு



(கொழும்பு)

சேர் ஆதர்சீ க்ளாக் மத்திய நிலையம் தயாரித்து வரும் இலங்கையின் முதலாவது செயற்கைக் கோள் 2020 ஆம் ஆண்டு விண்ணுக்கு ஏவப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நனோ தொழில்நுட்பத்துடனான இந்த செயற்கைக் கோள் தயாரிப்புப் பணிக்கான தொழில்நுட்பம் மற்றும் பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக ரஷ்யாவுடன் இலங்கை உடன்படிக்கையொன்றை செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (இ-7)



# பொலிஸ் மா அதிபர் பூஜித ஆசி பயணம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, அவுஸ்திரேலியாவில் இடம்பெறும் பொலிஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக பயணமாகியுள்ளார் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மாநாட்டை முடித்துக்கொண்டு அவர், எதிர்வரும் 2 ஆம் திகதியன்று நாட்டுக்குத் திரும்புவார்.

அதுவரையிலும், சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சீ.டீ விக்ரமரத்ன, பதில் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றுவார் என பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### முக்கியத்துவம் கொடுத்துச் சொல்வது எப்படி?

எதை எப்படிச் சொல்லவேண்டும்; எங்கு சொல்லவேண்டும்; எந்தச் சூழ்நிலையில் சொல்லவேண்டும் என்பது தெரியாமல், காலத்தை கழித்து முடித்து விட்டவர்கள் உண்டு.

சிலரை நடுத்தெருவில் பார்த்து, அவசியம் எங்க வீட்டுக்கு கல்யாணத்துக்கு வந்துடுங்க! என்று அழைப்பவர்கள் உண்டு.

தங்கள் வீட்டிற்கு வந்தவர்களிடம், கொஞ்சம் கடன் கொடுத்து உதவுங்களேன்! என்று ஆரம்பிப்பவர்களும் உண்டு.

நேரில் போய் சொல்ல வேண்டியதை போனிலும், போனில் சொல்ல வேண்டியதை நேரிலும், கடிதம் மூலமாகச் சொல்ல வேண்டியதை நேரிலும், நேரில் சென்று சொல்ல வேண்டியதைக் கடிதத்திலும் சொல்லி, எல்லாவற்றிலும் தலைகீழ் தர்பார் நடத்துபவர்கள் இன்னும் அதிகம்.

உதவி கேட்பவர்கள் அதை முடிந்த அளவிற்கு அவர்களது எல்லைக்குள் சென்று கேட்பது நல்லது. அதை அலுவலகத்தில் கேட்பதா, இல்லத்தில் கேட்பதா என்பதை அந்த மனிதர் எப்படிப் பட்டவர் என்பதை வைத்து முடிவு செய்வது நல்லது.

உடன் பணிபுரிபவரிடம் ஓர் உதவி தேவைப்பட்டால் அவரது வீட்டிற்குச் சென்று கேட்பது நல்லது தன் இருக்கையில் அமர்ந்துகொண்டு, என்ன அமர், என் பையனுக்கு சீட் வாங்கித்தர முடியுமா? என்று கேட்டால் கேட்பவருக்கு விவஸ்தையில்லை என்று பொருள்.

நம்மைத் தேடி வருபவர் எவரிடமும் நாம் எந்த விண்ணப்பங்களையும் தரக் கூடாது. அப்படித் தரப்படும் விண்ணப்பத்திற்கு ஒருபோதும் முக்கியத்துவம் கிடைக்காது.

ஒரு திருமணவீட்டில் தற்செயலாகப் பார்த்துச் சொல்லப்படும் விடயத்திற்கு முக்கியத்துவம் வரவே வராது. உங்களை எப்போது வந்தால் பார்க்கலாம்? என்று கேட்க வேண்டும் என்ன விடயம் சும்மா இங்கேயே சொல்லுங்கள்! என்பார் அவர் நாம் இல்லையில்லை, வீட்டுக்கு வந்து தான் சொல்வேன்,

நமக்கு ஆகவேண்டிய விடயம் என்று சிறிதாக அடம்பிடிக்கலாம் தவறில்லை. நமக்கு ஆக வேண்டி விடயம் என்றால் அது அவர்களது எல்லைச் சுவர் களுக்குள் வைத்துச் சொல்லப் பட வேண்டும்.

நாம் எங்கே சொல்கின்றோம்? எப்படிச் சொல்கின்றோம்? என்பதற்கெல்லாம் தனித்தனியே மதிப்பெண்கள் உண்டு. இந்தக் காரணங்கள்தாம் ஒரு விடயத்திற்கு தேவையான முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றன.

இந்த முக்கியத்துவத்தின் அளவு தான், ஒருவிடயத்தை முடிக்கவோ? கெடுக்கவோ செய்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

லேனா தமிழ்வாணன்

# பதவியைத் துறந்தால் மைத்திரிக்கு ஒத்துழைப்பு

## கூட்டு எதிரணி அறிவிப்பு



(கொழும்பு) ஊழல், மோசடிகளுக்கு எதிராக மக்களோடு மக்களாக இணைந்து போராடத் தயார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்திருக்கும் நிலையில், அவர் பதவியைத் துறந்தால் அவரது போராட்டத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதற்கு கூட்டு எதிரணி தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன இத் தகவலை வெளியிட்டார்.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் தொடர்புடைய அனைவரையும் அவர்களது அந்தஸ்துகளுக்கு அப்பாற்பட்டு உடனடியாகத் தண்டிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தம் மீதான அச்சுறுத்தல்களுக்கு ஜனாதிபதி அச்சமடையக் கூடாது என்றும் இந்த விவகாரத்தில் கூட்டு எதிரணி ஜனாதிபதிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## சுற்றுலா விசாவில் டுபாய்

# விமானத்தை தவறவிட்டவர்கள் நட்டஈடு வழங்கக் கோரிக்கை

(கொழும்பு) மத்தள விமான நிலையத்தில் இருந்து சுற்றுலா விசாவில் டுபாய் செல்லவிருந்த மூவர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதால் விமானத்தைத் தவறவிட்டனர்.

ஆண் ஒருவர் உட்பட மூவர் டுபாய் செல்வதற்காக நேற்றுக் காலை மத்தள விமான நிலையம் வந்தனர். சுற்றுலா விசாவில் வந்திருந்த அவர்களை சுங்கத் துறை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தினர்.

"சுமார் ஒரு மணிநேரம் எம்மைத் தடுத்து வைத்திருந்தனர். பின்னர் ஒருவழியாக எம்மை விமானத்தை நோக்கிப் போகுமாறு கூறினர். ஆனால் அதற்குள் விமானத்துக்குள் நுழையும் கருமபீடங்கள் மூடப்பட்டு விட்டதால் எமது பயணத்தைத் தொடர முடியவில்லை. இதற்கான நட்ட ஈடு எமக்கு வழங்கப்பட வேண்டும்" என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான உபுல் தேசப்பிரிய, பல பெண்கள் சுற்றுலா விசாவில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று வேலைவாய்ப்புப் பெற்றுக் கொள்வதாகவும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மூவரில் ஒருவர், தாம் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் வேலைக்குச் செல்வதாகவும் தெரிவித்ததாலேயே நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இது சாதாரண நடைமுறையே என்றும் சட்ட விதிகளுக்கு உட்பட்ட முறையிலேயே விசாரணைகள் நடைபெற்றுள்ளன என்றும் இதற்காக நட்டஈடு வழங்கப் படவேண்டியஅவசியம் இல்லை என்றும் அவர்கள் முன்வந்தால் அடுத்த விமானத்தில் அவர்களை டுபாய்க்கு அனுப்பி வைப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# சைட்டம் விவகாரம்; மருத்துவக் கல்லூரி மாணவர் பெற்றோர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு) சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை மூடுவது குறித்த அரசின் செயற்பாடுகளில் தாம் விழிப்புடன் இருப்பதாக, அரச மருத்துவ பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், மேற்படி சங்கத்தின் பேச்சாளர் டாக்டர் நிமால் கருணாசிறி இதனைத் தெரிவித்தார்.

நீண்டகாலமாக சர்ச்சைக்கும் பல்வேறு சச்சரவுகளுக்கும் ஆளாகி வந்த சைட்டம் பிரச்சினை, அக்கல்லூரியை மூடிவிடுவதாக அரசு அறிவித்ததையடுத்து ஓய்ந்துள்ளது. சுமார் பத்து மாத இடைவெளிக்குப் பின் மீண்டும் அரச மருத்துவ பல்கலைக்கழகங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், அரசின் வாக்குறுதியைத் தாம் நம்புவதாகத் தெரிவித்திருக்கும் நிமால், அது குறித்து அரசு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து தாம் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒருவேளை அதற்கான நடவடிக்கைகளை அரசு உரிய காலத்தில் எடுக்க முன்வராத பட்சத்தில் மீண்டும் பிரச்சினைகள் ஆரம்பிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (இ-7)

# ஐ.தே.க - த.தே.கூ. இணைந்து புதிய அரசாங்கம் அமைக்க முயற்சி

## அமைச்சர் எரான் மறுப்பு

(கொழும்பு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க திரைமறைவில் பேச்சுவார்த்தை இடம் பெறுவதாக வெளியாகியுள்ள செய்தியில் எந்தவித உண்மையும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீல.சு.கட்சி எதிர்வரும் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியுடன் கூட்டுச் சேர்ந்தால், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்கும் என செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்னவிடம் வினவிய போதே அவர் இவ்வாறு மறுப்பு தெரிவித்துள்ளார்.

"அப்படியொன்றும் இல்லை. இவையெல்லாம் ஒவ்வொருவரும் இணைந்து உருவாக்கியுள்ள வாய்ப் பேச்சுக்கள். அவர்கள் அரசாங்கம் அமைக்க ஒன்று சேர்வதுமில்லை. அதற்காக எந்தவிதப் பேச்சுவார்த்தையும் நடக்கவும் இல்லை. இதுவரையில் கூட்டரசாங்கத்துக்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுகள் பல தடவைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. எதிர்வரும் காலங்களிலும் எந்த வகையான விடயங்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து அக்கட்சியே தீர்மானிக்கும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (இ-7)



# பிரதமரின் உத்தரவு அமைச்சர்களால் பின்பற்றப்படுவதில்லை - கிரியெல்ல

(கொழும்பு) வரவு-செலவுத் திட்டம் மீது நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெறும் காலத்தில் வெளிநாடு செல்ல வேண்டாம் என அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.



எனினும் பிரதமர் வழங்கியுள்ள இந்த ஆலோசனை பின்பற்றப்படுவதில்லையென சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் அமைச்சர் பைஸர் முஸ்தபா வெளிநாடு சென்றுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க கேள்வியெழுப்பியிருந்தார்.

இதன்போதே லக்ஷ்மன் கிரியெல்ல குறித்த விடயத்தை தெரிவித்தார். (இ-7)

# புகையிரதத் திணைக்களத்தில் பணியாற்றும் பெண்கள் வேறு திணைக்களத்திற்கு மாற்றம்

## அமைச்சர் நிமால் தகவல்

(கொழும்பு) புகையிரதத் திணைக்களத்தில் பணியாற்றும் பெண்களை வேறு திணைக்களங்களுக்கு மாற்றுவதற்கு அமைச்சரவையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்ட விவாதம் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.



வரவு-செலவுத் திட்டத்தைச் சார்ந்து, திணைக்களங்களின் செலவீனங்கள் குறித்த விவாதம்நேற்று முன்தினம் பாராளுமன்றில் நடைபெற்றது. வெளிவிவகார, மூலோபாய அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்கள் இதில் பிரதான அங்கம் வகித்தனர்.

இதன்போது, பல்வேறு சந்தர்ப்பங்களில் புகையிரதத் திணைக்களத்தில் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட சுமார் இரண்டாயிரம் ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களா? என்று பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பினார். அதில் 468 பெண்கள் தினக் கூலிகளாகப் பணியாற்றுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, புகையிரதத் திணைக்களத்தில் பெண்களுக்கு கடுமையான பணிகள் வழங்க முடியாதுள்ளதாகக் கூறினார்.

அப்படியானால் அவர்கள் எதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றும் அவர்களது எதிர்காலம் என்னவாகும் என்றும் ஹந்துன் நெத்தி பதில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, புகையிரதத் திணைக்களத்தில் பணியாற்றும் பெண்களை வேறு திணைக்களங்களுக்கு மாற்றவும் இதனால் உருவாகும் வெற்றிடங்களுக்கு வேறு திணைக்களங்களில் பணியாற்றும் ஆண்களை இணைத்துக் கொள்ளவும் அமைச்சரவை அனுமதியளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (இ-7)

# வேலைவாய்ப்பு மோசடி மாளிகாவத்தை நபர் கைது

(கொழும்பு) பெண்களுக்கு குவைத்தில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த நபர் ஒருவரை எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் மாளிகாவத்தையைச் சேர்ந்தவர். நாட்டின் பல பகுதிகளையும் - குறிப்பாக, அம்பாந்தோட்டை பகுதியை - சேர்ந்த பெண்களிடம் முகவராகத் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட இவர், அவர்களை வேலைவாய்ப்புக் காக குவைத்துக்கு அனுப்பி வைப்பதாகக் கூறியுள்ளார்.

அவரது பேச்சை நம்பி அவர் கேட்ட தொகையை பல பெண்கள் அளித்துள்ளனர். எனினும் பணத்தைப் பெற்றுக் கொண்டபின் அவர் போக்குக் காட்டி வந்துள்ளார்.

இதையடுத்து செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# புதிய அரசியலமைப்புக்கு டில்லியில் அழுத்தம் இல்லை

(கொழும்பு)

**இலங்கையில் புதியதொரு அரசியலமைப்பு உருவாக்கும் விடயத்தில் இந்தியா எவ்விதத்திலும் தலையீடு செய்யவில்லை, அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்திரங்கனி வாகீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.


தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணல், இன நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தியே உள்நாட்டுத் தேவைக்கேற்ப புதிய அரசியலமைப்பு தயாரிப்புப் பணி இடம்பெறுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியலமைப்பு நிர்ணய சபையில் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவே புதிய அரசியலமைப்பு தேவையாகவுள்ளது.

அதனடிப்படையிலேயே செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் விடயத்தில் இந்தியாவின் அழுத்தம் உள்ளது எனக் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## பாராளுமன்றத்தில் வடக்கு முதலமைச்சர்



(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றத்திற்கு சென்றார்.

வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தின் எட்டாம் நாளான நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சு, போக்குவரத்து மற்றும் சிவில் விமான அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதம் நடைபெற்றது.

இதன்போது பாராளுமன்றத்திற்கு சென்றிருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் சில நிமிடங்கள் சபை நடவடிக்கைகளை அவதானித்தார்.

சபையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இதன்போது உரை யாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் மூன்று தசாப்தங்கள் முடிவின்றி தொடர்ந்த ஆயுதப்போருக்கு ஓய்வுக் கொடுத்து ஒன்பது ஆண்டுகளாகி விட்டன.

போருமின்றி, நிலையான சமாதானமும் இன்றி, இயல்பு நிலையும் இன்றி, இடைக்காலத் தீர்வுமின்றி இனப் பிரச்சினைக்கு முடிவு காணப்படவில்லைஎன பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கவலை வெளியிட்டார். (இ-7)

## இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

இ.போ.ச. சபையின் பிராந்திய முகாமையாளர் உபாலி கிரிவத்துட்டுவ மற்றும் வட பிராந்திய பாதுகாப்பு அதிகாரி வி.சுரேந்தர் ஆகியோரை உடனடியாக இடமாற்றம் செய்யக்கோரி நடைபெற்ற வட பிராந்திய சாலைகளின் இணைந்த தொழிற் சங்கத்தின் கலந்துரையாடல் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் யாழ்.சாலை ஜாதிக சேவக சங்கம அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வடபிராந்திய காரியாலயத்தில் கையொப்பமிடாது கடமையாற்றுவது, தகுதியற்ற தழுவல் நியமனங்களை வழங்கியமை, பக்கச் சார்பான தண்டனைகள் மற்றும் இடமாற்றம்வழங்கியமை, தனது அரசியல் சுய இலாபத்திற்காக இ.போ. சபை வளங்களை துஷ்பிரயோகம் செய்தமை, தலைமைக்காரியாலயத் தலைவரின் பணிப்புரைகளை செயற்படுத்தாமை, நீதிமன்ற தீர்ப்புக்களை அவமதித்தமை, வட பிராந்திய பாதுகாப்பு அதிகாரி வி.சுரேந்தர் தனது சொந்தப்பகை காரணமாக அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களை பழிவாங்கியமைக்கு பிரதான பிராந்திய முகாமையாளர் உபாலி கிரிவத்துட்டுவ ஒத்துழைப்பு வழங்கியமை. இவர்கள் இது வரையும் வடபிராந்தியத்தில் இருந்து இடமாற்றம் செய்து இ.போ.சபையின் விதி முறைக்கமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று வலியுறுத்தி நாளை பணிப்புறக்கணிப்பு மேற்கொண்டு தொடர் தொழிற் சங்க போராட்டம் நடத்தவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என தமிழ்த் தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது. (இ)

## பொலிஸ் நிலையத்தில் வாகனப்பற்றாக்குறை ரோந்து நடவடிக்கைகளுக்கு பெரும் சிரமம்

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒரு ஜீப் வண்டி மட்டுமே பாவனையில் இருப்பதனால் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பொலிஸார் பெரும் இடர்களைச் சந்திப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சிலே தலைமைப் பீட பொலிஸ் நிலையமாக பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மட்டுமே காணப்படுகிறது.

அதற்கு போதிய வாகன வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது பொலிஸ் நிலையத்தின் கடமையாகும். இங்கு மூன்று ஜீப் வண்டிகளும் ஒரு பேருந்தும் இருந்த நிலையில் அவை பழுதடைந்துள்ளமையால் திருத்தத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது ஒரே ஒரு ஜீப் வண்டி மட்டுமே பாவனையில் உள்ளமையால் ரோந்து விசாரணைகள், சந்தேக நபர்களை கைது செய்வதற்கு செல்லல் போன்ற அனைத்து விடயங்களில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே தலைமைப்பீட பொலிஸ் நிலையத்திற்கு போதியளவு ஜீப் வண்டிகளை பெற்றுத்தருமாறு பொலிஸ் திணைக்களத்திடம் பருத்தித்துறை பொலிஸ் அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-60)

## வாசிப்பு மாதம் பரிசளிப்பு விழா




(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்திற்கான பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் வைத்திய கலாநிதி வை.தியாகராசா வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களுக்கான அனுசரணை வழங்கியும் இந்த விழாவில்கலந்து கொண்டும் சிறப்பித்திருந்தார். பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் சித்திரத்துறை விரிவுரையாளர் தக. இரட்ணேஸ்வரனின் வழிகாட்டலின் வாசி/ நேசி/ யோசி என்ற சித்திரத்திற்கான கவிதைகள் வரைந்தவர்களுக்குமான பரிசில்களும் வழங்கப்பட்டன. உபபீடாதிபதிகள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நூலக உதவியாளர்கள். கல்விசாரா உத்தியோகத்தர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவரும் இந்த விழாவில் கலந்து சிறப்பித்திருந்தனர். (இ-7)

## இலங்கையில் பலாங்கொடை பகுதியில் 6300ஆண்டுகள் பழைமையான இரத்தக்கறை கல் கண்டுபிடிப்பு!



(கொழும்பு)

இலங்கையில் 6300 ஆண்டுகள் பழைமையான இரத்தக் கறை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை, இலக்கும்புர மற்றும் பத்தான கிராம பிரதேசத்தின் கற்குகைக்குள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மிக பழைமையான இரத்தக் கறை படிந்த கல் ஒன்று தொல்பொருள் ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது..

லுனுகல்கே என அழைக்கப்படும் இந்த கற் குகையினை 2015ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதாஸ உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது இந்த இரத்தக் கறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகில் இவ்வாறான பழைமையான மனித இரத்தக்கறை தொடர்பில் ஆயிரத்திற்கும் குறைவானவையே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதி மனிதன் தொடர்பிலான வரலாற்றினை கண்டு பிடிப்பதற்கு இவ்வாறான சாட்சிகள் மிக முக்கிய மானவைகள் எனக் கூறப்படுகின்றது.

6300 ஆண்டுகளை விடவும் பழைமையான இந்த இரத்தக் கறை தொடர்பில் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்காக இது ராகம வைத்திய பீடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

"எங்களுக்கு இந்த இரத்தக்கறை 2015ஆம் ஆண்டு கிடைத்தது. இது வரலாற்றுக்கு முந்தைய யுகத்திற்கு சொந்த மானதாகும்.

இரத்தக் கறை படிந்திருந்த கல் முன்னதாக பொரளையிலுள்ள ஆய்வு நிலையம் ஊடாக ஆய்வு செய்ய ப்பட்டது. அங்கு இது மனித இரத்தத்திற்கு சொந்தமானதென கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த இரத்தக் கறை கி.மு 4300 - 3900 ஆண்டு காலப் பகுதிகளுக்கு சொந்தமானதென கண்டுபிடிக்கப்பட்டது.

அதற்கமைய இதன் பயன்பாட்டு ஆண்டிற்கமைய 6300 ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்டவை என தெரியவந்துள்ளதென பேராசிரியர் ராஜ் சோமதாஸ தெரிவித்துள்ளார். (இ-7)

## கையடக்க தொலைபேசி இணையத்தள பாவனை இலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடத்தின் முதல் எட்டு மாத காலப் பகுதியில் 2 கோடி 80 இலட்சம் கையடக்க தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இது 13 தசம் எட்டு சதவீத அதிகரிப்பாகும்.

இதேபோன்று இணையத்தளத்தை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் 55 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 26 தசம் ஐந்து சதவீத அதிகரிப்பாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலுப்பை



காணும் இடமெல்லாம் தோப்பாக இருந்த காலங்களும், மங்கையரின் கூந்தலை மெருகூட்ட அரப்பாக பய்ன்படுத்தப்பட்ட தன்மைகளும் பாகு, பலகாரம் என சுவைத்திட்ட நினைவுகளும் இன்று கதையாகிப் போனாலும் இலுப்பையின் மகத்துவமும் இனிமையும் மறக்க முடியாது.

## முக்கியத்துவம்

இலுப்பை உணவாகவும், குடிபானமாகவும், மருந்தாகவும் மனிதருக்கு பயன்பட்டது மட்டுமன்றி பயிருக்கு உரமாகவும், காற்றுத்தடை வேலியாகவும், கால்நடைகளுக்கு நல்ல தீவனமாகவும் விளங்கியது. எனினும் அதிகரித்த பயன்பாடடைய பயன்தரு மரத்தை மரணிக்கும் பாதையில் செல்லவிட்டதேனோ?..

பழந் தமிழர்கள் இலுப்பை பூவையும் பழத்தின் சதைப் பகுதியையும் நொதிக்க வைத்து சோமபானம் தயாரித்தார்கள். அது உடல் நலனுக்கு தீங்கு ஏற்படுத்தாத மதுவாக இருந்தது.

ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்பார்கள். பாலைநிலத்தில் வாழும் பழங்குடியினருக்கு கோடை காலத்தில் குடிநீராகவும், உணவாகவும் பயன்பட்டது. இலுப்பைப்பூ அரிசி, மக்காச்சோளம் போன்றவற்றிற்கு இணையான காபோவைதரேற்று சத்து உள்ளது என ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. பூவைப்போல விதையும் சிறப்பு வாய்ந்தது. வீடுகளில் தீபம் ஏற்ற ஒரு காலத்தில் இதன் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. எண்ணெய் எடுத்த பின் கிடைக்கும் பிண்ணாக்கு வயலுக்கு உரமாக பயன்படுத்தப்பட்டது. இலுப்பை எண்ணெயில் சப்போனின் என்ற வேதிப்பொருள் காணப்படுவதால் சம்போபோல தலை குளிக்க பயன்படுத்தலாம். இதன் மூலம் பொடுகு, நரை இல்லாமல் கூந்தலை பராமரிக்கலாம். பலகாரம் செய்யவும் இலுப்பைப்பூ எண்ணெய் பயன்படுத்தியதாக மூத்தோர் இன்றும் கூறுவார்கள். இலுப்பை மரம் உறுதியானது இதனால் ரயில் தண்டவாளத்திற்கும் கப்பல் கட்டுமான பணிக்கும் பயன்படுத்துகின்றார்கள்.

இலுப்பைமரத்தின் காய்கள் பழங்களை பலவகை பறவைகளும், வண்டினங்களும் படையெடுத்து வருவதனால் விவசாய நிலங்களில் இலுப்பை மரங்களை ஆங்காங்கு நடுவதனால் பயிரைத் தாக்கும் பூச்சிகளை உயிரின முறையால் கட்டுப்படுத்த முடியும்.

## மருத்துவம்

போதுமான பால் சுரக்காத தாய்மார்களுக்கு இலுப்பை இலையை மார்பில் வைத்து கட்டினால் தாய்ப்பால் நன்றாக சுரக்கும். இலுப்பைப் பூவை தண்ணீரில் போட்டு சுடவைத்து அந்தநீரை பருகி வந்தால் வெப்பத்தினால் உண்டானசளி, ஆறா இருமல், தீராததாகம் போன்றவை தீரும். இடுப்புவலி, பித்தவெடிப்பு, மூலநோய் போன்றவற்றுக்கும் மருந்தாக பயன்படும்.

## தாவரவியல்

மடுகாலோஞ்சிபோலியா (Maducalongifolia) என்னும் தாவரவியல் பெயரை கொண்டது. சப்போடேசியே குடும்பத்தை சேர்ந்தது. ஆங்கிலத்தில் "இந்தியன் பட்டர்" என்றும் சிங்களத்தில் "மீ" என்றும் அழைப்பர். இரண்டு இனங்களை கொண்டது. அகன்ற இலையைக் கொண்ட இனம் "மதுகாலாட்டி போலியா" என்றும் நீண்ட இலைகளை உடைய இனம் "மமுகாலாஞ்சிபோலியா" எனவும் அழைப்பர்.

## பண்புகள்

உலர் வறல் வலயத்தில் வளரக்கூடியது. பொதுவாக எல்லா வகை மண்ணிலும் வளரும். 15மீற்றர் உயரம் வரைவளரும் பருத்தமரம். நாலாபுறமும் கிளைபரப்பும் பூக்கள் நறுமணம் வீசும். விதைகள் எண்ணெய்த்தன்மை கொண்டது.

## நடுகை

மரங்களில் இருந்து விழும் பழங்களின் சதையை நீக்கி விதையைப் பிரித்து உடனே விதைக்க வேண்டும். எண்ணெய் தன்மை கொண்ட விதை என்பதால் தாமதித்தால் முளைப்புத்திறன் குறையும்.

30 அடி இடைவெளியில் 3 - 4 விதைகள் நட்டுமுளைத்த பின் ஆரோக்கியமான ஒரு நாற்றை விட்டு மீதியை அகற்றலாம். 6 - 10 ஆண்டுகளில் பலனை கொடுக்கத் தொடங்கும்.

இலுப்பைமரம் தைமாதத்தில் இலைகளை உதிர்த்து மாசி, பங்குனி மாதங்களில் புதுத்தளிர் உருவாக்கி பங்குனி, சித்திரை மாதங்களில் பூக்களை உருவாக்கி வைகாசி, ஆனி மாதங்களில் கனிகளை கொடுக்கும்.

## பயன்கள்

இலுப்பைப்பூ பாகுதயாரித்தல், ஜாம், ஜெலிதயாரித்தல், பழம் உணவாக உண்ணல், எண்ணெய் பெறல், கால்நடை தீவனம் பெறல், மருத்துவ தேவைக்கு பயன்படுத்தலை முக்கியமாக குறிப்பிடலாம்.

## பீடைகள்

பழுக்கும் காலங்களில் கிளி, வெளவால், அணில் ஆகியவற்றின் தொல்லை அதிகரிக்கும்.

## விளைவு

நன்றாக வளர்ந்த ஒரு மரத்தில் ஆண்டுக்கு சராசரியாக 90கிலோ பூக்களை பெறலாம். ஒருமரத்தில் ஆண்டுக்கு 100-150 கிலோவிதை கிடைக்கும். ஒருகிலோவில் 450 விதைகள் இருக்கும். ஒரு கிலோ விதையை அரைத்தால் 300 மில்லிலீற்றர் எண்ணெய் கிடைக்கும்.

## இனிமையான இலுப்பை

இனிமையான உணவு
தனை உண்டிடலாம்
உள்ளம் பொங்கும்
பானத்தை பருகிடலாம்
அழகான கூந்தலுக்கு
அரப்பாக வைத்திடலாம்
இவையனைத்தும் இலுப்
பையாலே இயற்றிடலாம்
இல்லை என்ற
சொல்லுக்கு இடமில்லை
இலுப்பையாலே பல
நன்மை பெற்றிடலாம்
கால்நடைக்கு உணவு
தனை ஆக்கிடலாம்
உழவுக்கு உமைாக
இட்டிடலாம்
தோப்பாக இருக்க
வேணும் இங்கெமக்கு
இனிதான வளம் விளை
யும் இலுப்பையிலே
ஈடில்லா பயன் உள்ள
இலுப்பைதனை
வீட்டினிலே நாட்டி
வளம் சேர்த்திடுவோம்

மாவடியூர் க.சிவதாஸ்
விவசாயப்போதனாசிரியர் (பாலம்பிட்டி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1261


ரமேஷ்





கணேஷ்





சுரேஷ்




கமலேஷ்




கார்மேகன்




சுப்ராம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள், அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

(இது கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)

தொடர்ச்சி: கோப்பாய்- மானிப்பாய் தேர்தல் தொகுதி

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் வரும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/257 இருபாலை தெற்கு பிரிவு | 2552 |
| ஜே/258 இருபாலை கிழக்கு பிரிவு | 2178 |
| ஜே/259 கல்வியங்காடு பிரிவு | 2190 |
| ஜே/260 கோப்பாய் தெற்கு பிரிவு | 3825 |
| ஜே/261 கோப்பாய் மத்தி பிரிவு | 3728 |
| ஜே/262 கோப்பாய் வடக்கு பிரிவு | 2598 |
| ஜே/263 உரும்பிராய் மேற்கு பிரிவு | 2643 |
| ஜே/264 உரும்பிராய் வடக்கு பிரிவு | 2397 |
| ஜே/265 உரும்பிராய் தெற்கு பிரிவு | 4678 |
| ஜே/266 உரும்பிராய் கிழக்கு பிரிவு | 2641 |
| ஜே/267 ஊரெழுப் பிரிவு | 3295 |
| ஜே/268 நீர்வேலி தெற்குப் பிரிவு | 2156 |
| ஜே/269 நீர்வேலி வடக்குப் பிரிவு | 2546 |
| ஜே/270 நீர்வேலி மேற்குப் பிரிவு | 1159 |
| வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் வரும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/182 உடுவில் தென்மேற்கு | 1479 |
| ஜே/183 உடுவில் தென்கிழக்கு | 2008 |
| ஜே/184 உடுவில் மத்தி | 2089 |
| ஜே/185 உடுவில் மத்தி வடக்கு | 2931 |
| ஜே/186 உடுவில் வடக்கு | 2005 |
| ஜே/187 சங்குவேலி | 2759 |
| ஜே/188 இணுவில் தென்மேற்கு | 1664 |
| ஜே/189 இணுவில் கிழக்கு | 814 |
| ஜே/190 இணுவில் வடகிழக்கு | 2359 |
| ஜே/191 இணுவில் மேற்கு | 1298 |
| ஜே/192 தாவடி தெற்கு | 2215 |
| ஜே/193 தாவடி கிழக்கு | 1458 |
| ஜே/194 தாவடி வடக்கு | 1705 |
| வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் வரும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/137 மானிப்பாய் வடக்கு | 1343 |
| ஜே/138 மானிப்பாய் கிழக்கு | 2183 |
| ஜே/139 மானிப்பாய் தெற்கு | 1693 |
| ஜே/140 மானிப்பாய் மேற்கு | 2370 |
| ஜே/129 சுதுமலை வடக்கு | 1706 |
| ஜே/129 சுதுமலை தெற்கு | 2067 |
| மொத்தம் | 74702 |

இத்தேர்தல் தொகுதியின் மொத்தத் தொகை 74702 ஆகும்.

## காங்கேசன்துறை தேர்தல் தொகுதி

1947 இல் இருந்து 1989 வரை காங்கேசன்துறைப் பாராளுமன்றத் தொகுதி இருந்துள்ளது. இத் தொகுதிக்குள் காங்கேசன்துறை துறைமுகம் பலாலி விமான நிலையம், கீரிமலை மற்றும் பல்வேறு வரலாற்றுப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. இத்தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பிரிவுகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

| பிரிவு (காங்கேசன்துறை தேர்தல் தொகுதி) | மக்கள் தொகை |
|---|---|
| வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவு முழுமையாக | 29518 |
| வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவுகள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/195 சுன்னாகம் நகரம் வடக்கு | 1217 |
| ஜே/196 சுன்னாகம் நகரம் தெற்கு | 3687 |
| ஜே/197 சுன்னாகம் நகரம் கிழக்கு | 1586 |
| ஜே/198 சுன்னாகம் நகரம் மத்தி | 1722 |
| ஜே/199 சுன்னாகம் நகரம் மேற்கு | 1650 |
| ஜே/200 கந்தரோடை | 1661 |
| ஜே/201 ஏழாலை மேற்கு | 1453 |
| ஜே/202 ஏழாலை தென்மேற்கு | 1603 |
| ஜே/203 ஏழாலை தெற்கு | 3360 |
| ஜே/204 ஏழாலை கிழக்கு | 1322 |
| ஜே/205 ஏழாலை வடக்கு | 1566 |
| ஜே/206 ஏழாலை மத்தி | 1155 |
| ஜே/207 புன்னாலைக்கட்டுவன் தெற்கு | 1094 |
| ஜே/208 புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 1001 |
| ஜே/209 ஈவினை | 1677 |
| ஜே/210 குப்பிளான் தெற்கு | 1815 |
| ஜே/211 குப்பிளான் வடக்கு | 653 |
| வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/150 மாதகல் கிழக்கு | 2568 |
| ஜே/151 மாதகல் தெற்கு | 1076 |
| ஜே/152 மாதகல் மேற்கு | 773 |
| ஜே/153 பெரியவிளான் | 1603 |
| ஜே/154 மாரீசன்கூடல் | 1252 |
| ஜே/155 இளவாலை | 2097 |
| ஜே/156 முள்ளானை | 634 |
| ஜே/145 வடலியடைப்பு | 1778 |
| ஜே/146 பண்டத்தரிப்பு | 2635 |
| ஜே/147 பிரான்பற்று | 1788 |
| ஜே/148 சில்லாலை வடக்கு | 1984 |
| ஜே/149 சில்லாலை தெற்கு | 824 |
| மொத்தம் | 76762 |

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியின் மக்கள் தொகை 76762 ஆகும்.

## உடுப்பிட்டி- அச்சுவேலித் தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதி முன்னைய உடுப்பிட்டி தொகுதியின் துன்னாலை, அல்வாய்க் கிராமங்களைத் தவிர்த்து ஏனைய பகுதிகளையும் வலிகாமம் கிழக்கில் அச்சுவேலியில் இருந்து புத்தூர், சிறுப்பிட்டி வரையுள்ள கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைகிறது.

இவ்விரு பிரதேசங்களும் வடமராட்சி கடல் நீரேரியாலும் வல்லை வெளியாலும் பிரிக்கப் பட்டிருந்தாலும் பருத்தித்துறை- யாழ்ப்பாண வீதியானது இவ்விரண்டு பிரதேசங்களையும் மிக வும் இறுக்கமாக இணைத்துள்ளது.

மேலும் சமூகப் பொருளாதார ரீதியில் உடுப்பிட்டிப் பிரதேசமும் வலி. வடக்கின் வடபகுதியும் பல தொடர்புகளைக் கொண்டுள்ளன. வலிகாமம் வடக்கில் அச்சுவேலியை மையமாகக் கொண்டு தனியான பிரதேச செயலகம், பிரதேச செயலகம் உருவாக்க வேண்டும் என்ற நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

வடமராட்சியின் இன்றைய குடித்தொகை (வடமராட்சி வடக்கு 47565, வடமராட்சி கிழக்கு 12766, வடமராட்சி தெற்கும் மேற்கும் (45730) 106061 ஆகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரு தேர்தல் தொகுதிகளை நிர்ணயம் செய்யக் குறைந்தது 131372 பேர் இருக்க வேண்டும். இதன் காரணமாகவே வடமராட்சியில் முன்னைய மாதிரிய பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய இரு தொகுதிகளை முன்னர் இருந்த மாதிரி உருவாக்குவதற்கு போதிய குடிசனத் தொகை இல்லை.

மேலும் முன்னைய பருத்தித்துறை தொகுதியை (முன்னைய



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

மாதிரியே உருவாக்க போதிய மக்கள் தொகை இன்மையால் துன்னாலை (ஜே/370,371,372,373,374, அல்வாய் கிராமங்களை (ஜே/378,379,380), பருத்தித்துறை தொகுதியுடன் இணைக்க வேண்டியுள்ளது.

மக்கள் தொகை குறைவு காரணமாகவே உடுப்பிட்டி தொகுதியின் பகுதிகளையும் வலிகாமம் கிழக்குப் பிரிவின் வடபகுதியான அச்சுவேலிப் பிரதேசத்தையும் இணைத்து இத்தேர்தல் தொகுதி உருவாக முன்மொழியப்படுகிறது. இத்தேர்தல் தொகுதியில் வளர்ந்த சமூகமும் வளரும் சமூகமும் ஏறக்குறைய சமமாக இருப்பதால் இரண்டு சமூகத்திற்கும் இத்தேர்தல் தொகுதியில் வெல்லக்கூடிய வாய்ப்புக் கள் உண்டு. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எல்லாத் தொகுதிகளிலும் வளர்ந்த சமூகமும் வளரும் சமூகமும் இருந்த போதிலும் உடுப்பிட்டி- அச்சுவேலி தேர்தல் தொகுதியிலேயே வளரும் சமூகம் கூடியளவு செறிந்து வாழும் பண்பைக் காணமுடிகின்றது. இத் தொகுதியில் இரண்டு சமூகத்திற்கும் வெற்றி வாய்ப்பு இருப்பதால் வெற்றிபெறாத சமூகத்திற்கு விகிதாசாரப் பிரிவில் பிரதிநிதித்துவம் கிடைப்பின் இரு சமூகங்களுக்கிடையே எழும் அமைதியின்மையைக் குறைக்க முடியும். இதனை இப்பிரதேச அரசியல் கட்சிகள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இத்தொகுதிக்குள் அடங்கும் பிரிவும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங்கும் கிராம அதிகாரிகள் பிரிவுகள், இந்தத் தொகுதியின் மக்கள் தொகை 69587 ஆகும்.

(இத்தொகுதிக்குள் அடங்கும் கிராம அதிகாரிகள் பிரிவும் மக்கள் தொகையும் நாளை வெளிவரும்)

(தொடரும்)

# சிறுவர் இல்லங்களுக்குப் பதிலாக பெற்றோர் பராமரிக்கும் புதிய திட்டம்

(கொழும்பு)

சிறுவர்களை சிறுவர் இல்லங்களில் தங்கவைக்காது பெற்றோரினால் அர்ப்பணிக்கும் முறை ஒன்றை அறிமுகம் செய்வதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

சிறுவர் இல்லங்களிலுள்ள பிள்ளைகளை குடும்பங்களுடன் இணைந்து வாழக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி மரினி டி லிவேரா, சிறுவர் இல்லங்களில் தாய் மற்றும் தந்தையை இழந்த சிறுவர்கள் மாத்திரம் அன்றி ஏனைய சிறுவர்களும் தங்க வைக்கப்படுகின்றனர். பொருளாதார சிரமங்களினாலும் சிறுவர்கள் இவ்வாறு சிறுவர் இல்லங்களில் தங்கவைக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இருந்தபோதிலும் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்த புதிய நடைமுறைத் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார். இதனூடாக சிறுவர்களுக்கு நெருக்கமான உறவினர் அல்லது அவர்களுக்கு நன்கு அறிந்த ஒருவருடன் பொது வாழ்க்கையை பழகிக் கொள்வதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசேட சர்வதேச மாநாடு ஒன்று மோல்ட்டா அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் புதிய நடைமுறையில் இலங்கையிலும் மாதிரித் திட்டமொன்றை தேசிய சிறுவர் பாதுகாப்பு மற்றும் அதிகார சபையும் கூட்டாக முன்னெடுப்பதாக இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சந்திராணி பண்டார தெரிவித்தார்.

இந்தத் திட்டத்திற்கான ஆலோசனைகளை ஆசிய மாற்று சிறுவர் பாதுகாப்பு விசேட ஆய்வாளரான இயன் போபர் வழங்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டுத் துப்பாக்கி வெடித்து குடும்பப் பெண் படுகாயம்

## வீட்டைச் சுத்தம் செய்த போது விபரீதம்

(கொழும்பு)

வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருக்கையில் கட்டுத் துப்பாக்கி எதிர்பாராத விதமாக வெடித்ததில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பிபிலையைச் சேர்ந்த இனோகா தமயந்தி (வயது-33) எனும் பெண், தமது வீட்டைச் சுத்தம் செய்துகொண்டிருந்தார்.

அப்போது, கட்டிலுக்கு அடியில் வைக்கப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கியின் விசையை தும்புத் தடியின் முனை தற்செயலாகத் தட்டியதில் துப்பாக்கி வெடித்தது. இனோகாவின் தலையை குண்டு தாக்க, நிலைகுலைந்து விழுந்துள்ளார்.

சத்தம் கேட்டு ஓடிவந்த அயலவர்கள் உடனடியாக அவரை பிபிலை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு முதலுதவி வழங்கப்பட்ட பின், கண்டி போதனா வைத்தியசாலைக்கு இனோகா மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இருப்பினும் இன்னும் அவர் ஆபத்தான நிலையிலேயே இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# நெஸ்பி பிரபுவை பாராளுமன்றத்திற்கு அழைத்து வரவேண்டும்-சம்பிக்க விருப்பம்



(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பில் நெஸ்பி பிரபு தெரிவித்திருந்த கூற்றை வரவேற்பதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பெரு நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நெஸ்பி பிரபு இலங்கைக்காக உன்னதமான பணியை நிறைவேற்றியதாக தெரிவித்தார்.

அவரை நாட்டுக்கு அழைத்து பாராளுமன்றத்திற்கு அழைத்து வரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் திலக் மாரப்பன, பிரபு நெஸ்பி எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு வர முடியும் என்றும் தெரிவித்தார். (இ-7)

# சிறுமி படுகாயம்; பொலிஸாரோடு மக்கள் முறுகல்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, காஞ்சிரங்குடா பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சிறுமி மீது அதிவேகமாகச் சென்ற கன்ரர் வாகனம் மோதியதில் சிறுமி படுகாயமடைந்து மண்டபத்தடி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தின் விளைவாக, அப்பகுதியில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் முறுகல் நிலையேற்பட்டது.

அதனையடுத்து, கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்திலிருந்து கலகமடக்கும் பொலிஸார் உடனடியாக ஸ்தலத்துக்கு வரவழைக்கப்பட்டனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

12 வயதுச் சிறுமியொருத்தி, பொருட்கள் வாங்கிவருவதற்காக காஞ்சிரங்குடா வீதியால் சைக்கிளில் கடைக்குச் சென்றுள்ளார்.

அவ்வேளையில், மண் ஏற்றிய நிலையில் அதிவேகமாக வந்த கன்ரர் வாகனம், சிறுமி மீது மோதியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ். விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாக உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு 50% மானிய அடிப்படையில் 267 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு நேற்று முன்தினம் திருநெல்வேலி விவசாய திணைக்களத்தில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதனால் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த வருடம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு உருளைக்கிழங்கு பெற்று கொடுத்ததை போன்று இந்த வருடம் தங்களுக்கு மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கு கிடைக்கவில்லை என்று யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் தெய்வேந்திரம் கோரிக்கை முன்வைத்திருந்தார். அதன் அடிப்படையில் இந்த விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு கொண்டு வந்த பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஜனாதிபதியின் யாழ். விஜயத்தின் போது விவசாயிகளை ஜனாதிபதியுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்து கொடுத்தார். அதன் பயனாக இந்த விதை உருளைக்கிழங்குகள் எமது விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# யாழில் உள்ளூர் நுகர்வோருக்கு இல்லாமல் போகும் கடலுணவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து சந்தைகளிலிருந்து நண்டு, இறால், கணவாய் என்பன உள்ளூர் நுகர்வோருக்கு கிடைக்காதவையாக தற்போது மாறி வருகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் நண்டு ஒரு கிலோ 700 ரூபாய் ஆகவும், இறால் 1400 ரூபாய் ஆகவும், கணவாய் 1000 ரூபாய் ஆகவும் கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் மீன் சந்தை வியாபாரிகளிடம் வினவியபோது,

'இவை யாழ்ப்பாணத்தில் தாராளமாக பிடிபட்டாலும், அவை சந்தைக்கு வருவது குறைவு. முன்னைய காலங்களில் ஓரிரு கடலுணவு ஏற்றுமதி நிறுவனங்கள் மாத்திரம் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வந்தன. தற்போது, அதிகளவான கடலுணவு ஏற்றுமதி நிறுவனங்கள், யாழ்ப்பாணத்தில் செயற்படுவதனால், அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு, கடலுணவுகளை, அதிலும் குறிப்பாக நண்டு, இறால், கணவாய் என்பவற்றை மீனவர்களிடம் இருந்து கொள்முதல் செய்து, கொண்டு செல்கின்றனர்.

அதிகளவு கொள்வனவாளர்கள் உருவாகியமையால், இவற்றின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளது. அதிகரித்த விலைக்கு உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்ய முடியாது.

ஆகையால், அவற்றை ஏற்றுமதி செய்யும் நிறுவனத்துக்கே மீனவர்கள் வழங்குவதற்கு விரும்புகின்றனர். இதனால் உள்ளூர் சந்தையில் இவற்றை காண்பது அரிதாகியுள்ளது" எனத் தெரிவித்தார். (இ-7)

# திருமண உணவு நஞ்சாகியதில் 40 பேர் வைத்தியசாலையில்



(கொழும்பு)

ஏறாவூர் நகரிலுள்ள திருமண வீடொன்றில் பரிமாறப்பட்ட உணவை உட்கொண்டபலர், உடல் உபாதைக்குள்ளாகிய நிலையில், ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை சுமார் 40 பேர் இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், எவரும் கவலைக்கிடமான நிலையில் இல்லை என்று பொறுப்பு வைத்திய அத்தியட்சகர் எஸ்.ஏ.சி.எம். பழீல் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-7)

# மாணவர்களுக்கான ஆசிர்வாத நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் 2017ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஆசிர்வாத நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்வார். (இ-10)


நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலிகள்

35 ஆம் ஆண்டு

தோற்றம் 1916 - 03 - 28
மறைவு 1982 - 10 - 25



அமரர்
அப்புக்குட்டி சுப்பிரமணியம்
(இளைப்பாறிய மேஸ்திரியார், அரியாலை)

25 ஆம் ஆண்டு

தோற்றம் 1921 - 11 - 12
மறைவு 2002 - 08 - 28



திருமதி.
நடனலட்சுமி சுப்பிரமணியம்
(எட்டு வருட லண்டன் வாழ்க்கை)

பூர்வபக்க அட்டமி —— திதி —— ஆவணி சதுர்த்தி

35 ஆண்டுகள் பல ஓடித்தான் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் அகலவில்லை ஐயா!

நீங்கள் இல்லாமல் 25 ஆண்டுகள் ஓடிவிட்டதை நம்ப முடியவில்லை. உங்கள் சிந்தனைகள், தியாகங்கள் யாவும் என்றும் எம்மை வழிநடத்திச் செல்கின்றது அம்மா!

(1063)

அரியாலை கனகரத்தினம் வீதி, லண்டன் வாழ் மகன், மகள், பேரப்பிள்ளைகள், பிரான்ஸ் வாழ் பேரப்பிள்ளை.

தகவல்: மகன் A.S. ரவீந்திரநாதன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப சேவையாளர், மின்சாரசபை)

அரியாலை கனகரத்தினம் வீதி, காலஞ்சென்ற மகேஸ்வரி, சிருஷ்ணேஸ்வரி, கேசவராணி, நோர்வே வாழ் மகன், பேரப்பிள்ளைகள்.



# சிறுவர் அரங்கம்

## இன்னா செய்தாரை...



குமாரபுரி மன்னனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தனர். மூத்தவன் குமாரசிம்மன். இளையவன் அமரசிம்மன்.

இருவருமே வீரத்திலும் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கினர். அத்துடன் இருவருமே மிகவும் ஒற்றுமையுடனும் பாசத்துடனும் ஒருவருக்கொருவர் அன்புடனும் வாழ்ந்து வந்தனர்.

இளவரசர்கள் இருவரும் காளையர்களாக வளர்ந்து நின்றனர். மன்னனும் வயது முதிர்ச்சியால் தளர்ச்சியடைந்தான். சீக்கிரமே தன் மூத்த மகனுக்கு முடிசூட்டி விட முடிவு செய்தான்.

அந்த நாட்டுமந்திரியின் மகன் மகேந்திரன் சகோதரர்கள் ஒற்றுமையாக இருப்பதை விரும்பாமல் எப்படியாவது இவர்களுக்குள் பகையை மூட்டிவிட வேண்டும் என்று முடிவு செய்தான்.

சொல்வார் பேச்சைக் கேட்கும் எண்ணம் அமரசிம்மனுக்கு இருக்கிறது எனத் தெரிந்து கொண்டு அவனிடம் பேச்சுக் கொடுத்தான்.

மூத்தவனுக்கு முடிசூட்டிவிட்டால் இளையவன் அடிமைதான் என்பது போன்ற அச்சத்தையும் உண்டாக்கி அவனை ஒழிக்க குமாரசிம்மன் திட்டமிடுவதாகவும் சொல்லி மனத்தைக் கலைத்தான். எடுப்பார் கைப் பிள்ளையாக இருந்த அமரசிம்மன் இதை நம்பி தன் அண்ணனை சந்தேகத்துடனேயே பார்க்க ஆரம்பித்தான்.

மகேந்திரனின் இந்த சூழ்ச்சியை அறியாத குமாரசிம்மனும் தம்பியிடம் பாசத்துடனேயே பழகி வந்தான். நாட்கள் செல்லச் செல்ல மகேந்திரனின் சூழ்ச்சிக்கு முற்றிலுமாக அடிமையாகிவிட்டான் அமரசிம்மன். தன் அண்ணன் தன்னை எப்போது கொல்ல முயற்சிப்பானோ என்று அச்சப்பட ஆரம்பித்தான். ஆனால் உள்ளத்தில் கள்ளமில்லாத குமாரசிம்மனோ அவனிடம் அன்போடு பழகி வந்தான்.

மன்னரின் குலவழக்கப்படி சகோதரர் இருவரையும் காட்டில் வாழும் கொடிய விலங்குகளை வேட்டையாடி வரும்படி மன்னன் ஆணை பிறப்பித்தான்.

அந்த ஆணையை ஏற்ற குமாரசிம்மனும் அமரசிம்மனும் காட்டுக்கு வேட்டையாட புறப்பட்டனர்.

அமரசிம்மன் மகேந்திரனின் வஞ்சகச் சொற்களை எண்ணிக் கொண்டே வந்தான். அண்ணன் தன்னை எப்போது கொல்வானோ என்று சற்று கவனத்துடனேயே நடந்தான். மகேந்திரன் அந்த அளவுக்கு அவன் மனதில் வஞ்சகத்தை ஆழமாக விதைத்திருந்தான்.

இருவரும் மாலைவரை வேட்டையாடிக் களைத்தனர். பசியுடனும் களைப்புடனும் தங்கள் கூடாரத்தை நோக்கித் திரும்பினர்.

லேசாக இருள் கவியும் நேரமும் வந்தது அமரசிம்மன் எதுவும் பேசாமலேயே நடந்தான். தம்பியை அன்புடன் திரும்பிப் பார்த்தவண்ணம் நடந்த குமாரசிம்மன் அருகே இருந்த நீரிருக்கும் புதைகுழியில் விழுந்தான். சற்றே அதிர்ந்த அமரசிம்மன் அவனது அபயக் குரலைக் கவனியாதவன் போல தனது இருப்பிடத்தை நாடி வேகமாக நடந்தான் அமரசிம்மன். அண்ணன் இறந்திருப்பான் என முடிவு செய்தான். அதே சமயம் காற்று பலமாக அடித்தது.

வலுவற்ற மரங்கள் முறிந்து விழுந்தன. அதிர்ஷ்டவசமாக ஒரு மரம் முறிந்து புதைகுழியில் அகப்பட்டிருந்த குமாரசிம்மனின் அருகில் விழுந்தது. அதைப் பிடித்துக் கொண்டு கரையேறினான்.

அண்ணன் மூழ்கியிருப்பான் இனி வரமாட்டான் என முடிவு செய்து கொண்டு நடந்து கொண்டிருந்தான் அமரசிம்மன். சட்டென அவன் உணர்வு பெற்று நின்று கவனித்தபோது தன் முன் பசியோடு உறுமியபடி ஒரு புலி இவன் வருகையை எதிர்பார்த்து நிற்பதுபோல் நின்றிருந்தது. வேட்டையாடிக் களைத்திருந்த அமரசிம்மன் புலியுடன் சண்டை போட சக்தியற்றிருந்தான். பயத்தால் நடுங்கியபடி நின்றிருந்தவன் தான் புலிக்கு இரையாவது உறுதி என முடிவு செய்தான். அப்போதுதான் செய்துவிட்டு வந்த தவறு புரிந்தது. தான் செய்த பாவத்திற்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

பசியோடு உறுமியபடி பாய்ந்த புலியைப் பார்த்துக் கண்களை மூடிக்கொண்டான். ஆனால் என்ன ஆச்சரியம்! புலி தன் மீது இன்னும் பாயவில்லையே ஏன்? தன் கண்களைத் திறந்து பார்த்த அமர சிம்மன் தன் முன் நடந்த காட்சியைக் கண்டு வாயடைத்து நின்றான். உடல் முழுதும் சேறாகியிருந்த உடலோடு குமாரசிம்மன் புலியின் வாயைப் பிடித்துக் கொண்டு நின்றான். அரைமணி நேரப் போராட்டத்திற்குப் பின் புலியைத் தன் குத்துவாளுக்கு இரையாக்கி விட்டு அருகே சோர்ந்து விழுந்தான்.

ஆனாலும் தம்பியைக் காப்பாற்றி விட்டோம் என்ற திருப்தி அவன் முகத்தில் புன்னகையாகத் தெரிந்தது.

அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டு கதறி அழுதான் அமரசிம்மன். "அண்ணா என்னை மன்னித்து விடுங்கள். மகேந்திரனின் மதி கெட்ட சொற்களால் என் மதியை நான் இழந்து விட்டேன். தங்களைத் தவறாக நினைத்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" கதறி அழுத தம்பியை அணைத்துக் கொண்ட குமாரசிம்மன் "தம்பி, நீ என் உயிரினும் மேலானவன். உன்னை ஒரு காலும் தவறாக எண்ண மாட்டேன்" என்று சமாதானம் செய்த போதும் அமரசிம்மன் "ஐயோ, அண்ணா, உன்னை இழந்திருந்தால் நான் எத்தகைய பாவியாகியிருப்பேன். என் உயிரைக் காப்பாற்றவே இறைவன் உங்களை அனுப்பியிருக்கிறான். அண்ணா, இந்த உயிர் இனி என்னை உங்களுக்குச் சொந்தம் இனி என்னை உங்கள் அன்புப் பிடியிலிருந்து யாராலும் பிரிக்க இயலாது" கதறியபடியே கூறினான்.

இன்னா செய்த தம்பிக்கு இனியதே செய்துவிட்ட அண்ணனின் அடியொற்றி அவனைத் தாங்கிப் பிடித்தவாறே நடந்தான் அமரசிம்மன். உயிர் போகும் நிலைவரை சென்று திரும்பிய அந்த இரண்டு சகோதரர்களையும் இனி எந்த தீய சக்தியாலும் பிரிக்க இயலாதல்லவா?

குமாரசிம்மனின் தீமை செய்தவனுக்கும் நன்மை செய்த பண்பு நமக்கு வள்ளுவரின் "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்" என்ற குறட்பாவை நினைவு படுத்துகிறதல்லவா?

## 11.2017 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1703 - இங்கிலாந்து, டெவன் என்ற இடத்தில் உள்ள கலங்கரை விளக்கம் அங்கு நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் சேதமாக்கப்பட்டது.
- 1895- பாரிசில் அல்பிரட் நோபல் நோபல் பரிசுக்கான திட்டத்தை தெரிவித்து தனது சொத்துக்களை அப்பரிசுக்கான மூலதனமாக அறிவித்தார்.
- 1975 - கின்னஸ் உலக சாதனை நூலை ஆரம்பித்து வைத்த ரொஸ் மாக்வேர்ட்டர் ஐரியக் குடியரசு இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1989- ஈழப்போரில் இறந்த போராளிகளை நினைவுகூரும் முகமாக மாவீரர் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரால் அறிவிக்கப்பட்டது.
- 1999- நியூசிலாந்தின் முதலாவது பெண் பிரதமராக தொழிற்கட்சியைச் சேர்ந்த ஹெலன் கிளார்க் தெரிவு செய்யப்பட்டார்.
- 2007- ஈழப்போர்: கிளிநொச்சியில் அமைந்துள்ள புலிகளின் குரல் வானொலியின் ஒலிபரப்பு நிலையம், நடுவப்பணியகம் ஆகியவற்றின் மீது இலங்கை வான்படையின் வானூர்திகள் வான்குண்டுத் தாக்குதலை நடத்தியதில் 9 பேர் கொல்லப்பட்டு 10 பேர் படுகாயமடைந்தனர்.
- 2007- ஈழப்போர்: இலங்கை இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்டம், ஐயன்கேணியில் நடத்திய கிளைமோர் தாக்குதலில் 9 பாடசாலைச் சிறுமிகள் உட்பட 11 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1701- ஆன்டர்சு செல்சியசு, சுவீடன் வானியலாளர், இயற்பியலாளர் (இ. 1744)
- 1911- பே டெல் முண்டோ, பிலிப்பீனிய மருத்துவர் (இ. 2011)
- 1940- புரூஸ் லீ, அமெரிக்க-சீன நடிகர், தற்காப்புக் கலை நிபுணர் (இ. 1973)
- 1942- ஜிமி ஹென்றிக்ஸ், அமெரிக்க கிற்றார் கலைஞர், பாடகர் (இ. 1970)
- 1942- மிருதுளா சின்கா, இந்திய எழுத்தாளர், அரசியல்வாதி
- 1952- பப்பி லஹரி, இந்தியப் பாடகர்
- 1960- யூலியா திமொஷென்கோ, உக்ரைனின் 10வது பிரதமர்
- 1963- திலீபன், தமிழீழ விடுதலைப்புலிப் போராளி, உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தவர் (இ. 1987)
- 1965- பால்ராஜ், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதுநிலைத் தளபதி (இ. 2008)
- 1973- சத்தியேந்திர துபே, இந்தியப் பொறியாளர் (இ. 2003)

### இறப்புகள்

- கிமு 8-ஓராசு, உரோமைக் கவிஞர் (பி. கிமு 65)
- 1852- அடா லவ்லேஸ், ஆங்கிலேயக் கணிதவியலாளர் (பி. 1815)
- 1875- ரிச்சாட் கிறிஸ்தோபர் ஹரிங்டன், ஆங்கிலேய வானியலாளர் (பி. 1826)
- 1982- லெப்டினன்ட் சங்கர், ஈழப்போராட்டத்தில் இறந்த விடுதலைப் புலிகளின் முதல் போராளி (பி. 1960)
- 2003- சத்தியேந்திர துபே, இந்தியப் பொறியாளர் (பி. 1973)
- 2008- வி. பி. சிங், 7ஆவது இந்தியப் பிரதமர் (பி. 1931)
- 2014- பிலிப் ஹியூஸ், அவுஸ்திரேலியத் துடுப்பாளர் (பி. 1988)

### சிறப்பு நாள்

- மாவீரர் நாள் (தமிழீழம், இலங்கை)
- ஆசிரியர் நாள் (ஸ்பானியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 800 | 800 |
| தக்காளி | 120 | 120 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 70 | 40 | 600 |
| கோவா | 160 | 160 | 200 | 140 |
| கரட் | 200 | 180 | 240 | 200 |
| பூசணி | 100 | 70 | 100 | 60 |
| புடோல் | 100 | 90 | 120 | 140 |
| வாழைக்காய் | 100 | 70 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 400 | 280 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 600 | 300 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 180 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 240 | 240 | 200 |
| பீற்றூட் | 100 | 130 | 120 | 120 |
| கறிமிளகாய் | 250 | 380 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 200 | 400 |
| போஞ்சி | 150 | 130 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | – | 160 | 150 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 40 | 60 |
| தேசிக்காய் | 50 | 100 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 60-100 | 100 |
| இராசவள்ளி | – | – | – | – |
| வெங்காயப்பூ | – | – | 240 | – |
| முள்ளங்கி | – | 80 | 320 | 80 |
| பொன்னாங்காணி | – | 50 | 40 | 40 |
| வல்லாரை | – | 20 | 20 | 40 |
| [illegible] | – | – | 80 | 100 |

வளர்த்த கனவை மறக்கலாமா!
யுத்தங்கள் தோன்றட்டும்! இரத்தங்கள் சிந்தட்டும்!
பாதை மாறலாமா? - அபாவாணன்

வலம்புரி
T.P: 021 567 1530
website: www.valampurii.lk

## சந்தனப்பேழைகளில் உறங்கும் மாவீரர்களே: மன்னிக்காதீர்கள்

இன்று நவம்பர் 27. மண் மீட்புக்காக உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களை நினைவேந்தும் திருநாள்.

நாம் வாழ்வதற்காக அவர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். பிறர் வாழ தன்னுயிரைக் கொடுப்பவர்களே தியாகி.

அந்தத் தியாகத்தின் உரித்தாளிகளை நினைவேந்தும் இந்நாளில் நாம் அனைவரும் அகவணக்கம் செலுத்தும் கடமைப்பாட்டுக்குரியவர்கள்.

மாவீரர்களுக்குச் செலுத்தும் அக வணக்கம் சுயநலம் கடந்தது. தன் தாயை; தந்தையை; உடன்பிறந்த சோதரர்களை; கட்டிய மனைவியை; பெற்ற பிள்ளையை மறந்து தமிழ் வாழ, தமிழன் வாழ தன்னுயிரை ஆகுதியாக்குதல் என்பது சாதாரணமானவிடயமன்று.

ஆம், உலக வரலாற்றில் எத்தனையோ விடுதலைப் போராட்டங்கள் நடந்துள்ளன வாயினும் ஈழ மண்ணில் நடந்த விடுதலைப் போராட்டம் என்பது புதுமை நிறைந்தது. அற்புதம் கலந்தது.

கொண்ட இலட்சியத்தை அடைய உயிரை ஆயுதமாக்கிய தியாகம் சொல்லுந்தரமன்று.

என்னை இழந்த பின்பு எனக்காக இந்த உலகில் ஏதும் இல்லை என்று தெரிந்த பின்பும் என் தமிழன் வாழ்வான், என் தாய் வாழ்வாள் என்ற நம்பிக்கையோடு களமாடி விடுதலை வேள்விக்குத் தம்மையே ஆகுதியாக்கிய மாவீரர்கள் புனிதமானவர்கள்.

அந்தப் புனிதர்களை நெஞ்சிருத்தி நினைவேந்தும் இன்றைய நாளும் புனிதமானது.

எனினும் எங்கள் மண்ணில் எங்களுக்கான உரிமைகள் இன்னமும் கைக்குக் கிட்டாமல் இருப்பதனால் எங்கள் மாவீரர்களை நினைவேந்தவும் அவர்களுக்காக நினைவுச் சுடர் ஏற்றுவதையும் கட்டுப்படுத்த படைத்தரப்பு உசார்ப்படுத்தப்படுகிறது.

நினைவேந்துவது அடிப்படை மனித உரிமையாக இருக்கின்ற போதிலும் அதற்கும் நம் மண்ணில் இட்டல் இடைஞ்சல்கள் ஏராளம் என்றால் என்ன செய்வது.

ஓ! மாவீரர்களே நீங்கள் மரணத்தை வென்றவர்கள். உங்களை நினைவுகூருவது கண்டு மரண பயம் கொள்வோர் பதறவே செய்வர்.

ஆனால் காலம் கனிகின்றபோது உங்கள் நினைவேந்தல் தமிழர்களின் முதன்மை நிகழ்வாக மாறும். அதுவரை சந்தனப்பேழைகளில் அமைதியாக உறங்குங்கள்.

இன்றைய நினைவு நாளில் தமிழ் உறவுகள் கலங்குவது கண்டு நீங்கள் துயில் துறப்பீர்கள். இன்னும் எம் இனம் உரிமை பெறவில்லையோ? என்று ஏங்குவீர்கள்.

கூடவே தமிழ் மக்களின் ஒட்டுமொத்தத் தியாகத்தையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு சொந்த நலன்களுக்காக எங்கள் உரிமைகளையெல்லாம் விட்டுக்கொடுத்து பெற்ற பதவி போதும் என்று எம் இனத்தை ஏமாற்றும் எம்மவர் கண்டு கலங்குவீர்கள்.

அந்தக் கலக்கம் வேண்டாம். நீங்கள் தியாகிகள். அமைதியாக உறங்குங்கள். ஆனால் ஒன்று, போருக்குப் பின்பு தமிழர்களை ஏமாற்றிய தமிழனை ஒருபோதும் மன்னித்துவிடாதீர்கள்.

## வவுனியாவில் நாளை ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியாவில் நவம்பர் 14ஆம் திகதி 16 வயது இளம் பெண் ஒருவர் முச்சக்கர வண்டியில் கடத்தப்பட்டு ஐவரினால் கூட்டு வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு பெண்கள் அச்சமின்றி நடமாடும் சூழ்நிலையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

வித்யா, வைஷ்ணவி ஆகியோரைத் தொடர்ந்து ஆங்காங்கே தொடர் சம்பவங்களாக இவ்வாறான வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதும் அதனைத் தொடர்ந்து அப்பெண்கள் பலியாக்கப்படுவதும் எமது சமூகத்தின் இழிவு நிலையை காட்டி நிற்கின்றது. இவற்றைத் தகுந்த முறையில் கேள்விக்குட்படுத்துவது எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

இந்நிகழ்வைக் கண்டித்தும் இவ்வாறான சம்பவங்கள் மேலும் மேலும் இடம்பெறாது இருப்பதை வலியுறுத்தி மகளிர் அபிவிருத்தி நிலையம் ஓர் ஆர்ப்பாட்டத்தை நாளை 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா மணிக்கூட்டு கோபுர முன்றலில் நடத்த வுள்ளோம்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் வவுனியா, புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம்சார் மகளிர் அமைப்புக்களை சார்ந்தோர் கலந்து கொள்வதோடு மகஜர் ஒன்றும் அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது என பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் அறிவித்துள்ளார். (2)

# கணக்காய்வு ஆணைக்குழுவை மூடிவிடுவதே சிறந்தது

## –கணக்காய்வாளர் நாயகம்

(கொழும்பு)

கணக்காய்வு சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு தாமதம் ஏற்பட்டால், கணக்காய்வு ஆணைக் குழுவை நடத்தி செல்வது பயனற்ற செயல் என கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஆணைக்குழுவை இரத்து செய்யவேண்டும் என கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அரசியல் அமைப்பு பேரவையால் இந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுள்ளமையால் அதனை இரத்து செய்வதற்கான சாத்தியங்கள் தொடர்பில் தன்னால் அறிவிக்க முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

கணக்காய்வு சட்டம் இன்மையால் ஆணைக் குழுவிற்கான செலவுகளை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, சபாநாயகர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து திருத்தங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

திருத்தியமைக்கப்பட்ட சட்டமூலத்தை அடுத்த வாரமளவில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ளதாகவும் கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார். (மு-1)

## வவுனியா வளாகத்தில் பிரபா பிறந்தநாள்

(வவுனியா)

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் 63ஆவது பிறந்ததினம் யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் விடுதியில் கேக் வெட்டி, மாணவர்களுக்கும் கேக் கொடுத்து பிரபாகரனின் பிறந்ததினத்தை கொண்டாடியுள்ளார்கள்.

எவ்விதமான அச்சுறுத்தல்களும் இன்றி மாணவர்கள் பிரபாகரனின் பிறந்த தினத்தை கொண்டாடியதாக தெரியவருகிறது.(மு-250)

## ஒரு தொகை உரத்துடன் இந்தியர் இருவர் கைது!

(கொழும்பு)

இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள ஒரு தொகை க்லய்போசெட் (Klaypocet) உரத்துடன், இந்தியர்கள் இருவர் மன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்ட 710 கிலோகிராம் க்லய்போசெட் உரமே, இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் மீனவர்கள் என்று கூறி நாட்டுக்குள் வர முற்பட்டவேளையிலேயே, கடற்படையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக, சந்தேகநபர்களை மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு-1)

JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16 2017
கண்ணாக மணியாக ஒளிரும் பெண்கள் கண்ணியமாய் வாழ்வதற்கு உரிமை வேண்டும்.
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் மருதங்கேணி, வத்திராயன்,உடுத்துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி இராணுவமுகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பம்பை மடு கிராமம், கற்பகபுரம் கிராமம், நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரை, நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி, பம்பைமடு பல்கலைக் கழகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தையை தொட்டிலில் போடும் நாள்?

குழந்தை பிறந்த 10 நாள் தொட்டிலில் குழந்தையை போடலாம்.

நட்சத்திரம்: ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்தரம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி.

திதி: துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, ஏகாதசி, திரயோதசி (தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கோள்களும் ஜீவனும்



ஒவ்வொரு கோளும் பல இரசாயனங்களைக் கொண்டு அவை பரிணாமம் அடைந்ததற்குத் தக்கவாறு அலை வீசிக் கொண்டேயிருக்கும். இரசாயன அம்சங்கள் அடைந்த அந்த அலை எந்தப் பொருள் மீது வீசுகிறதோ, அந்தப் பொருளிலே, அந்த அலையின் தன்மை அத்தனையும் தூண்டிவிடும். ஒன்பது கோள்களினுடைய தன்மையும், அதன் அலைகள் மூலம், நமக்கு வந்து கொண்டேயிருக்கும்.

உலகமும், மற்ற கோள்களும் சூரியனைச் சுற்றிச் சுழன்று கொண்டேயிருப்பதனால் அவ்வப்போது அவற்றின் தூரம் வேறுபடுகிறது. ஒரு சமயம் 10 கோடி மைல் தொலைவிலிருக்கும் ஒரு கோள் இன்னொரு சமயம் 100 கோடி மைல் தொலைவிற்குச் சென்று விடும். அவ்வப்பொழுது கிட்டவோ அல்லது தொலைவாகவோ போகப்போக அந்த அலையினுடைய அழுத்தம் வேறுபடும்.

அதற்குத் தகுந்தவாறு அந்த அலையிலிருந்து வந்து கொண்டிருக்கக் கூடிய, அந்த அழுத்தத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளும் வேறுபடும். அதனால் ஒவ்வொரு ஜீவனுக்கும், ஒவ்வொரு உயிருக்கும், அந்தக் கோள்களின் மாற்றத்தினால் இரசாயன வேறுபாடு உண்டாகும். அதைக் கொண்டு உடலுக்கு நன்மை தீமை, அறிவுக்கு நன்மை தீமை இவைகள் எல்லாம் உண்டாகும்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து முன்னேறுகிறது மும்பை




4-வது இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. 10 அணிகள் இடையிலான இந்தப் போட்டியில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் உள்ளூர், வெளியூர் அடிப்படையில் தலா 2 முறை மோத வேண்டும்.

லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெறும்.

இந்த போட்டி தொடரில் மும்பையில் நடைபெற்ற 8-வது லீக் ஆட்டத்தில் மும்பை சிட்டி எப்.சி. - எப்.சி. கோவா அணிகள் மோதின.

இரு அணிகளுக்கும் இது 2-வது லீக் ஆட்டமாகும். கோவா அணி முதல் போட்டியில் சென்னை அணியை வீழ்த்தியது. மும்பை அணி முதல் போட்டியில் பெங்களூர் அணியிடம் தோல்வியடைந்தது.

போட்டி தொடங்கியது முதல் இரு அணியினரும் மாறி மாறி கோல் போட முயற்சித்தனர். இருப்பினும் முதல் பாதி நேர ஆட்டத்தில் இரு அணியினரும் எந்த கோலும் அடிக்கவில்லை.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதிநேர ஆட்டத்தின் 59 ஆவது நிமிடத்தில் மும்பை அணியின் எவர்டன் சாண்டோஸ் முதல் கோல் அடித்தார். அதன்பின் 83 ஆவது நிமிடத்தில் கோவாவின் மனுவல் அரனா ரொட்ரிகஸ் கொல் அடித்தார்.

அதனால் 1-1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமனானது. எனவே இரு அணியினரும் மேற் கொண்டு கோல் அடித்து வெற்றி பெறுவதில் தீவிரம் காட்டினர்.


இருப்பினும் 88 ஆவது நிமிடத்தில் மும்பை அணியின் தியாகோ நஸ்சி மெண்டோ டாஸ் சாண்டோஸ் கிடைத்த வாய்ப்பை கோலாக மாற்றினார். இதனால் மும்பை அணி 2-1 என முன்னிலை பெற்றது.

அதன்பின் இரு அணியினரும் மேற்கொண்டு எந்த கோலும் அடிக்கவில்லை.

இதையடுத்து 2-1 என்ற கோல்கணக்கில் மும்பை அணி வெற்றி பெற்றது. மும்பை அணியின் எவர்டன் சாண்டோஸ் ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதில் வெற்றி பெற்ற மும்பை அணி 3 புள்ளிகளுடன் 5-வது இடத்திற்கு முன்னேறியது. கோவா அணியும் 3 புள்ளிகளுடன் 4-வது இடத்தில் நீடிக்கிறது. (க)

# கப்டன் கூல் இரகசியம் உடைத்தார் சுரேஸ் ரெய்னா



டோனி.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் டோனியின் 'கப்டன் கூல்' ரகசியத்தை இந்திய கிரிக்கெட் வீரரும் டோனியின் நண்பருமான சுரேஷ் ரெய்னா வெளியிட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவராக இருந்த போது மிகவும் அமைதி யாகவும் பொறுப்பாகவும் செயற்பட்டதன் மூலம் 'கப்டன் கூல்' என்று அழைக்கப்பட்டவர் டோனி.

குறிப்பாக இக்கட்டான சூழ்நிலைகளில் பொருத்தமான முடிவு எடுப்பதில் வல்லவர்.

இது அணிக்கு பெரும் பாலும் வெற்றியைத் தேடி தந்துள்ளது.

அவர் எந்தவித சூழலிலும் உணர்ச்சி வசப் படமாட்டார் என்றும், மிகச் சிறந்த அணித்தலைவர் என்றும் பல ஆட்டங்களில் அவரின் தலைமையில் விளையாடியுள்ள ரெய்னா தெரிவித்துள்ளார்.

மேலும் எந்த சூழலுக்கும் எப்போதும் மூன்று வெவ்வேறு திட்டங்களுடன் தயாராக இருக்கும்

அடுத்து என்ன என்பதை முன்பே கணிக்கக்கூடிய திறன் கொண்டவர்.

ஆட்டத்திற்கு முந்தைய நாள் இரவே அவர் வகுத்துவைத்துவிடும் வியூகங்களை குறித்த சமயங்களில் வெளிப்படுத்துவார் என்றும் கூறியுள்ளார். (க)

# பந்தை சேதப்படுத்திய இலங்கை வீரருக்கு தகுதிக் குறைபாட்டுப் புள்ளி வழங்கப்பட்டது

பந்தை சேதப்படுத்தியதற்காக இலங்கை பந்து வீச்சாளர் தஷூன் ஷனகவுக்கு போட்டி ஊதியத்தில் 75 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், தகுதி குறைபாடுக்கான மூன்று புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன.




இலங்கை - இந்தியா இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 312 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்த போட்டியில் இலங்கை வேகப்பந்து வீச்சாளர் தஷூன் ஷனக இதுவரை ஒரு விக்கெட்டும் எடுக்கவில்லை.

இந்நிலையில், மைதானத்தில் போட்டிக்கு பயன்படுத்திய பந்தை ஷனக சேதப்படுத்தியதை ஐசிசி நடுவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதன் மூலம் பந்தின் தன்மை மாற்றப்பட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து அவருக்கு குறித்த போட்டியின் ஊதியத்தில் 75 சதவீதம் அபராதமாக விதிக்கப்படுவதுடன், தகுதி குறைபாடுக்கான மூன்று புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளன.

24 மாத காலத்துக்குள் தகுதி குறைபாட்டுக்கான நான்கு அல்லது அதற்கு மேலான புள்ளிகளை ஷனக பெற்றால் அது சஸ்பென்ஷன் புள்ளிகளாக மாறி அவர் தடை செய்யப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் சதம் கோலியின் சாதனைகள் தொடர்கின்றன



நாக்பூர் டெஸ்ட்டில் சதமடித்துள்ள கோலி இரண்டு புதிய சாதனைகளை படைத்துள்ளார்.

இலங்கை - இந்தியா இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் நடந்து வருகிறது.

இப்போட்டியில் 3 ஆம் நாளில் இந்திய அணி தலைவர் கோலியும், புஜாராவும் தங்கள் ஆட்டத்தை தொடர்ந்தனர்.

இந்நிலையில் வேகமாக ஓட்டங்கள் சேர்த்த கோலி டெஸ்ட் அரங்கில் தனது 19வது சதத்தை எட்டினார்.


டெஸ்ட் அரங்கில் அணித் தலைவராக கோலி பதிவு செய்யும் 12வது சதம் இதுவாகும்.

இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் அதிக சதங்களை விளாசிய இந்திய தலைவர்கள் பட்டியலில் முன்னாள் தலைவர் கவாஸ்கரை (11 சதங்களை) பின்னுக்கு தள்ளி கோலி முதலிடம் பிடித்தார்.

தவிர, ஒரே ஆண்டில் அதிக சதம் விளாசிய தலைவர்கள் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங்கை (9 சதம்) பின்னுக்கு தள்ளி கோலி (10 சதம்) புதிய உலக சாதனை படைத்துள்ளார். இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டிலும் கோலி சதமடித்தது குறிப்பிடத்தக்கது. (க)

# இந்திய- இலங்கை டெஸ்ட் போட்டியில் தமிழில் பேசி அசத்திய ஆனோல்ட்

## குவியும் பாராட்டுக்கள்



இலங்கை அணியின் முன்னாள் வீரரான ரஸல் ஆர்னோல்ட் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சரளமாக தமிழ் பேசியது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாக்பூரில் நடைபெற்று வருகிறது. இதில் இலங்கை அணி, முதல் இன்னிங்ஸில் 205 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்நிலையில் இப்போட்டியின் போது, மைதானம் எப்படி இருக்கிறது என்பது குறித்து, இந்திய அணி வீரர் முரளி கார்த்திக் மற்றும் இலங்கை அணியின் முன்னாள் வீரர் ரஸல் ஆர்னோல்ட் பேசினர்.

அப்போது, ஆர்னோல்ட், சரளமாக தமிழில் பேசி அசத்தினார். இதைக் கண்ட ரசிகர்கள் பலரும் என்ன ஒரு தமிழ் உச்சரிப்பு, இது பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று தங்கள் டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்து வருகின்றனர். (க)

## இன்று மாவீரர் நாள்...

வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அனைவரும் எந்தவித அச்சமும் இன்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியும் என அரசியல் தலைவர்கள் அறிவித்துள்ளார்கள். மாவீரர் துயிலுமில்லங்களுக்கு செல்ல முடியாதவர்கள் தமது வீடுகளில் சுடர் ஏற்றி அஞ்சலி செய்யுமாறும், இன்று மாலை 6.02 மணியளவில் ஆலயங்களில் மணியோசை ஒலிக்க விடுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக வடகிழக்கில் உள்ள பெரும்பாலான மாவீரர் துயிலும் இல்லங்களிலும் இவ் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. போர் நிறைவடைந்த பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்கள் பலவற்றை இராணுவத்தினர் அபகரித்து அவற்றில் இராணுவ முகாம்களை அமைத்தும், மேலும் சில துயிலும் இல்லங்கள் காடுகளாலும் பற்றைகளாலும் சூழ்ந்து கிடந்த அவை தற்போது புனரமைக்கப்பட்டுள்ளன. அவற்றினை சூழ சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும் நடுவில் கொடிக்கம்பம் கட்டப்படும் அஞ்சலி நிகழ்வுகளுக்காக தயார்படுத்தப்பட்டுள்ளன.

தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில், திருகோணமலை மாவட்டத்தில் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வெளியகுளம் மாவீரர் துயிலுமில்லம், தியாகவனம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம். மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை மாவீரர் துயிலும்மில்லம், தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம், வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லம், அம்பாறை மாவட்டத்தில் உடும்பன்குளம் மாவீரர் துயிலுமில்லம் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம், விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம், துணுக்காய் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம், அளம்பில் மாவீரர் துயிலுமில்லம், மணலாறு புனித பூமி மாவீரர் துயிலுமில்லம், மணலாறு உதய பீடம் மாவீரர் துயிலுமில்லம், களிக்காடு மாவீரர் துயிலுமில்லம்

இறுதியுத்தத்தில்சுதந்திரபுர மாவீரர் துயிலுமில்லம், தேவிபுர மாவீரர் துயிலுமில்லம், இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லம், பச்சைபுல்வெளி மாவீரர் துயிலுமில்லம், இரட்டைவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம், முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம் கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலு மில்லம், மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மாவீரர் துயிலுமில்லம், ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம், பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாமம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம், தென்மராட்சி கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லம், வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லம், தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லம், வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமிலலம் உள்ளன. இவற்றில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத துயிலுமில்லங்களில் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இவற்றைவிட யாழ்.பல்கலைகழகத்திலும் மாவீரர் தின நிகழ்வுகள் நடத்துவதற்கு ஒழுங்கமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக பல்கலையில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனது நினைவு தூபி மாணவர்களால் புனரமைக்கப்பட்டுள்ளது. யாழ்.பல்கலையில் நினைவு நிகழ்வுகள் காலையும் மாலையும் என நடைபெறவுள்ளதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர். அதேபோன்று இன்று காலை பத்து மணிக்கு நல்லூரில் உள்ள திலீபனது நினைவிடத்தில் சுடரேற்றி அங்கிருந்து இராணுவத்தின் கட்டுப்பாடுகளிலுள்ள மாவீரர் துயிலு மில்லங்களான கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம் ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்னால் சுடரேற்றி அஞ்சலி செலுத்தவுள்ளார்கள்.

அதனை தொடர்ந்து மாலை 7 மணிக்கு தொண்டைமானாறு கடலிலே மாவீரர்தின நிகழ்வுகள் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாவீரர் துயிலுமில்லங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகள் சரியாக மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு மாலை 6.05 மணிக்கு ஈகச்சுடரேற்றல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதன்போது மாவீரர் நாள் பாடல்களும் ஒலிக்கவிடப்படவுள்ளதாக மாவீரர் நாள் நிகழ்வுகள் ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை புலம்பெயர் தேசங்களிலும் இம் முறை மாவீரர் தின நிகழ்வுகளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக பிரான்ஸ் நாட்டில் சார்ல்ஸ் பகுதியில் விடுதலைப் போராட்டத்தில் முதலாவதாக உயிர் தியாகம் செய்த மாவீரராகிய லெப்டினன் சங்கருக்கு நினைவுத் தூபியொன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ் நினைவுத் தூபியிலும் மற்றும் தமிழ் மக்கள் வாழ்கின்ற அனைத்து புலம்பெயர் தேசங்களிலும் இவ் மாவீரர் எழுச்சி நாள் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இராணுவத்தால் உடைத்து அழிக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் மக்கள் மீளவும் கால் பதித்து அச்சங்களை களைந்து தமது வீர மறவர்களை நினைவு கூர தமிழர் தேசம் எங்கும் ஆரம்பித்துள்ளார்கள். மாவீரர் புகழ் பாட ஆரம்பித்துள்ளார்கள். இந்த எழுச்சி ஒரு நாள் மாவீரர்களின் கனவுகளை மெய்ப்பிக்கும் என தற்போதைய மாவீரர் தின அனுஷ்டிப்புக்கள் உணர்த்தி கொண்டிருப்பதாக தமிழக தலைவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த காலப்பகுதிகளில் மாவீரர்களை இந்த மண்ணுக்கு உவந்தளித்த அவர்களது பெற்றோர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (மு-4)

## தொடரும் தங்கவேட்டை...

லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து அனுமதியைப் பெற்ற புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொலிஸாரும் மற்றும் விசேட அதிரடிப் படையினரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி எஸ்.எம்.எஸ்.சம்சுதீன் முன்னிலையில் அகழ்வுப் பணிகளை சுமார் 04 மணித்தியாலங் களுக்கு மேல் நடத்திய போதும் எதுவிதமான பொருட்களும் மீட்கப்படாத நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி எஸ்.எம்.எஸ்.சம்சுதீனின் உத்தரவுக்கமைய அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த அகழ்வு பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமாகி நண்பகல் வரை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, விசேட அதிரடிப் படையினரும், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொலிஸாரும் அந்த தகவலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து, நீதிமன்றின் அனுமதி கிடைக்கப் பெற்ற நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி எஸ்.எம்.எஸ்.சம்சுதீன் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்றுள்ளது.

ஆயினும், சுமார் 04 மணித்தியாலங்கள் நடைபெற்ற அகழ்வுப் பணியில் எந்த விதமான பொருட்களையும். அவர்களால் மீட்க முடியவில்லை.

இதனையடுத்து, அகழ்வு பணிகளை கண்காணிப்பு செய்து கொண்டு இருந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியின் உத்தரவுக்கமைய அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த அகழ்வு நடை பெற்ற போது மைதானத்தைச் சுற்றி விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பல நூற்றுக் கணக்கான பொதுமக்கள் திரண்டு வந்து அகழ்வு நடைபெற்ற மைதானத்தின் வீதியில் கூடி நின்று அகழ்வு பணிகளை அவதானித்த வண்ணம் நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (மு-15)

# எல்லை நிர்ணயக் குழு வடக்கில் இன்றும் நாளையும் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைத் தேர்தலுக்கான தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில் இன்று திங்கட்கிழமையும் யாழ்ப்பாணத்தில் நாளை செவ்வாய் கிழமையும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தலுக்கென தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்காக ஜனாதிபதியால் எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது. முன்னாள் நில அளவைகள் நாயகம் கே.தவலிங்கம் தலைமையிலான இந்தக் குழுவில், பேராசிரியர் எஸ்.எச்.ஹிஸ்புல்லா, கலாநிதி அனில டயஸ் பண்டார, முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் பி.எம்.சிறிவர்தன மற்றும் பேராசிரியர் சங்கரவிஜய சந்திரன் ஆகியோர் அடங்குகின்றனர்.

தேர்தல் தொகுதி நிர்ணயம் குறித்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள், ஆலோசனைகளைப் பெறும் நடவடிக்கைகளை இந்தக் குழுவினர் ஒவ்வொரு மாவட்டங்களிலும் முன்னெடுக்கின்றனர்.

வவுனியா மாவட்ட மக்களின் கருத்துக்களை அறியும் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.30 முதல் மாலை ஆறு மணிவரையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெறுகிறது.

அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் பிற்பகல் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

மாகாண சபை தொகுதி நிர்ணயம் குறித்து ஆர்வம் கொண்டுள்ள பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் இந்த கூட்டத்தில் தமது ஆலோசனையையும் கருத்துக்களையும் சமர்ப்பிக்குமாறு அந்தக் குழு கேட்டுள்ளது.

மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொண்டு நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் விகிதாசாரம் மற்றும் தொகுதி முறைமை அடிப்படையில் 50-50 எனத் தேர்தலை நடத்த அரசு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

# வடக்கு-கிழக்கில் இன்று அதிக மழை பெய்யலாம்

நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இன்று அதிக மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும், கடற்பகுதிகளும் தொடர்ந்தும் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வாளர்களிடம் கேட்டபோது, தென்மேற்கு வங்க கடலில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது இலங்கை வழியாக நகர்ந்து இன்று அரபிக் கடல் பகுதிக்கு செல்லும். இதனால் கனமழை பெய்யும். காற்ற முத்தத்தின் நகர்வின்போது ஈரப்பதம் மிக்க காற்று வடக்கு திசையில் வீசுவதால் விட்டு, விட்டு மழை பெய்யும். சில நேரங்களில் அது கனமழையாகவும் மாறும். அடுத்த ஓரிரு நாளில் தெற்கு அந்தமான் பகுதியில் மற்றொரு காற்றழுத்தம் உருவாகிறது. அது புயலாக மாறும் வாய்ப்புள்ளதால் அந்த சமயங்களில் அதிக மழை கிடைக்கும் என்றனர்.(மு)

## சு.க-கூட்டு எதிரணி...

இரு கட்சிகளின் முக்கிய தலைவர்கள் நேற்றுமுன்தினம் கூடி ஆலோசித்ததன் அடிப்படையில் இன்று மேற்படி தரப்புகள் சந்திப்பை மேற்கொள்ளவுள்ளன.

இதேவேளை ஐ.தே.கவுடனான உறவை முறித்ததாலேயே சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து செயற்பட முடியும் என கூட்டு எதிர்க்கட்சி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.(மு)

## கேக் வெட்டியதால்...

யால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பம்பைமடு விடுதியில் தங்கியுள்ள முதலாம் வருட மாணவர்கள் நேற்றைய தினம் பிரபாகரனின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர்.

தமது விடுதியில் இடம்பெற்ற இந் நிகழ்வை முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்த பின்னர் அதை அவதானித்த சிங்கள மாணவர்கள் பிறந்தநாள் கொண்டாடியவர்களுடன் முரண்பட்டுள்ளனர்.

எனினும், விடுதி மேற்பார்வையாளர் இரு பிரிவினரையும் சமரசம் செய்து வைத்துள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை, வவுனியா வளாகத்தின் குருமன்காடு கற்கைகள் பீடத்திலும் இதே சம்பவம் இடம்பெற்ற நிலையில் சிங்கள மாணவர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடு இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

இந்த நிலையில் பூங்கா வீதியில் அமைந்துள்ள வளாகத்தின் நிர்வாக அலுவலகத்திற்கு இரவு 9 மணியளவில் வருகை தந்த சிங்கள மாணவர்கள் கேக் வெட்டிய மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், வவுனியா வளாகத்தில் அண்மைக்காலமாக சிங்கள மாணவர்களே அதிகமாக கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு)

## துயிலுமில்ல சுற்றுமதில்...

நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டதா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனால், மாவீரர் துயிலுமில்லங்கள் அனைத்தும் உயிரியற் பூங்காக்களாக பராமரிக்கப்பட வேண்டும் என தீர்மானம் ஒன்றை கொண்டு வந்து, கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தை சூழ சுற்றுமதில் அமைப்பதற்காக பாராளுமன்ற நிதியிலிருந்து நாற்பது இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில்,

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தினை சூழ சுற்றுமதில் அமைக்கப்பட்டுவருகின்றது. இந்த நிலையிலேயே நேற்றைய தினம் மேற்படி உத்தரவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார். இன்றைய தினம் தமிழர் தாயகம் எங்கும் மாவீரர் தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் பிரதமரின் இந்த உத்தரவு தமிழ் மக்களிடையே பெருத்த ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை நல்லூரில் உள்ள திலீபனது நினைவு தூபியை புனரமைப்பு செய்வதற்கும பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் பணம் ஒதுக்கியிருந்த நிலையில், அதற்கான அனுமதியை இன்னமும் உள்ளூராட்சி அமைச்சு வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மு-4)

## தனியார் பஸ்...

மோட்டார் சைக்கிள் மற்றும் தனியாருக்கு சொந்தமான பேருந்து ஒன்றும் மோதியதில் இரு இளைஞர்கள் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுஇரவு 9.20 மணியளவில் நுணாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் நுணாவில் பகுதியைச் சேர்ந்த, கந்தையா மோகன்ராஜ் (வயது 30), யோகராஜா சதீஸ்குமார் (வயது 26) என்பவர்களே விபத்துக்குள்ளாகி மரணித்துள்ளனர்.

இவ் விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-89,9)

## யாழ்.பொம்மைவெளி...

யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதியில் வீதிக்கு அருகில் உரப்பை ஒன்றில் கட்டப்பட்ட நிலையில் வீசப்பட்டிருந்த பழைய ரி56 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட பெருமளவு வெடிபொருட்கள் நேற்று விசேட அதிரடிப்படையால் மீட்கப்பட்டுள்ளன.

அதில் பழைய ரி56 ரக துப்பாக்கிகள் 10, துப்பாக்கி ரவைகள், கைக்குண்டுகள், வாள்கள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

நேற்றுக் காலை அப்பகுதியால் சென்ற பொதுமக்கள், அநாம்தேய முறையில் பொதி ஒன்று இருப்பதைக் கண்டு யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அந்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அப பகுதிக்கு சென்று சோதனை மேற்கொண்டனர். அப்போது அந்த பொதியில் இருந்து பழைய ஏ.கே. ரி 56 - 2 ரக துப்பாக்கிகள் 10, 6 எம்.எம். மோட்டார் குண்டுகள், ரி.56 ரவைகள், உட்பட கைக்குண்டுகள், வாள்கள், மகசின் 4, மற்றும் கைக்குண்டு 2 உள்ளிட்ட ஆயுதங்கள் காணப்பட்டன.

அவற்றை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளதுடன், ஆயுதங்கள் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாக தெரிவித்துள்ளனர். (மு-9-60)


50-வது ஆண்டை நோக்கி வீறு நடைபோடும் நிறுவனத்தில் புதிய கல்வி ஆண்டில் தரம் 06 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் உண்டு.
- அதிபர்
The Express Institute
Irupalai, Kopay.
(C-506)


## தமிழ்த் தேசியத் தலை...

பின்னர் வீதியால் சென்றவர்களுக்கு இனிப்பு கொடுத்து மகிழ்ந்தனர். இந்த உணர்ச்சிகரமான நிகழ்வுகளால் அங்கிருந்தோர் கண்ணீரில் மூழ்கினார்கள்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தமிழீழ வடிவிலான கேக் வடிவமைக்கப்பட்டு கொண்டாடப்பட்டது. பல்கலை வளாகம் முழுவதும் தலைவர் பிரபாகரனது புகைப்பட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு, பிறந்தநாள் நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன.

இந்த நிகழ்வுகள் அனைத்தையும் புலனாய்வு பிரிவினர் கண்காணித்து கொண்டிருந்தனர். எனினும் மக்கள் அச்சப்படாமல் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

இதே போன்று கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, உட்பட பல இடங்களில் தலைவர் பிரபாகரனது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் இடம்பெற்றுள்ளது. புலம்பெயர் நாடுகளில் இலண்டன், கனடா, அமெரிக்கா, இந்தியா, ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க் என பெரும்பாலான நாடுகளில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டுள்ளன. (மு-4-60)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்.
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-443)
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



வீடு விற்பனைக்கு
பருத்தித்துறை நகரில், பிரதான வீதிக்கு அண்மையாக பூதராயர் ஒழுங்கையில் நல்ல கல்வீடு விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0778688305
(C-492)


## யாழ். கோப்பாயில்...

யாழ்.கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர் நாள் நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுத்தவர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் செயற்பட்டு உள்ளனர்.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை ஆக்கிரமித்து இராணுவத்தினர் பாரிய படை முகாம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

இந்நிலையில் இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் தின நிகழ்வு ஏற்பாடுகளை துயிலும் இல்லத்தை இராணுவத்தினர் ஆக்கிரமித்து உள்ளமையால், துயிலும் இல்லத்தில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்திற்கு அப்பால் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கபட்டது.

அதன் போது அவற்றை குழப்பும் விதமாக பவள் கவசவாகனம் , இராணுவ பேருந்துக்களில் சிவில் உடையில் பல இராணுவத்தினர் அழைத்து வரப்பட்டு அவ்விடத்தில் குவிக்கப்பட்டனர்.

அவ்விடத்தில் சிவில் உடையில் குவிக்கப்பட்ட இராணுவத்தினர் நிகழ்வு ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தவர்களை தமது கையடக்க தொலைபேசிகள் மற்றும் புகைப்பட கருவிகள் ஊடாக ஒளிப்படங்கள் எடுத்துக்கொண்டனர்.

அதனால் அவ்விடத்தில் சிறிது பதற்றம் ஏற்பட்டது. இருந்த போதிலும் இராணுவத்தினர் ஒளிப்படங்களை எடுத்ததை பொருட்படுத்தாத ஏற்பாட்டாளர்கள் தொடர்ந்து நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுத்தனர். (மு)


Business English / Spoken English
For those working, migrating & others.
Time: 03 days a week 8.30 am to12.30 pm
Duration: 01 month : Starting Dec. 1st
Total: learning hrs: 40 Fees - Rs : 2,000/
நேரடித்தேர்வுக்கு Nov 29 & 30ஆம் திகதிகளில் மு.ப 9 முதல் 12 வரை சமுகமளிக்கவும்.
விபரங்களுக்கு இயக்குநர் NTI, 077 650 5580
Northern Technical Institute (NTI) 2nd floor, YMCA Building, 107, 2/1 Kandy Rd, Jaffna.
(1454)



டிசம்பர் 1,2,3 ஆம் திகதிகளில்
O/L மாணவர்களுக்கான கருத்தரங்கு
கட்டணம் 500/-
வரலாறு | ஆசிரியர்: R.S. சந்திரன்
TIME: 8.00 AM - 1.00 PM
➢ வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
➢ எதிர்பார்க்கை வினாக்களும், பாடக்குறிப்புக்களும் வழங்கப்படும்.
றோயல் அக்கடமி அரசடி வீதி, யாழ்ப்பாணம் 0776649134



எமது GMI நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய எமது பிரதி நிறுவனங்களுக்கு 40 பேர்களுக்கு வேலைவாய்ப்பு இதோ!
◆ அலுவலகர் ◆ மேற்பார்வையாளர்
◆ உதவி முகாமையாளர் ◆ முகாமையாளர்
◆ உதவி உத்தியோகத்தர்
● பயிற்சியின் போது15000/= - 18000/= வரை பயிற்சியின் பின்னர் அவர்களின் திறமைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.
● 18 தொடக்கம் 30 வரையான வயதினருக்கு பயிற்சியளிக்கப்படும்.
● இலவச மருத்துவம், தங்குமிட வசதிகள் அளிக்கப்படும்.
● பயிற்சியின் போது ஆங்கில மற்றும் சிங்கள மொழிகள் பயிற்றுவிக்கப்படும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
0766399954, 0779994807
(1488)


## வடக்...

கில் 5 உள்ளூராட்சி சபைகள் மாத்திரம்இடம்பெற்றுள்ளன.

வடக்கில் சாவகச்சேரி நகர சபைக்கு மாத்திரம், இன்று வேட்புமனுக்கோரும் அறிவிப்பு வெளியிடப்படும்.

கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர் நகரசபை, ஏறாவூர் பற்று பிரதேச சபை, கோறளைப்பற்று பிரதேச சபை, மண்முனை பிரதேச சபை ஆகியவற்றுக்கு மாத்திரம், தேர்தல்களை நடத்தக் கூடிய நிலை உள்ளது.

அதேவேளை, 40 உள்ளூராட்சி சபைகள் தொடர்பான, வர்த்தமானியில் திருத்தம் செய்யும் அறிவித்தல் இன்று வெளியிடப்பட்டாலும் கூட, வடக்கில் இரண்டு சபைகளுக்கு மாத்திரம் தேர்தலை நடத்தப்பட முடியும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேச சபைகளுக்கான தேர்தல்களையே நடத்த முடியும் என்றும் அறிவிக்கப்படவுள்ளது. (மு)

## சட்ட...

பட்டுள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட நபர்களுடன் பெண் ஒருவரும் இருந்ததாகவும் பொலிஸாரைக் கண்டதும் அவர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.(மு)

# மரண அறிவித்தல்



## திருமதி சங்கரப்பிள்ளை பகவதியம்மா

(தங்கோடை, சின்னாலடி, காரைநகர்)

காரைநகர் அறுகம்புலம் தங்கோடையை பிறப்பிடமாகவும், சின்னாலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை பகவதியம்மா (பாட்டி) நேற்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் ஆறுமுகம் சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னாச்சி (கல்கமுவ ஸ்ரோர்ஸ்) தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கதிராசி (பண்டியர்) தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா (உரிமையாளர் கல்கமுவ ஸ்ரோர்ஸ்), சின்னத்துரை, நமசிவாயம், பொன்னம்பலம், பரமநாதர் மற்றும் பராசக்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், பொன்னம்பலம், இலட்சுமிப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (RTA நொச்சிகாமம்) மற்றும் நவமலர் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பரந்தாமன் (உள்நாட்டு இறைவரி திணைக்களம், யாழ்ப்பாணம்), ஸ்ரீராமன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.11.2017) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அன்னாரின் சின்னாலடி இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சின்னாலடி, தகவல் : குடும்பத்தினர்
காரைநகர். 0212211480, 0770711206 (பரந்தாமன்), 0213737756


எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்

■ நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
■ இளநரையை போக்கவும்
■ பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
■ கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
■ ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
■ ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்
(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
100 வீதம் இயற்கையானது
எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.
ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571
(1394)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.